# புதிய நிலா

*Puthiya Nila*

நாளைய சிற்பிகளுக்கான இன்றைய உளி.







## கட்டடத் திறப்பு விழா சிறப்பு மலர்.

250/=

பிரதம இதழாசிரியர்
கு.அஜித்குமார்.

வெளியீடு.
புதிய நிலா வெளியீட்டுக்கழகம்.

2507

# புதிய நிலா

(நாளைய சிற்பிகளிற்கான இன்றைய உளி )

## கட்டடத்திறப்பு விழா சிறப்பு மலர்



**பிரதம இதழாசிரியர்**

*கு. அஜித்குமார்*

புதிய நிலா வெளியீட்டுக்கழகம்
சாமியன் அரசடி,
கரவெட்டி.

10655

| | |
|---|---|
| தலைப்பு | : புதிய நிலா கட்டடத்திறப்பு விழா சிறப்பு மலர் |
| வெளியீடும் திகதி | : 20.09.2009 |
| வெளியிடும் இடம் | : கழக மண்டபம் |
| வெளியீடு | : புதிய நிலா வெளியீட்டுக்கழகம் |
| நெறியாழ்கை | : கு.அஜித்குமார் |
| பக்கம் | : 68 + Viii + |
| அட்டைப்படம் | : நா விஜயகுமார் |
| அச்சுப்பதிப்பு | : கக்ஸ்ரொன் பிறிண்டேர்ஸ்.<br>பருத்தித்துறை வீதி, 3ம் கட்டை,<br>கல்வியங்காடு. |

# புதிய நிலா


**மலர்க்குழு**

நாளைய சிற்பிகளிற்கான இன்றைய உளி

**பிரதம இதழாசிரியர்**

*கு. அஜித்குமார்*

**இணை ஆசிரியர்**

கு. மைதிலி

**அங்கத்தவர்கள்**

சி. ஜெறாட்றூபன்
உ. மாதுளன்
ச. சர்வன்
சா. பிரேம்நாத்
இ. கபில்ராஜ்
ம. மேனன்
சா.பிறேம்நாத்
கே.தினேஸ்

**ஆலோசனை ஆசிரியர்**

*வேல் நந்தகுமார்* (B.A.Hons,Dip in Edu)



**தொடர்புகளுக்கு:**

"கு. அஜித்குமார்"
புதிய நிலா வெளியீட்டுக்கழகம்
சாமியன் அரசடி,
கரவெட்டி.
தொலைபேசி: 0772336213
Email-Puthijanila@yahoo.com

# நிலாவின் உள்ளே

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| மழையும் மனிதர்களும் | 01 |
| ஆளுமை | 02 |
| குரங்கின் சுவர்ப்புக்கொள்கை | 05 |
| இந்துக்களது வாழ்வியலில் சோதிடக்கலை பெறும் முக்கியத்துவம் | 06 |
| போலி | 08 |
| உண்மை வெல்லும் | 09 |
| அதோ பறக்கிறது அந்த விமானம் தான் | 11 |
| உயர்ந்த நட்பு | 14 |
| அண்ணனின் அன்பு... | 15 |
| நிலவே நீ வருக | 19 |
| நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்..... | 21 |
| பூந்தோட்டம் | 23 |
| நான் விரும்பும் இலக்கிய கதா பாத்திரம் "கர்ணன்" | 24 |
| விடியலை நோக்கி..... | 26 |
| கால்வயிற்றுக் கஞ்சிக்காய்..... | 27 |
| வெற்றியின் தடயங்களை பதிப்பதற்காக.... | 30 |
| அன்பு ஒன்றே போதும்.... | 31 |
| மறவாத அனுபவம் | 33 |
| இலக்கியங்கள் காட்டும் உயர் வாழ்க்கைப் பண்புகள் | 34 |
| நிலவு | 37 |
| உலக போக்குகளில் ஏற்படும் மாற்றங்களை கருத்திற் கொண்டு கல்விப்புலத்திலும் சீர் திருத்தங்களை கொண்டு வரவேண்டும் | 38 |
| கலைந்து போன கனவுகள் | 43 |
| துடிப்பு | 44 |
| சூரியோதயம் | 46 |
| நாளையும் | 47 |
| சமூகத்தில் ஆசிரியர்களின் பங்கு | 48 |
| கல்லூரித் தாய் | 50 |
| உண்மையின் உயர்வு | 51 |
| உயிரளித்தவன் | 53 |
| ஐந்திலக்கணம் ஓர் பார்வை | 57 |
| இணையத் தொடர்பு முறைகள் | 59 |
| பெரியாழ்வாருக்குள் ஊற்றெடுக்கும் தாய்மை | 61 |
| சரிந்த பொருளாதாரம் மீண்டும் கட்டியெழுப்பப்படுமா...? | 65 |
| மகான்களின் மகத்தான வார்த்தைகள் | 68 |

## ஆசிரியரின் உள்ளத்தில் இருந்து.......

வாசக நெஞ்சங்களே!

வணக்கம்.

இன்றுவரை எமது வெளியீட்டு கழகமானது தனக்கென ஓர் தனி இடம் இல்லாதபோது மாணவர்களுக்கு தன்னாலான சேவைகளை வழங்கி யாழ் மண்ணில் மாணவர் மத்தியில் ஓர் தனி இடத்தைப் பெற்று மிளிர்வது யாவரும் அறிந்ததே. இதற்கு உங்கள் ஆதரவும் அரவணைப்புமே காரணமாகும். மாணவர் மத்தியில் கல்வியை மேம்படுத்துவதற்கென பல்வேறு சேவைகளை ஆற்றிவரும் எமது புதியநிலா வெளியீட்டுக்கழகமானது இன்று தனது சேவையை மேலும் விஸ்தரிப்பதற்கும் நெறிப்படுத்துவதற்குமென கரவை மண்ணில் தனக்கென ஓர் கட்டடத்தை திறக்கின்றது. இக்கட்டிடத் திறப்புவிழாவுக்கான சிறப்பு மலராக இம்மலர் மலர்வதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இம்மலர் மலர்வதற்கு பல்வேறு வகையிலும் ஆதரவு வழங்கிய கல்வி மேலாண்மையாளர்கள், விளம்பர அனுசரணையாளர்கள், ஆலொசனை யாளர்கள், நண்பர்கள், படைப்பாளிகள் அனைவருக்கும் எமது வெளியீட்டுக் கழகம் நன்றியைத் தெரிவிக்கின்றது. இனிவரும் காலங்களிலும் எமது சேவைக்கு இவர்கள் அனைவரினதும் ஆதரவு தொடரும் என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

எமது சேவையை யாழ் மண்ணோடு மட்டும் நின்றுவிடாது இலங்கை மாணவர்கள் அனைவருக்கும் வழங்குவதற்கு நாம் ஆர்வத்தோடுள்ளோம். இதற்காக சகல துறை சார்ந்தவர்களினதும் ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

*(நோக்கத்தில் உறுதி செயலில் நம்பிக்கை)*

**பிரதம இதழாசிரியர்**
கு. அஜித்குமார்

# இலங்கை கலை இலக்கிய சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்திலே அண்மைக்காலமாக பல சஞ்சிகைகள் கலை இலக்கியத்தினை வளப்படுத்துவதில் முனைப்புக் காட்டி வருவதனையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அத்தகையதொரு பணியினை மேற்கொள்ள எழுந்த புதிய நிலா சஞ்சிகைக்கென்று புதிய நிலையமொன்று திறப்பு விழாக் காண்கின்ற இந்நாளில் மாணவர்களிடையே இருக்கும் கலை இலக்கிய ஆர்வத்தினை வளர்ப்பதிலும், கலைஞர்களின் ஆக்கங்களிற்கு களம் அமைத்தும் வருகின்ற கலை இலக்கியப் பணியினை சிறப்பாக ஆற்றுகின்ற புதிய நிலா சஞ்சிகை மேலும் வளர்ச்சி பெற்று வளம் சேர்க்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பண்டிதர் சைவப்புலவர் பொன்.சுகந்தன் B.A.
(சைவப்பிரகாச அமைச்சர்)

# கரவையில் உதித்த புதியநிலா.......

"கட்டறுத்து பொலிதளத்து கன்னிமார்கள்
கைக்கிளிக்குத் தமிழூட்டும் கரவையூர்"

என அறிஞர்களால் போற்றப்படும் புகழ்பூத்த கரவையம்பதியிலே எங்கள் புதிய நிலா உதயமாகியதையிட்டு நாம் மனம் மகிழ்கின்றோம்.

16.01.2008ஆம் ஆண்டு சிந்தனையில் உருவானதே இப்புதிய நிலா வெளியீட்டுக்கழகமாகும். கரவைக்கு கலைஞர்கன் பலரை உருவாக்கவென எழுந்த இப் புதிய நிலா வெளியீட்டுக்கழகம் ஆள்பலம், பணபலம் எதுவுமற்ற நிலையில் இரண்டு செயற்பாட்டாளர்களோடு மட்டுமே செயற்படத் தொடங்கியது. புதியநிலா கரவையில் உதித்தாலும் யாழ்மண் முழுவதும் தன்னுடைய சேவையை வழங்கும் நோக்கோடு செயற்பட தொடங்கியது. புதியநிலா வெளியீட்டுக் கழக மானது முதன்முதலில் தன்னுடைய கன்னி முயற்சியாக மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் நோக்கோடு மாதம் ஒரு சஞ்சிகை என பொது அறிவுச் சஞ்சிகையை அச்சிட்டு மாணவர் மத்தியில் சேர்த்து பொதுஅறிவு பரீட்சைகளை யும் நடாத்தி அதில் தேர்ச்சியின் அடிப்படையில் ஒன்பது மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கியும் வந்தது. இதன்மூலம் புதியநிலா உருவாகிய சிறிய காலத்திலேயே மாணவர் மத்தியில் நன்மதிப்பை பெற்றது. இதுவரை எமது கழகம் 5 பொது அறிவு சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து எமது கழகம் மாணவர்களிடத்தில் கணித பாடத்தில் காணப்படும் குறைபாடுகளை கண்டு அமரர் சிவகாமி செந்தியா ஞாபகார்த்த வெற்றித் தொடர் என பெயரிட்டு மாதம் ஒரு பரீட்சை என தரம் 9 தொடக்கம் 11 வரையான மாணவர் களுக்கு யாழ் மாவட்டம் பூராகவும் கணிதபாட பரீட்சையை நடாத்தி வந்தது. இப்பரீட்சையில் பெறுபேறுகள் திருத்தி கொடுக்கப்பட்டு திறமை சித்தி பெற்றவர்கள் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதற்காக நாம் ஓர் வளமான ஆசிரியர் குழாமை தெரிவு செய்து அவர்கள் மூலமாகவே இப்பணியை நடாத்தி வருகின்றோம். அந்த வகையில் எமது பரீட்சை குழாமில் செயற்படுகின்ற கௌரவத்திற்குரிய ஆசிரியர்களாக செல்வி கு. மைதிலி (ஆசிரியர் வட மத்திய மகளிர் கல்லூரி) செல்வி சு. யாழினி (ஆசிரியர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) திரு. திருமுருகன் (ஆசிரியர் யா/விக்கினேஸ்வரா கல்லூரி) திரு. ஜெயகாந்தன் (ஆசிரியர் கலாசாலை) போன்றோர் குறிப்பிட்டு கூறக்கூடியவர்கள். இம்முயற்சியை பல கலாசாலைகளும், மாணவர்களும் ஆர்வத்தோடு வரவேற்றதையிட்டு நாம் அகமகிழ்ந்தோம்.

தொடர்ந்து நாம் எமது பணியை இத்தோடு விட்டுவிடாமல் மாணவர்களிடம் இலைமறை காயாக மறைந்து கிடக்கும் கலைத்திறன்களை வெளிக் கொணரும் நோக்கில் "கலை இலக்கிய சமூக அறிவியல் சஞ்சிகை" என பெயரிட்டு மூன்று மாதத்துக்கு ஒரு இதழ் என தொடர்ச்சியாக வெளியிட்டோம். இதுவரையும் மூன்று இதழ்களை தொடர்ந்து வெளியிட்டுள்ளோம். இதற்கு மாணவர்கள் ஆசிரியர்கள்

மட்டுமன்றி பல்வேறு கலைத்துறை சாந்தவா்களும் நல்ல வரவேற்பை வழங்கினா். எம்முடன் இணைந்த துடிப்பான இளைஞா்களின் துடிக்கும் கரங்களின் துடிப்பான செயல்கள் எங்களை துடிதுடிப்போடு செயற்பட வைத்தது. அந்த வகையில் இதுவரை காலமும் எமது நிறவனம் தகிக்கட்டிடம் இல்லாமல் இயங்கிவந்தது இப்பொழுது புதிய நிலாவுக்கென புதிய கட்டிடம் ஒன்றை கண்டுபிடித்து அக்கட்டடத்தை திறந்து வைக்கின்றது.

காலங்கள் நகர. எங்கள் வளர்ச்சிப் பாதையும் பல்வேறு பரிணாமங் களில் வளர்த்ததற்கு எம் வரலாறு சாட்சியாகும். இனிவரும் காலங்களில் நிறுவனமாக உயப்படுத்தப்பட்ட எமது புதியநிலா மேலும் பல புதிய பரிணாமங்களை தனது வளர்ச்சிப் பாதைக்குள் புகுத்தும் என்பதை உறுதி கூறுகின்றோம். நாங்கள் இதுவரை கூறியது எங்கள் புதியநிலாவின் இரண்டு வருட வளர்ச்சிக் காலமே என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு வருடத்தில் பல பரிணாமவிகளை கண்ட புதிய நிலா இனிவரும் காலத்தில் இன்னும் பல புதிய சேவைகளை மாணவர்களுக்கு வழங்கி மாணவர் மத்தியில் இருளை அகற்றி கல்வி ஒளியை வீசச் செய்யும் என்பதில் ஐயமில்லை. இனிவரும் காலங்களில் எமது சேவை அகில இலங்கை ரீதியில் வழங்குவதற்கும் நாம் தயாராகவுள்ளோம். இதற்கு இறைவனின் துணை வேண்டி நிற்கின்றோம்.

"போற்றுபவர்கள் போற்றட்டும் தூற்றுபவர்கள் தூற்றட்டும்
எங்கள் மனம் மயங்காது, எங்கள் பணி தொடரும்"

தொகுப்பு
மைதிலி
இணையாசிரியர்

# மழையும் மனிதர்களும்

பூமிக்கு வரட்சி நிவாரணம்
வழங்கியே வந்தாய் - ஆனால்
ஓயாமல் குதித்து “குழப்படி செய்கிறாய்”

வெள்ளை நிவாரணம் வழங்க வேண்டிய
நிர்ப்பந்தம் தற்போது....

கறுப்புக் கோட்டு, தொப்பி, குடை - என
உன் வருகைக்கு எதிர்பார்ப்புக்கள்
நீயோ யாரையும் பொருட்படுத்துவதாயில்லை!!!

ஏழைகளின் மணிமகுட மாய்
“சொப்பின் பைகள்” - அவர்களது
வீட்டுப்பாத்திரங்கள் ஒழுக்குகள் வழியிலாவது
இன்று நிறைந்தது.

மழை நேர நாயாய் மனையிலே தங்கத் துடித்தது மனம்
இறுதியில் ஜெயித்தது எஜமானின் உத்தரவுதான்”
கர்ண குண்டலமாய் மழைக்கவசமும்
வெண் கொற்றக்குடையும் எதற்கு?
என்னை நனைத்து விடு!!!!

கண்கள் நிரம்பி காட்டாற்று வெள்ளம் போல
கரை புரண்டு ஓடுகிறது கடல் மீது கொண்ட காதலால்
கப்பல் விட்டு மகிழும் “சின்ன சிறுவர்கள்
கடும் குளிருக்கு காவலாய் கம்பளி இல்லையா?
நிர்வாணமாய் போனேன் நான்!

தலை வணங்காத தலைகளிற்கு
சிரச் சேதமும் மரண தண்டனையும்
மின் கம்பிகள் மரணப் பொறியாய் பொங்கின!

மாளிகை மழையை ரசிக்கிறது
குடிசையை வெள்ளம் ருசிக்கின்றது
வருணனோடு கைகோர்த்த வாயுபகவானே!
போதும் நிறுத்தும் உம் மரண விளையாட்டை!!

(24.11.08 காலப்பகுதியில் கொட்டிய மழையில் நனைந்து கொண்டு வடித்த கவிதை)

**க. சுதர்சன்,**
தும்பளை

# ஆளுமை

ஆளுமை என்றால் என்னவென்று நோக்குவோமாயின் ஆரம்ப காலங்களில் கம்பீரமான உடற் தோற்றம். உயரிய அந்தஸ்து, கவர்ச்சியின் அழகு, தனிப்பட்ட திறமைகள், பிறர் உடனான தொடர்பாடல் திறன் போன்றவற்றைச் கொண்டே ஒருவருடைய ஆளுமையை மதிப்பிட்டனர். ஆனால் தற்போது அவ்வாறு இல்லை. உளவியலாளர் "ஒல்பேட்" என்பவர் "ஒருவன் தனக்கே உரிய முறையில் சூழலுக்கு ஏற்றவாறு பொருத்தப்பாடு அடைகின்றான் என்பதனை தீர்மானிக்கும் அவனது உள பௌதீக அமைப்பின் தற்போதைய ஒழுங்கமைப்பே ஆளுமையாகும்" என்று குறிப்பிடுகின்றார்.

எனவே ஒருவாறு நடத்தையின் முழுமையான அமைப்பே ஆளுமையாகும் என்றால் பொய்யாகாது. இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் போது உடற்ப் பண்புகள், உளப்பண்புகள், மனப் போக்குகள், சமூகமயமாக்கும் பண்புகள் போன்றவற்றின் ஒரு கலவையே ஆளுமையாகும்.

**ஆளுமையின் பிரிவுகள்**

1) மேற் பரப்புப் பண்புக் கூறுகள்
2) அக ஆளமைப் பண்புக் கூறுகள்

**ஆளுமையின் சிறப்புப் பண்புகள்:**

* இருவரது ஆளுமைகள் ஒரே மாதிரி இருப்பதில்லை
* ஆளுமையானது தொடர்ச்சியாக வளர்ச்சி அடைவதாகும்
* சூழலுக்கேற்ப மாறக் கூடியது
* ஆளுமை என்பது ஒவ்வொருவருக்கும் உரியதனிச் சிறப்பாகும்
* சில சமயங்களில் ஒருமைப்பாடும் சில சமயங்களில் முரண்பாடும் காணப்படும்.

**ஆளுமையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்**

1) பரம்பரை
2) சூழல்

இவ்வாறாக கோட்பாடு ரீதியாக ஆளுமைப் பண்பு தொடர்பான பல உளவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவ்வாறே ஆளுமை

தொடர்பாக உளப்பகுப்பாய்வுக் கோட்பாடும் சில தரவுகளை முன் வைக்கின்றன. நனவிலிமன செயற்பாடுகளின் செல்வாக்கினை மையமாக வைத்தே ஆளுமை விருத்தியடைகின்றது. என உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டாளர்கள் கருத்துரைக்கின்றனர். அதாவது நனவிலி மனதில் அடக்கியுள்ள ஆசைகள், மனவெழுச்சிகள் போன்றவை ஒருவனது சிந்தனை, செயல் என்பனவற்றின் அடிப்படையில் உருவாகும் அவனது ஆளுமையைத் தீர்மானிக்கின்றன என கோட்பாட்டை உருவாக்கிய "பிராய்ட்" குறிப்பிடுகின்றார்.

* இன்ப நிலையை அடிப்படையாகக் கொண்டது - இட் (ID)
* யதார்த்தக் கோட்பாட்டை உடையது - ஈகோ (Ego)
* அறநெறி மேன் நிலையை கொண்டது -சூப்பர் ஈகோ (Super Ego)

மேற்கூறிய மன நிலைகளும் சம நிலையாக பேணப்படுதலே சிறந்த ஆளுமையாகும். அதாவது சமநிலை ஆளுமை உடையவர் என்பது பொருளாகின்றது.

சமநிலை ஆளுமை உடைய ஒருவனது அறிவு (சிந்தனை) மனவெழுச்சி (உணர்வு) செயல் ஆகிய மூன்றும் பெருமளவு சமனான வளர்ச்சி பெற்றிருக்கும் என்பது அறிஞர்களது கருத்தாகும்.

**ஆளுமையின் வகைகள்**

01. அகமுகி - புறமுகி (காள் யுங்)

உள மருத்துவரான காள்யுங் என்பவர் பிறருடன் ஏற்படுத்தும் தொடர்புகளின் அடிப்படையில் மனிதர்களை புறமுகி, அகமுகி என இரு வகைப்படுத்தினர்.

| புறமுகியின் பண்புகள் | அகமுகியின் பண்புகள் |
|---|---|
| * கலகலப்பாக பேசுபவர் | * கதைப்பது குறைவாக இருக்கும் |
| * கவலைப்படாமல் இருப்பவர் | * கவலைப்பட்டுக் கொண்டிருப்பர் |
| * கூச்சப்படாமல் காணப்படுபவர் | * கூச்சசுபாவமுடையவராக இருப்பர் |
| * சிநேகமுடன் இருப்பர் | * ஒத்துப் போகும் தன்மை அற்றிருப்பார் |
| * குழுவாக இயங்க விரும்புவர் | * தனிமையை அதிகம் நாடுவர் |
| * உடமைகளைப் பொதுவாக வைத்திருப்பவர் | * உடைமைகளில் கவனமாக இருப்பார் |

02. உடல்சார் வகைகள் (கிறச்மர் )

உடல் அமைப்புகளுக்கு ஏற்ப ஆளுமையை கிறச்மர் 3 வகைகளாக பிரித்து விளக்குகிறார். அதாவது

* கட்டையாகவும் சற்று பருத்த உடலமைப்பையும் உடையவர்கள் புறமுகிகள் எனவும் பிறரால் விரும்பப்படுவர் எனவும் குறிப்பிடுகின்றனர்.

* பருத்த தசையும் அளவான தசையும் கொண்ட உடலமைப்பை உடையவர்கள் அதிக சக்தியும் எதிர்க்கும் இயல்பும், தன்னம்பிக்கையும் உடையோர்.

* உயரமான ஒல்லியானோர் இவர்கள் பிறரில் பிழை காண்போர்.

03. சுபாவ வகைகள் (ஸ் பாஸ்கள்)

ஒருவரின் உடற்கட்டும், சுபாவத்திற்கும் இடையில் இயல்பைக் கொண்டு ஆட்களை ஆறு தொகுதிகளுக்குள் வகுத்துள்ளனர்.

கொள்கை வகை ஆளுமை (அறிஞர்கள், விஞ்ஞானிகள்)
பொருளாதார வகை ஆளுமை (வியாபாரிகள்)
அழகுணர்ச்சி வகை ஆளுமை (கவிஞர்கள்)
சமூக வகை ஆளுமை (பொதுத் தொண்டு)
அரசியல் வகை ஆளுமை (ஆதிக்கக் குழு)
சமய வகை ஆளுமை (துறவறச் சந்நியாசி)

**த. டயானா**
வவுனியா,
கல்வியியற்க் கல்லூரி.

## குரங்கின் கூர்ப்புக் கொள்கை

கூர்ப்புக் கொள்கையை
வகுத்த டார்வின்
குரங்காம் எங்களைக்
கேவலப் படுத்தினார்.

எங்களில் இருந்து தான்
எப்போதோ ஒரு நாள்
மனிதன் தோன்றினானாம்
பொய்யிலும் பொய் இது
சுத்தப் பொய் இது.

கூர்ப்புக் கொள்கையைக்
கூறிய பின்னால்
எந்தக் குரங்கு
மனிதனாய் ஆனது.

எங்கள் இனத்து இன்றைய வளர்ச்சி
கண்டு பிடித்ததோர் புதிய உண்மை
மனிதனில் இருந்து தான்
குரங்குகள் தோன்றின.

இதற்கு ஆதாரம்
நிறைய உண்டு
இன்னும் சில நாளில்
மனிதர்கள் பலர்பேர்
முற்று முழுதாய்க்
குரங்காகப் போகின்றனர்.

இப்பொழுதே சிலர்
அந்த நிலையை
எட்டிப் பிடித்தே
விட்டார்களே!

**வி. கீர்த்தனா**
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
(துன்னாலை)

# இந்துக்களது வாழ்வியலில் சோதிடகலை பெறும் முக்கியத்துவம்...

இந்துப் பண்பாட்டில் மக்களது வாழ்வு வளம்பெற துணை புரிவதற்கு இன்று வரை சாஸ்திரங்களை நோக்கும் மரபு காணப்படுகின்றன. இந்து அறிவியல் வளர்ச்சிக்கு இம்மரபு பெரிதும் உதவி' உள்ளது. "ஸர்வஸ்ய யோசனம் சாஸ்திரம்" அனைத்திற்கும் சாஸ்திரமே கண்" என்று கூறப்படுகிறது.

ஒருவர் பிறக்கும் போது விண்ணில் உள்ள நட்சத்திரத்தில் அல்லது கோள்கள் இருக்கும் நிலையை அடிப்படையாகக் கொண்டு அவர் தம் ஆயள், இயல்பு, வாழ்க்கைமுறை ஆகியன கணிப்பது சோதிடமாகும். அதாவது ஒருவர் பிறந்த நேரத்தில் இடத்தில் இருந்து நோக்கும் போது வான்வெளியில் காணப்படுவ தாகிய சூரியன், சந்திரன் முதலிய கோள்கள் சரியான நிலைகள் அமைக்கப்பட்டதுமே சோதிட சாஸ்திரம் கூறும். "ஜனனக்குறிப்பு"எனப்படும். சோதிட சாஸ்திரம் ஒளியை போன்றது ஆகும். இயற்கை சக்திகளை தெய்வங்களாக வழிபடும் மரபு வேத காலம் தொட்டு இருந்து வருகின்றது. சூரியன் இந்து சமய வழிபாட்டில் சிறப்பிடம் பெறுகின்றான். ஒளியின் தெய்வமாக நாளின் அளவை கணிப்பவனாகவும் இருளைப் போக்குபவனாகவும் விளங்குகின்றான். விஷ்ணுவின் மூலடி சூரியனுடைய போக்குடன் தொடர்புபடுகிறது. இதிகாச, புராணங்களில் சூரிய, சந்திரன்கள் முக்கியம் பெறுகின்றன. ஆலயங்களில் நவக்கிரக வழிபாடு முக்கியம் பெறுகிறது. சூரியன் சனி எனும் வழிபாட்டுக்கென தனி பரிவார ஆலயங்கள் உள்ளன. புரட்டாதி சனி விரதம் இந்துக்களிடையே சிறப்பு பெறுகிறது. ஏனைய கிரகங்களை விட சனிக் கிரகம் முதன்மையானதாகும். சூரியன், சனி, வியாழன் ஆகியவற்றுக்கு "பகவான்" எனும் அடைமொழி உள்ளது. சிவனும் உருத்திரனும் செய்யும் தொழிலை சனியின் மூலம் செய்விப்பதாக மரபு உள்ளது. எனவேதான் சனிக்கிரகம் முக்கியம் பெறு கின்றது.

சாந்திகளில் கிரகங்களுக்குரிய சமித்து அவிப்பொருட்கள், தானியங்கள், வஸ்திரம் ஆகியன குறிக்கப்பட்டன. இவை நவக்கிரக வழிபாட்டின் விரிந்த நிலை இறைவன் ஒருவனது விதியை நிர்ணயித்து சனியின் மூலம் நிறைவேற்றுகின்றன. என்ற ஐதீகமும் உள்ளது. 71/2 சனிக்காலம் மக்களது வாழ்வில் நன்குணரப்படு கிறது. வாழ்நாளில் ஒருவனது சாதகத்தில் சனி இடம்பெறுவதைக் கொண்டு மங்கு சனி, பொங்கு சனி, மரணச்சனி என பலன்கள் கூறப்படுகின்றன. அட்டமத்து சனி என்ற நம்பிக்கையும் குறிப்பிடத்தக்கது.

ஒரு குழந்தை பிறந்ததும் அக்குழந்தையின் வாழ்வில் நடக்கப் போவதை அறிய ஜனனக் குறிப்பு அல்லது ஜாதகம் எதிர்பார்க்கப்படும் பண்பாடு காணப்படு கிறது. ஒரு குழந்தை பிறக்கும் நேரம் சூரியோதயம் முதல் எத்தனையாவது நாழிகை என கணித்து அந்த நேரத்தில் சூரியன் எந்த இராசியில் நின்றாரோ அந்த ராசி குழந்தை பிறந்த ராசி ஆகும். இந்த இராசியை இலக்கினம் என அழைப்பர். இக்குழந்தையின் சாதகத்தினை துணை கொண்டு அக்குழந்தையின் எதிர்காலம் ஆயுள், தாய், தந்தை, குடும்ப விபரம் என்பன பற்றி எல்லாம் கூறுவதால் சாதகம் எனப்படுகிறது. இது பஞ்சாங்க துணை கொண்டே குறிக்கப்படுகிறது.

குழந்தையை தொட்டிலில் படுத்தும் நிகழ்ச்சி கூட சோதிடம் பார்க்கப்படுவது சோதிடக்கலையின் முதன்மையை எடுத்து காட்டுகிறது. இதை

நல்ல நேரம் பார்த்தே செய்வர். பிள்ளை பிறந்து 10, 12, 16 ஆகிய நாட்களில் நல்ல தினத்தில் தொட்டிலில் இடுவர்.

குழந்தைக்கு பெயரிடும் போது சோதிடமே முதன்மை பெறுகிறது. நல்ல நாள் பார்த்து குழந்தையின் நட்சத்திரத்துக்குரிய எழுத்தை முதலாக கொண்டே பண்பாடு நிலவுகிறது. மேலும் இந்துக்களிடையே திருமண பொருத்தம் பார்ப்பதிலும் சோதிடம் முதன்மையானது மணமக்கள் இருவரும் சோதிட பொருத்தம் பார்ப்பது இந்து பண்பாட்டில் முதன்மையானது. கலை, தினம், ஸ்திரி, ஜோதி, இராசி, வசியம், தேவதை, இரச்சு போன்ற 10 பொருத்தங்கள் உண்டு.

வீடு கட்டுவதை எடுத்து கொண்டால் மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்று வீடு. இதில் சோதிடம் முதன்மை பெறுகிறது. கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க நல்ல நாள் பார்த்தல் "மனையடி சாஸ்திரம்" பார்த்தல் எனும் சோதிட பண்பாடு வீடு கட்டுவதில் முக்கியம் பெறுகிறது. இதைவிட குடிபுகும்போது நல்ல நாள் எனும்போது பரணியுடன் கூடிய ஞாயிறு சித்திரையுடன் கூடிய திங்கள், உத்தரத்துடன் கூடிய செவ்வாய், அவிட்டத்துடன் கூடிய புதன், ரேவதியுடன் சனி, முக்கிய காலத்தில் "மனை கோல"த்துக்கு ஏற்றன ஆகும்.

அடுத்து கிணறு வெட்டுவதில் சோதிடம் முதன்மை பெறுகிறது. வைகாசி, சித்திரை, ஆனியில் கிணறு வெட்ட தொடங்கினால் நல்ல நீர் கிடைக்கும். ஆடியும், ஆவணியும் மத்திமமாக அமையும். சோதி, மூலம், பரணி, ஓணம் ஆகிய 4 நட்சத்திரமும் கிணறுவெட்ட பொருந்தாதவை ஆகம்.

விரதங்களிலும் விழாக்களிலும் சோதிட கலை முதன்மையானது மாதம், திகதி, வாரம் நட்சத்திரம் என்பன அடிப்படையாக கொண்டு விரதமும், விழாக்களும் நடைபெறுகின்றன. கந்தசஷ்டி, அமாவாசை, நாக சதுர்த்தி, பௌர்ணமி, விஜயதசமி, வைகுண்ட ஏகாதசி போன்றன திதிகளை முன்னிட்டு நடைபெறுவதாகும். தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், மார்கழி திருவாதிரை என்பன நட்சத்திரம் முதலாக கொண்ட விரத நாட்களாகும்.

முடிவாக இந்துக்கள் வாழ்வியலில் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள அனைத்து காரியங்களிலும் சோதிடகலை முதன்மை பெறுவதுடன் வீட்டைக் கட்டிப் பார், கிணற்றை வெட்டிப்பார், கலியாணத்தை செய்துபார் எனும் முதுமொழிகள் உண்டு. காரணம் இவை 3 பாரிய பாரச்சுமையான வேலைகள் ஆகும். இம்மூன்றிலும் சோதிடக் கலை உள்ளே நுழைந்திருப்பதை மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இதைவிட இந்து சமய, பண்பாட்டு நிலைகளில் சோதிடக்கலை உடலும் உயிரும் போன்றது ஆகும்.

**உசாத்துணை நூல்கள்**


1) நல்லைக்குமரன் மலர் - 2006 "யாழ்ப்பாண பண்பாட்டில் சோதிடம்" கலாநிதி மா. வேதநாதன் ப87

2) இந்து நெறி "இந்து அறிவியல் வளர்ச்சியில் சோதிடம்" பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் ப79


(நீண்ட நாட்களாக இம்மலருக்கு கட்டுரை எழுத வேண்டும் எனும் பேரவா இருந்தது. அந்த வகையில் இதை எழுதுகின்றேன்.)


**கு. கோபிராஜ்**
B.A (Hons) Hin Spe
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

# போலி



உலகம் ஒரு நாடக மேடை
உருவங்கள் போலித் தோற்றம்

நேற்றொரு முகம்
இன்றொரு முகம்
நாளை வேறொரு முகம்

எத்தனை நாட்களிற்கு
அரங்கேறும் இந்த நடிப்பு

மனிதா
ஆறறிவு படைத்த நீ
இவ்வாறிருப்பது நியாயமா?

சிந்தித்து பார்
நன்மை செய்யப் பிறந்த நீ
தீமையாவது செய்யாதிரு

புதுயுகம் படைக்கும் சக்தி
உன்னிடம் இருப்பது உண்மை.

**த. மேரி டயனா**
வ. விபுலானந்தாக் கல்லூரி
வவுனியா.

# உண்மை வெல்லும்

முன்னொரு காலத்திலே அமராவதி என்னும் நகரிலே வணிகச் சிறுவர் இருவர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இருவரும் ஆருயிர் தோழர்கள். அவர்களுள் ஒருவன் பெயர் பாலன். மற்றவன் குமரன். பாலன் தன்னைப்போல பிறரையும் நேசிப்பவன். அடக்கமும் பொறுமையும் உடையவன். உண்மை பேசுபவன், பிறருக்கு உதவுபவன். குமரன் பிறருக்குத் துன்பம் செய்வதையும், பொய் கூறுவதையும் விளையாட்டாகவே கருதுவான். தன்னலத்திற்காக எத்தகைய கொடுமையையும் தயங்காது செய்பவன்.

இவர்கள் இருவரும் தங்கள் குலவியற்கைப்படி வேறுநாடு சென்று பெரும் செல்வம் தேடவிரும்பினர். குறிப்பிட்ட நல்ல நாளிலே பெற்றோரை வணங்கி ஆசி பெற்றுப் புறப்பட்டனர். குன்றும் குழியும் நடந்து வனங்களையும் கடந்து ஒரு ஊரை அடைந்தார்கள். அவ்வூரில் இருக்கும் நாளிலே பகல் நேரம் பிரிந்து தனித்தனியே பொருள்தேடச் செல்வர். மாலையானதும் ஓரிடத்தில் சந்தித்து இரவுப் பொழுதைக் கழிப்பார்கள்.

ஒரு நாள் பாலனுக்கு எதிர்பாராதவிதமாக பெரும் புதையல் கிடைத்தது. அன்று பாலன் மிக மகிழ்வோடு தன் நண்பனுக்கு தான் பெற்ற புதையலைக் காட்டினான். தயாள மனப்பான்மையோடு குமரனுக்கு பாதிப்பொருள் தருவதாகக் கூறினான். ஆனால் குமரனோ பேராசை கொண்டான். கபட எண்ணம் கொண்ட அவன் சூழ்ச்சியால் அப்பொருள் முழுவதையும் தானே கவர்ந்து கொள்ள எண்ணினான். அவன் பாலனைப் பார்த்து "பாலா, இப்பொருள் முழுவதையும் நாம் எடுத்து செல்வது நல்லதன்று, இதனைப் பிறர் கண்டார்கள் என்றால் இவ்வளவு பொருளையும் எவ்வாறு பெற்றார்கள் என்று எண்ணி சந்தேகிப்பார்கள். எம்மைத் திருடர் எனவும் எண்ணுவார்கள். அதனால் இதில் சிறிய பங்கை எடுத்துக் கொண்டு மீதியை இந்த மரத்தடியில் புதைத்து விட்டுச் செல்வோம். பிறகு ஒரு நாளில் இருவரும் வந்து எடுத்துக் கொள்வோம்." என்று கூறினான். குமரனது கபட எண்ணத்தை உணராத பாலன் அதற்கு இசைந்தான். இருவரும் சிறிது பொருளை எடுத்து கொண்டு மீதியைப் புதைத்து வைத்தனர். பின்னர் வீடுகளை அடைந்தனர். சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் பாலன் குமரனை அழைத்துக் கொண்டு தாம் வைத்த பொருளை எடுப்பதற்காக சென்றார்கள். மரத்தடியை அடைந்து புதைத்த இடத்தைத் தோண்டிப்பார்த்த போது அங்கே புதையலைக் காணவில்லை. பாலன் திகைத்தான். கவலை கொண்டான். அப்போது குமரன் கோபத்தோடு 'பாலா, என்னை அறியாமல் நீயே பொருள் முழுவதையும் கவர்ந்து கொண்டாய்' என்று குற்றம் கூறினான். அதனால் மனம் புண்பட்ட பாலன் 'குமரா நான் இங்கே வரவுமில்லை, பொருளைத் திருடவுமில்லை' என்று வருந்திக்கூறினான். இங்கு என்ன நிகழ்ந்ததென்று நானறியேன் என்று கூறினான். இவ்வாறு இருவரும் கலக்கப்பட்டு இறுதியில் ஊர்ப்பஞ்சாயத்திடம் சென்று முறையிட்டனர். அவர்கள் வழக்கை விசாரிக்க நாள் குறித்தனர்.

குறித்த நாள் வந்தது. பஞ்சாயத்தாரும் நகரத்துப் பெரியோர்களும் பொது மக்களும் கூடினர். பாலன் ஒரு புறமும், குமரன் மறு புறமும் நின்றார்கள். பஞ்சாயத்துத் தலைவர் பாலனைப் பார்த்து 'சாட்சிகள் உண்டா? என்று வினாவினார். அவன் 'பிரபுவே எனக்கு கடவுளைத் தவிர வேறு சாட்சியில்லை'

என்றான். குமரனோ எனக்கு இந்த மரமே சாட்சி. அதனைக் கேளுங்கள் உண்மை கூறும் என்றான். கூடியிருந்தோர் அதிசயம் கொண்டனர். தலைவர் மரத்தைப் பார்த்து "மரமே இவ்விடத்தில் புதைக்கப்பட்ட பொருளைக் கவர்ந்தவர் யார்?" என்று கேட்டார். உடனே "பாலனே கவர்ந்தான்" என்று குரலொன்று ஒலித்தது. தலைவர் சிறிது சிந்தித்து மரத்திலேறி ஆராயும் படி பாலனைக் கூறினார். பாலன் மரத்திலேறி பார்த்தபோது ஒரு பெரிய பொந்து இருப்பதைக் கண்டான். அதில் ஏதாவது மாயம் இருக்க முடியும் என்பதை உணர்ந்தான். உடனே பொந்தில் தீ மூட்டினான். தீ பற்றி எரிந்தது.

என்ன ஆச்சரியம்! அப்பொந்திலிருந்து கிழவன் ஒருவன் நெருப்புச் சுட்ட காயங்களோடு வெளியே வந்து நிலத்திலே விழுந்தான். எல்லோரும் ஆ...ஆ.... என அலறினர். பஞ்சாயத்தார் கிழவனிடம் சென்று யாது நிகழ்ந்தது? என கேட்டார். "பிரபுக்களே குமரன் என் மகன், அவன் இங்கிருந்த பொருள் முழுவதையும் தானே கவர்ந்து கொண்டு பாலனைக் குற்றவாளியாக்க விரும்பினான். நான் கூறிய புத்தி மதிகளை அவன் கேட்கவில்லை. என்னைக் கட்டாயப்படுத்தி இம்மரப் பொந்தில் இருக்கச் செய்தான். பாலனே பொருள் முழுவதையும் திருடினான் என்று கூறும்படியும் வற்புறுத்தினான் என்று கூறி கிழவன் இறந்து விட்டான்.

பஞ்சாயத்தார் குமரனைப் பார்த்தனர். அவன் நடுங்கிக் கொண்டு உண்மையை ஒப்புக் கொண்டான். அவர்கள் அவனுக்கு தக்க தண்டனை விதித்தனர்.

**"தன்வினை தன்னைச் சுடும்"**

உசாத்துணை - "பஞ்ச தந்திரம்"

**T. சியாமினி**
நாடகமும் அரங்கியலும்
2ம் வருடம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## அதோ பறக்கிறது அந்த விமானம் தான்!

வித்தகக் கவிஞன் கவி வடித்தால்
விறகுக் கட்டைக் கூட
வீணையாகி விடும் - ஆனால்
நான் வீணை வாசிக்க நினைத்தால்
அது விறகுக் கட்டையாகிறது - எதனால்
அதோ பறக்கும் அந்த விமானம் தான்...

பெட்டி இழைத்தும் பாய் பின்னல்
வேலை செய்தும் பள்ளிப் பருவத்தில்
பாடல்கள் பல சொன்ன - "பாக்கியம்"
என் அம்மாவையும்
சுட்டித் தனங்கள் அடக்கி - எம்
சுமைகளை சுமந்த அன்பு
அப்பாவையும் காவு கொண்டது - யார்?
அதோ பறக்கும் அந்த விமானம் தான்...

கண்களின் அணைக்கட்டு உடைத்து
கங்கை வரை இன்று - நீர்
பாய்கிறது எதனால்?
எண்டைக்குத்தான் எமக்கு விடிவு
வரும் என்று - சிலர்
ஏங்குவதும் எதனால்?
அதோ பறக்கும் அந்த விமானம் தான்...

கட்டிலறை இருக்கும் வரை
கல்லறை வரமறுக்கும் காமுகர்கள்
மத்தியில் உற்றமே சொந்தம் - என
ஒற்றுமையாய் நாம் இருந்தோம்
இன்று உருக்குலைந்து போனதும்
எதனால்?
அதோ பறக்கும் அந்த விமானம் தான்..

கறுத்தக் கண்ணாடி காதளவு கன்ன மீசை
கால் பெருத்த நீளக் காற்சட்டை
கையில் கான்ட்போன் என்று
அலைபவர் மத்தியில்
பழைய சோறும்
பாலில்லா தேங்காய் துருவலுடன்
பல காலம் ஓட்டிய என் குடும்பத்தில்
இடிமேல் அடிவிழ யார் காரணம்
அதோ பறக்கும் அந்த விமானம் தான்...

வறுமை எனும் ஆளுங்கட்சியும்
யுத்தம் எனும் எதிர்கட்சியும்
என் குடும்பத்தில்
மாநாடு நடத்துகின்ற வேளை
"கிபிர்" எனும் வெளிநாட்டு தூதுவர்
அடிக்கடி சுகம் விசாரிப்பார்...!

மூட்டைப் பூச்சிகள்
இரத்த தானம் கேட்பது போல்
எங்கள் உறவுகளின்
இரத்தங்களை தானம் செய்வது
யார்? யார்? யார்?
அதோ பறக்கிறது அந்த விமானம் தான்...

அல்லலுற்று அகதிகளாய்
சொந்த மண்ணைவிட்டு - வந்து
எமக்கு வெந்த புண்ணில் வேல்
பாய்வது போல்
நொந்த எமக்கு மேலும்
நோவு இதற்கெல்லாம் யார் காரணம்?
அதோ பறக்கிறது அந்த விமானம் தான்...

வாடைக் காற்று வீசும்
வசந்த காலத்தில் சோலைப்
பனைகள் தலையசைத்தும் - மாலை
வேளையில் பாலர் பலர்கூடி
வட்டக்குளத்துக்கு சென்று - வரால்
மீன் பிடித்தும் சுட்டித்தனங்கள் செய்யும்
நிகழ்வுகள் இனி எப்ப?
சொந்த ஊருக்கு செல்லலாம்
சொந்தங்களை எல்லாம் பாக்கலாம் - என
கனவு காண வைத்தது யார்?
அதோ பறக்கிறது அந்த விமானம் தான்...

விடைக்குள் கேள்விகளாய்
குடைக்குள் மழையாய்
சாலைக்குள் சோலையாய்
வாடைக்குள் சூறாவளியாய் - ஒரு
கிறுக்கல் சித்திரமாய் - நான்
ஆனதும் எதனால்
அதோ பறக்கும் அந்த விமானம் தான்...

பெண்ணியம் என்றும்
கண்ணியம் என்றும்
புண்ணியம் என்றும் கவிபாடும் கவிஞர்களே!
என் நிலைபற்றி பாடுங்கள்
உண்மை உறங்குவதில்லை - உலகே
விழித்துவிடு - நீங்கள் உற்பத்தி செய்து
எங்களிலா பரீட்சிப்பது நீங்கள்
போர் விமானம் எனும் பரீட்சார்த்திகள்
நாங்கள் மூன்றாம் நிலை நாடு
எனும் பரீட்சை நிலையங்கள்
இந்நிலை என்று மாறும் எனும்
ஏக்கத்துடன் காத்திருக்கும்
இந்நிலை மாறும் என்று
காத்திருக்கும் எனக்கு
வயது தான் கூடுது ஒழிய
வழமை மாறுதில்லை
மாற்றம் என்பது மண்டியிட்டு
பெறுவதில்லை
மார் தட்டி பெறுவது....

**சி. குகன்**
**ஆசிரியர்**
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்,
கோப்பாய்.

(2008ம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி முத்தமிழ் விழா கவிதைப் போட்டியில் 1ம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.)

# உயர்ந்த நட்பு

இனிய காலை வேளை இதமாக விடிந்தது. அந்த ஊரின் நடுவே அமைந்திருந்த பிரபல கல்லூரி. மகளிரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். பாடசாலை முதலாம் தவணை ஆரம்பித்து ஒரு கிழமையே முடிவடைந்த நிலையில் தரம் 4ல் கல்வி பயிலும் மாணவி ஒருத்தி அன்றுதான் அப் பாடசாலைக்கு வருகை தந்திருந்தாள். அதாவது வேறு பாடசாலையிலிருந்து மாற்ற லாகி இப்பாடசாலைக்கு கல்வி பயில வந்துள்ளாள். அச்சத்தோடும், இனம் புரியா வெட்கத்தோடும் வகுப்பறைக்குள் நுழைந்த சங்கீதாவை அவ் வகுப்பறைக்குள் கூடியிருந்த ஏனைய மாணவிகள் இவளை ஒரு வேடிக்கைப் பொருளாகப் பார்க்கத் தொடங்கினர். இதனால் பெரும் சங்கடத்திற்குள்ளானாள். சங்கீதா எப்படி உள்ளே போய் உட்காருவது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் புன்முறுவல் தவழ்ந்த படி ஒரு மாணவி அவளை நோக்கி வந்து "ஹலோ என் பெயர் பிரியங்கா, உங்கட பெயர் என்ன? என்று கனிவாகக் கேட்டாள். சங்கீதாவுக்கோ பெரிய சந்தோஷம். "என் பெயர் சங்கீதா" என்று கொஞ்சம் பயம் நீங்கியவளாய் சொன்னாள். பயப்பட வேண்டாம். நான் உங்களுக்கு எல்லா உதவியும் செய்து தருவேன், எனக்கு பக்கத்தில் ஒரு கதிரை இருக்கு அதில வந்து இருங்கோ" என்று அவளை அன்பாக வரவேற்றாள். பிரியங்கா அன்றிலிருந்து இருவரும் இணைபிரியா நண்பர்களாகி விட்டனர். மற்ற மாணவிகளே ஆச்சரியப்படும் அளவுக்கு ஒன்றாகக் கூடித்திரிந்தனர்.

ஒரு நாள் தரம் 4, 5 மாணவிகளைக் கூட்டிக் கொண்டு ஆசிரியர் சுற்றுலாவிற்குச் சென்றனர். பல்வேறு விளையாட்டுகளில் மாணவியர் அனைவரும் தம்மையே மறந்து குதூகலமாய் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சங்கீதாவும், பிரியங் காவும் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தனர். பக்கத்திலே சிறு நதி ஓடுவதைக் கண்டு எல்லோரும் துள்ளிக் குதித்து மகிழ்ந்தனர். சுட்டிப் பெண்ணான சங்கீதா காலை நனைத்து விளையாடிக் கொண்டிருக்கையில் தவறிக் கீழே விழுந்து விட்டாள். எதிர்பாராமல் விழுந்த சங்கீதாவை ஆற்றுநீர் இழுத்துச் செல்வதைக் கண்ட பிரியங்கா உடனேயே ஓடிச்சென்று அவளைக் காப்பாற்றப் போராடினாள். இதற்குள் ஆசிரியர் இருவர் உடனேயே பாய்ந்து இருவரையும் காப்பாற்றினர். தன் உயிர்த்தோழியைக் காப்பாற்ற முன்வந்த பிரியங்காவை எல்லோருமே பாராட்டினர். சங்கீதா பிரியங்காவை அணைத்துக் கொண்டு அழுதாள். "என் உயிரைக் காப்பாற்ற உன் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்தாய், உண்மையிலே நீ என் தெய்வம் தான்" என்று தோழிக்கு நன்றி கூறினாள் சங்கீதா. பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதே, என்னை நதி இழுத்துக்கொண்டு போயிருந்தால் நீயும் என்னைக் காப்பாற்ற முன் வந்திருப்பாய். அதைத் தான் நானும் செய்தேன். என்று புன்முறுவலுடன் கூறிமுடித்தாள். பிரியங்கா "ஆபத்தில் உதவுபவன் தான் நண்பன்" என்று அந்த ஊர் மக்களே பிரியங்காவைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இப்படியாக நாட்கள் வாரங்களாகி, வருடங்களாகிய நிலையில் "சுனாமி அலைகளிலே மூழ்கி பிரியங்காவின் பெற்றோர் பலியாகிவிட, 7 வயது தம்பி பிரவீனுடன் பிரியங்கா அனாதையாக நின்றாள். பெற்றோரின் பேரிழப்பை தாங்க முடியாமல் அழுதழுது சோர்ந்து "எமக்கு இனி யார் துணையும் இல்லை"என்று தவிக்கையில் தன் பெற்றோருடன் வந்திறங்கிய சங்கீதா தன் ஆருயிர் தோழியையும் அவளது தம்பியையும் நேசக்கரம் நீட்டி தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். சிறு வயதிலே இவர்களின் உயர்ந்த நட்பினைக் கண்டு எல்லோரும் வியந்து பாராட்டினார்கள்.

**யோ. கரோலின் அகஸ்ரீனா**
நெடுந்தீவு.

கட்டடத் திறப்பு விழா மலர் சிறக்க வாழ்த்துவோர்.

**க.செ.கைலாசப்பிள்ளை**
**அன்சன்ஸ்**
*மருந்துப்பொருள் விற்பனை நிலையம்*
76.பெரிய கடை.
யாழ்ப்பாணம்
T.P:-021-2222912

**ஷரவணா ஆடையகம்**

In front of Bus Stand,
Chankanai

**TRACTOR SPARES**
importers and Dealers In Tractor Spare Parts
Specilist in Massy Ferguson Engineers
7, Kannathiddy Road
Jaffna
T.P:-021-2225055

**றஞ்சித் மெக்கானிக் & சேவீஸ் சென்ரர்**
Authorised Service Dealer for
David Pieris Motor Company Ltd
Jaffna Road, Manippay

**சண்முகம் அன்சன்ஸ்**
கண்டி வீதி
சாவகச்சேரி

**OXFORD TRADERS**
Dealers in Electrical Goods, Electric water Pumps & Fitting, Stationeries & Fancy Goods
T.P:-021-2222862
077-6122454
Anaicoddai Junction
Anaicoddai

**எவறெஸ்ற் வோச் வேக்ஸ்**


86, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**சரவணன் கட்டிட உபகரணங்கள் விற்பனையாளர்கள்**
மானிப்பாய் வீதி
ஆனைக்கோட்டை சந்தி
T.P:-0773960345

**THARAN MOTORS**
Dealers In Motor Spare Parts & Accessories
inclusive Body Decorative
Jaffna Road ,
Manipay.
T.P:-0773564361

**THERESA FURNITURE**
137, Kasthuriar Road,
Jaffna
T.P:-021 222 7941

VEL MURUGAN
Rise Mill Stores

An Animals Food center
416, K.K.S. Road,
Jaffna.
T.P: 021-2225468
077-3604940

Transport Service
Tholpuram East,
Chulipuram East.
T.P: 0774965851

SRI LANKA BOOK DEPOT
Printers, Publishers
Book Sellers & Stationers
234, K.K.S. Road,
Jaffna.
Phone: 021 2222573

ரமணன்
கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம்
525, 528, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777-176068
021-222 9296

P.J. பர்னாண்டோ
பல் கட்டுபவர் ~ கண் பரிசோதனை
கிளை:
131, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இந்திரன்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
101, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

A.M. J Capital
General Merchants
Distributors of Fishing Gear & NGK
Plug, Yamaha Out Board Motors &
Yamaha, Suzuki Genuine Spare Parts
No. 131G, K.K.S. Road, Jaffna.

T.A தபோதரன்
THABOTHARAN
Aluminum, Glass & Photo Framing
இல. 57, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.
தொ.பே. 021-2240047

LUXMY FANCY
No. 271, K.K.S. Road,
Jaffna.

ராஜலக்ஷ்மி
கட்டிடப் பொருள் விற்பனையகம்
Rajaluxmy Building Material
Sales Centre
139, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

A.J.M
கருவாட்டு வாணிபம்
151, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விஷாலி ரேடர்ஸ்

ரீவி
டிவிடி
டிஷ் ரீவி

Tel: 0776151019

No. 356, K.K.S. Road,
Jaffna.

New power world
SPORTS CENTRE

பலாலி றோட்.
திருநெல்வேலி.

S.P. Balamukunthan
T.P: 021 222 7013
077 3867458

SAYI MAKERS

அழகு சாதனப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்

சாயி மேக்கர்ஸ்

741/4,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

BOBISON ELECTRONICS
Sales & Service Centre

இல. 80, கே.கே.எஸ். றோட்,
சுன்னாகம்

போபிசன் எலெக்ரோனிக்ஸ்

No. 80, K.K.S. Road,
Chunnakam.

New Sun Tailaring

N.S.T

No. 4, Jummapalli Road,
Jaffna.

ரஹ்மான் ஹோட்டல்
Rahman Hotel
226, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

PRINCE HOTEL
No. 514, Hospital Road,
Jaffna.

மதுரா மாளிகை
Mathuraa Malekai
கால்நடை தீன்
வாணிபம்

Pho: 021 222 7505

221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

SOLAX
OPTICAL

No. 516,
Hospital Road,
Jaffna.

சொலெக்ஸ்
மூக்குக் கண்ணாடியகம்
T.P: 021 2227631

JEEVAN MEDICAL
ஜீவன் மருந்தகம்

சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

## ரஜீவன் வைண்டிங் அன் மோட்டோர்ஸ்

66,68,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்

## PHONE SHOP

*Table Phone, Hand Phone, Kit Card*

K.K.S.Road,
Chunnakam.

T.P:-0777577675

## ஜெய ஜெயராம் செரமிக்ஸ்

*Wholesale & Retail Dealeres*
*in All Ceramic Wares*

T.P:-021 222 7120

408, Hospital Road,
Jaffna

## IMAGE ART CENTRUM

*Dealers in Fabric, PaintsGlass Paints*
*Oil Colours, Water Colours*
*Etc*

T.P:-0212225173

K.K.S.Road,
Innuvil.

## ஆஷா தையலகம்



பிரதான வீதி,
பருத்தித்துறை

## செம்பருத்தி தேனீர்ச்சாலை

தும்பளை வீதி
பருத்தித்துறை

## விக்னேஸ்வரா பலசரக்கு விற்பனை நிலையம்

பிரதான வீதி,
பருத்தித்துறை

T.P:-0779635447

## ஈஸ்வரன் ரேடர்
## Eswaran Trader

தும்பளை வீதி
பருத்தித்துறை

## அம்பாள் ஸ்ரோர்ஸ்
## பல்பொருள் வாணிபம்

பிரதான வீதி,
பருத்தித்துறை

T.P:-021 226 3103

## King Parrots

*Authorished Delear Sony, Siedles*

No:1J Stanly Road,
Jaffna

T.P:-0776173121

# அண்ணனின் அன்பு...

**ஏதோ** ஒரு யோசனையில் ஆழ்ந்தவாறு யன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள் மதுரா. வழக்கத்துக்கு மாறாக அவள் வாழ்ந்த அடுக்குமாடித் தொடர் அந்த மாலை நேரத்தில் அமைதியாக இருந்தது. யன்னலுக்கு வெளியே கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீல வண்ணமாகக் காட்சியளித்தது கடல். "இதென்ன இந்தக் கடல் அலைகளுக்கு ஓய்வே கிடையாதா?" ஓயாது சப்தமிட்டுக் கொண்டிருக்கின்றன. என அலைகளைப் பார்த்துக்கொண்டிருந்த மதுரா தனக்குள் சிரித்துக் கொண்டாள். அலைகளுக்கு மட்டுமா ஓய்வில்லை எனது மனதுக்கும் ஓய்வு இல்லையே. ஓயாது மௌனமாக ஓலமிடும் எண்ண அலைகளை என்னால் துரத்த முடியவில்லையே.

அமைதியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்த மதுரா ரெலிபோன் மணி அடித்ததும் சிந்தனை தடைப்பட்டவளாக றிசீவரைத் தூக்கினாள். மறுமுனையில் அவள் அண்ணன் குகன்.

"மதுக்குட்டி எப்படி இருக்கிறாய்? உன்ர குரலைக்கேட்டு கனகாலம் அதுதான் எடுத்தனான்" என மென்மையான குரலில் கூறினான் குகன்.

"அம்மா வெளியே போயிட்டா, பிறகு எடுங்கோ நான் வேலைக்கு நிற்கிறனான் கதைக்கிறன்" என அவசர அவசரமாக பதில் கூறிவிட்டு றிசீவரை வைத்தாள் மதுரா.

குகனுடன் கதைக்க விருப்பம் இருந்தாலும் சகோதர பாசம் ஒரு பக்கம் இழுத்தாலும் ஆழப்பதிந்திருக்கும் அந்தச் சம்பவம் அவளை பைத்தியமாக்கியது. உண்மையிலேயே பைத்தியக் காரியாகி அலையவேண்டியவள் இப்படி இருப்பதே உலக அதிசயங்களில் ஒன்றுதான்.

அண்ணன், என் பெற்றோர் என்று பெருமை பேசிக்கொண்டு இருந்தவள் மதுரா. ஊரைவிட்டும், தனது அண்ணனை விட்டும், பரம்பரை வீட்டை விட்டும் தன்னைக் கிளப்ப முடியாது என்ற வைராக்கியத்துடன் வாழ்ந்தவள்.

கிட்டதட்ட எட்டு வருடங்களுக்கு முன் குடும்ப நிலைமையால் வலுக்கட்டாயமாக பிரான்ஸ் நாட்டுக்கு குடியேறினாள். அந்தச் சிறு இடத்து வாழ்க்கை மாதங்கள், வருடங்கள் என்று அவளுடைய வாழ்க்கையில் பல ஆண்டுகளை விழுங்கி விட்டது.

அண்ணன் குரல் கேட்ட இச் சந்தர்ப்பத்தில் ஊரில் ஏற்பட்டிருக்கும் ஆர்வம் யாழ்ப்பாண ஆசையை அவளுக்கு ஏற்படுத்தியது. எங்களுடைய வீடு, எங்களுடைய கோயில், எங்களுடைய சனங்கள், அவர்களோடு வாழ வேண்டும், மனம்விட்டுக் கதைக்க வேண்டும், அண்ணனின் அரவணைப்பு மீண்டும் கிடைக்க வேண்டும் என்ற ஏக்கம் மனதின் ஒரு மூலையில் துளிர்விட ஆரம்பித்திருந்தது.

என்னதான் ஆசை ஒரு பக்கம் இருந்தாலும் மதுராவின் இதயத்தில் ஏற்பட்ட காயம் அவள் ஆசையைப் பின்னிழுத்தது.

ஐயோ! வேண்டாம், என்னால் அந்த வீட்டில் இனி வாழவே முடியாது. என் அண்ணனின் துன்பத்தை கண்கொண்டு பார்க்க முடியாது. அதுமட்டுமா என் குழந்தையும் கூட அநாதை ஆகிவிடுவாள். நான் பைத்தியமாகி விடுவேன்.

நெஞ்சு படபடக்க ஆயிரம் கொடுமைகளை அனுபவித்தவளாக பழைய புத்தகம் நடுவே வைத்திருந்த தனது அண்ணன் குகனின் படத்தைப் பார்த்து விம்மி அழுதாள்.

“என் அண்ணா... அண்ணா...! உன்னைப் பிரிந்த பாவத்தை எந்த ஜென்மத்தில் தீர்ப்பேன் நான்? என்னைப் பாசத்துடன் வளர்த்த அண்ணனின் அன்பை தவறவிடப்பட்ட பாவியடா நான்”

வாய் புலம்ப கண்களிலிருந்து கண்ணீர் தாரை, தாரையாகக் கொட்டியது. கிலுக்கிட்டி கிலுக்கும் சத்தம் கேட்டு வெளியே வந்தவள் தன் குழந்தை ஜெனி விளையாடுவதைக் கண்டாள். தனியே விடப்பட்ட மதுராவின் மனம் பல வருடங்கள் முன்னோக்கிச் சென்றது.

யாழ்ப்பாணத்து அழகிய கிராமங்களில் ஒன்று தான் அவள் பிறந்து வளர்ந்து அண்ணனின் பாசவலையில் சிக்குண்ட கிராமம். மதுராவிற்கு ஒரு வயது இருக்கும். காசநோயினால் பாதிக்கப்பட்டு செத்துவிட்டார் தந்தை. ஏழைக்குடும்பத்தில் பிறந்த மதுராவையும் அண்ணன் குகனையும் வீட்டுப் பணிப்பெண்ணாய் இருந்து வளர்த்து வந்தாள் தாய் சாந்தி. ஓரளவிற்கேனும் அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது அவர்கள் வாழ்க்கை. அண்ணன் குகனிற்கு பத்து வயதிருக்கும். படிக்க பாடசாலைக்கு சென்று விடுவான். சாந்தி தன் குழந்தையை வேலை செய்யும் இடத்திற்கு கூட்டிக்கொண்டுபோய் விளையாடவிட்டுவிட்டு தனது வேலையில் ஈடு படுவாள். குகன் பாடசாலையில் இருந்து வந்ததும் தங்கைய்யை அணைத்துக் கொண்டு வீட்டுக்கு கூட்டிச் செல்வான். இவ்வாறு நிகழும் போது நாட்டில் பிரச்சினை மெதுவாக தலை தூக்கியது. குடும்ப வறுமை காரணமாக ‘அல்சர்’ கூடி இறந்து விட்டாள் தாய் சாந்தியும்.

பெற்றோரை இழந்த இவர்களை ஆதரிக்க யாரும் முன்வராததால் குகன் தனது படிப்பை இடையில் நிறுத்திவிட்டு தங்கையை படிக்கவிடும் நிலை ஏற்பட்டது. எப்படியும் மதுராவை படிப்பித்து வெளிநாடு செல்ல அனுப்ப வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் குகன்.

தாய் சாந்தி வீட்டு வேலை செய்த வீட்டில் தன்னால் இயன்ற வேலையை செய்து காசு சம்பாதித்து தங்கையை வளர்க்க வேண்டும் என துடித்தான். தன்னை தனது தங்கைக்காக அர்ப்பணித்து பல கடின வேலைகளை கூட செய்து படிக்க வைத்தான்.

மதுக்குட்டி ஓடியாடா! ஸ்கூலுக்கு போக நேரமாச்சு தலை இழுத்து விடுறன். சோச்சி சாப்பிடு, ஆ... காட்டு தீத்திவிடுறன் அண்ணன், என பல செல்லக்கதை கூறி ஆசை அருமையாக அன்புடன் வளர்த்து வந்தான் குகன்.

“குகன்...” என்ன இந்த நேரம்? இண்டைக்கு வேலைக்கு பிந்தி வந்தனி என எஜமானி உறுக்கவும், ஐயா தங்கச்சிக்கு காய்ச்சல், அவள் என்னை வெளிக்கிட

விடேல அதுதான்.... இண்டைக்கு மட்டும் மன்னித்துக் கொள்ளுங்கோ என காலில் விழாத குறையாய் கெஞ்சினான்.

இவ்வாறு அன்பாக வளர்த்து வரும் போது நாட்கள், மாதங்கள், வருடங்கள் என கழிந்து சில காலம் ஓடி விட்டது.

"அண்ணா, என்ர ஆசை அண்ணாவெல்லே இதுவரைக்கும் உன் செல்லத் தங்கச்சி கேட்டதெல்லாம் மறுக்காமை வாங்கித் தந்தனியெல்லே, நான் இன்னும் ஒன்று கேட்பன் மாட்டன் எண்ணாம செய்" என குகனின் கையைப் பிடித்து கெஞ்சினாள் மதுரா.

"அதுக்கென்ன கேள்" என எந்தவித யோசனையும் இல்லாமல் பதிலளித்த குகனிற்கு திடுக்கிடும் செய்தி காதில் விழுந்தது. "அண்ணா நான் என்னோட படிக்கிற முரளியை காதலிக்கிறன், அவனைத்தான் செய்வன், இல்லாவிட்டால் நான் உயிருடன் இருக்கமாட்டன் என கூறிவிட்டு வெட்கத்தில் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டாள் மதுரா. அதன் பின் குகன் நடை பிணம் தான்.

முரளியையும் அவன் தாய் தந்தையர் வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டனர். மாமியாரோ சீதனம் கேட்டு தடையாக நிற்கிறாள். இவற்றுக்கிடையில் நின்று திக்கு முக்குப்படும் இவர்களிற்கு வீட்டு முதலாளி ஒரு யோசனை சொன்னாள். அண்ணனுடன் ஒரு தொடர்பும் இல்லாமல் என் மகனுடன் அண்ணனை மறந்து வாழ முடிந்தால் தான் சீதனம் இல்லாமல் ஏற்பன் என பல கட்டளைகளை இட்டாள்.

ஐயோ! என கத்தி பதைபதைத்து என் அண்ணாவை நான் விட்டுப் போக மாட்டன். பிரியமாட்டன், கலியாணம் செய்யாட்டிலும் பரவாய் இல்லை என பல வார்த்தையால் புலம்பி குகனைக் கட்டிபிடித்து அழ அவனும் சேர்ந்து அழுதான்.

இருந்தாலும் வெளிநாட்டிற்கு தன் தங்கையை அனுப்பி அவள் நல்ல சந்தோசமாக இருக்கவேண்டும். தான் வேண்டிக்கொடுக்காத பொருட்களை எல்லாம் அவள் கணவனிடம் பெற்று நலமாக வாழ வேண்டும். என கனவுகளுடன் வளர்த்த குகனுக்கு தன்னைப் பிரிந்தாலும் பரவாயில்லை என் தங்கை கண்கலங்காமல் இருக்க வேண்டும் என விரும்பினான்.

மதுராவின் கண்ணில் இருந்து வடிந்த கண்ணீர்த் துளிகளை துடைத்துவிட்டு "என்ர செல்லமல்லே, மதுக்குட்டி அண்ணா உன்னை இதுவரைக்கும் ஒன்றும் கேட்கவில்லை, இன்று மட்டும் உன் நல்லதற்காக கேட்கிறன், மறுக்காம சொல்" என பாசத் தவிப்போடு அவள் கண்களை நோக்கி கேட்டான் குகன்.

"அண்ணா! நான் சொல்லுறன் கேள்" என அவள் துடிதுடித்து எழுந்து ஆவலுடன் கேட்டாள் மது.

"நீ என்னை மறக்க வேண்டும், என்னுடன் இருக்க கூடாது, முரளியை விரும்பின மாதிரி அவனையே செய்யவேணும். இல்லாவிட்டால் நான் உயிருடன் இருக்கமாட்டன். என்னையும் இழந்துவிடுவாய்" என மூச்சு விடாமல் கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டான்.

இவ்வாறு நாட்கள் மாதங்களாகின. யாற்றையோ கையில காலில விழுந்தோ, இரவு பகல் இன்றியோ வேலை செய்து தன்னால் இயன்ற நகைகள் செய்து போட்டு முரளியிடம் மறக்கமுடியாத, வாழ்வில் இதுவரையும் அனுபவிக்காத பிரிவுத் துன்பத்துடன் தனது தங்கை மதுவை ஒப்படைத்தான். அவளும் "அண்ணா, உன்ர சொல் நான் தட்ட மாட்டன் என் வாழ்க்கை எப்படிப் போனாலும் நான் நீ சொல்வதைக் கேட்கிறன்" என சற்றும் மனமின்றி சொன்னாள்.

அதன் பின் மதுரா நடைப்பிணம் தான்...

பிரான்சிற்கு போன மதுராவிற்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது. இவ்வாறு நாட்கள் கழிந்தன. ரீற்...ரீற்.... என கோன் சத்தம் கேட்டு வெளியே வந்தவள் கணவன் முரளி வழமையான நேரத்துக்கு முன்பே வந்து நிற்பதைக் கண்டாள். கண்ணைத் துடைத்துக்கொண்டு கணவனை நிமிர்ந்து பார்த்தாள் மதுரா.

மனைவியின் கண்ணீரைப் பார்த்த முரளி எந்தநாளும் கவலையுடன் இருப்பதை பார்த்து அன்போடு அரவணைத்து "உன்னுடன் பேச வேண்டும் வா" என அழைத்துச் சென்றான். நான் சொல்வதைக் கேள், உன் அண்ணா, இல்லை இல்லை என் மச்சானை இங்கே கூப்பிட்டு எங்களோட வைத்திருப்பம். அவனையும் வேலைக்குச் சேர்த்து ஒரு திருமணம் செய்து வைப்பம்." என அன்போடு மனம் மாறியவனாய் நடந்து கொண்டான்.

இதனைக் கேட்ட மதுராவிற்கு என்றும் இல்லா சந்தோசம், புது உலகமே கிடைத்துவிட்டது போல இருந்தது. சற்றும் தாமதமின்றி "இன்றைக்குத்தான் என்ர முரளியை பிடித்திருக்கு" என கூறி ஜெனிக்குட்டி உங்கட மாமா வரப்போறார்... என முத்தமிட்டு அணைத்துக்கொண்டே கூறினாள். சரி நான் ஊரிற்கு போன் பண்ணுறன் என்று எழுந்தான் முரளி.

அவளும் இன்றைக்கு நல்ல புரியாணி சமைத்து சாப்பிட்டு கோயிலுக்கு போவம் என கூறியபடியே குசினிக்குள் நுளைந்தாள் மதுரா.

**மு. ஜெகதாரணி**
ஆரம்பக் கல்வி, 1ம் வருடம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

# நிலவே நீ வருக



புதுமைக் கவி படைக்க
அழைத்ததும் உன்னை
பின்வந்த கவிப்பேரரசும், வைரமுத்துவு
அழைத்ததுவும் உன்னை
காளை நான் கவி பாட
அழைப்பதுவும் உன்னையே.

காதல் கொண்டவன் காதலியை
களிப்படைய வைக்க
கவிபாட வைப்பதுவும் நீயே
காதலில் தோற்றவள்
கல்லறையை மறந்து
காலத்தை வெல்ல
காயத்திற்கு மருந்து தடவுவதும் நீயே.

கனவில் வாழ்பவன்
கவிஞன் ஆக கற்பனையில்
காலத்தை வென்று
கரைசேர வார்த்தைகளை
அணிவகுக்கச் செய்வதுவும் நீயே.

சோகங்களைப் புறந்தள்ளி
கற்பனையில் கனவு வளர்க்க
உன் வெள்ளைப் போர்வையை
என் மீது போர்த்தி
என்னை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும்
என் இனிய நிலவே
தூர நின்று துன்பம் தராது
என் அருகே வா!!

ஆழ்ந்த சிந்தனையில் உன்னை கற்பனையில்
கட்டி அணைத்தபோது திடுக்குற்றேன்
நீ! என்னருகில்
உலகே என் கையில் என்றெண்ணியவனாக
உன்னை அணைத்தேன்.
நீ அதிர்ந்து சிதைந்து விட்டாய்
பின்தான் உணர்ந்தேன் தண்ணீரில்

உன் விம்பம் என்று.

தண்ணீரில் முகம் பார்க்கும்
தண்ணிய நிலவே
உன்னில் என்னைக் காண
என்னருகில் நீ வருவதெப்போது.

நிலவே உன்னைத் தொட்டது
விஞ்ஞானம்
உன் நிஜத்தை தொட்டது
என் ஞானம்
நிலவே உன்னிடம் ஒரு கேள்வி?
பெண்களின் வதனமே
உன் முகத்தில் கறையைக் கண்டேன்
அதுதான் பெண்களில் பூசப்பட்ட
அடிமைக்கறையோ?

நிலவே உன்னில் என்னைக்
கண்டநாள்
என் இனியவளில் உன்னைக் காண்கிறேன்
அமைதியான அந்திப் பொழுதில்
உன்னை மட்டும் ஆராதித்தவன்
என் அன்புக்குரியவளையும் ஆராதிக்கிறேன்
அன்று நீ இருந்தாய் அவள் இல்லை
இன்று அவள் இருக்கிறாள்
நீ இல்லை
நீ வருவாய் என்ற நம்பிக்கையில்
காத்திருக்கின்றேன் நிலவே நீ வருக!!!

**ஜெயானந்தரூபன்**
மன்னார்.

# நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்...

"இன்னா செய்தாரை ஒறுத்தல்
அவர் நாண நன்னயம் செய்திடல் வேண்டும்"

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கமைய தீமை ஒருவர் செய்வார் ஆயின் அந்த தீமை செய்பவர் வெட்கி தலைகுனியும் படி அவருக்கு நாம் நன்மையை செய்திடல் வேண்டும் என்று கூறப்படுகிறது. அந்த நன்மையை நாம் உடனே செய்துவிடல் வேண்டும். ஒரு நன்மையை நாம் ஒருவருக்கு செய்யவேண்டும் என்று நினைத்து காலத்தை கடத்தக் கூடாது. நாளை செய்வோம் என்று இருக்க கூடாது அந்த நன்மையை உடனே செய்து விடல் வேண்டும்.

நன்மைகள் செய்வது பற்றி பல்வேறு இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றது. திருக்குறள் நன்மைக்கே முதலிடம் வழங்குகிறது. ஒருவருக்கு செய்யும் ஒவ்வொரு விடயமும் நன்மையாக அமைய வேண்டும். ஒரு காரியத்தை ஒருவருக்கு நாம் செய்யும் போது அக்காரியம் அந்த மனிதரின் மனதை நோகடிக்காத நன்மையாக இருக்க வேண்டும். அக்காரியம் நன்மையை அவருக்கு வழங்குவதாக அமைய வேண்டும். நன்மைகள் இன்றி மனிதன் இல்லை. அதே போல் தீமைகள் இன்றி மனிதன் இல்லை. தீமைகள் செய்ய என்று நினைக்க கூடாது. தீமைகளை விடுத்து நன்மையே செய்ய வேண்டும். அந்த நன்மையை உடன் செய்ய வேண்டும்.

இராமாயணத்தில் நன்மை செய்வதற்கு பல உதாரணங்கள் கூறலாம். இராமனுக்கு அரசாட்சிப் பொறுப்பைக் கொடுக்கும் போது கைகேயி இராமனைப் பார்த்து காடு செல்லும் படி கூறும் போது இராமன் தனது சிறிய தாயாருக்கு நன்மையே செய்ய வேண்டும். அதனை நான் கடத்தாது உடனே செய்ய வேண்டும் என நினைத்து உடனே காடு செல்கின்றான். இது இராமன் சிறிய தாயாருக்கு நன்மை செய்வதை எடுத்துக் காட்டுகின்றது. பரதன் காடு சென்று தனது அண்ணன் ஆன இராமனின் பாதணிகளை எடுத்து வந்து சிம்மாசனத்தில் வைப்பதும் பரதன் இராமனுக்கு உடன் செய்யும் நன்மையை எடுத்துக் காட்டுகின்றது. எனவே நாம் நன்மை செய்வது என்று நினைத்தால் அதனை உடன் செய்ய வேண்டும்.

மகாபாரதத்தில் நன்மை செய்வது பற்றி கூறப்படுகின்றது. கர்ணன் துரியோ தனனின் நண்பனாக இருந்து அவனுக்கு எவ்வாறு நன்மை செய்கிறான் என்பதை நாம் அறியலாம். இலக்கியங்களில் கூட நன்மை செய்வது பற்றி எடுத்து விளக்கப் படுவதை காணலாம். பாஞ்சாலிக்கு துகில் உரியும் போது பாஞ்சாலி "கண்ணா..." என்று அழும்போது கண்ணன் உடனே அவளுக்கு நன்மை செய்து அதைக் கட்டுப் படுத்துகின்றான். எனவே கண்ணன் பின்னர் பாஞ்சாலிக்கு நன்மை செய்யலாம் என்று நினைத்துவிட்டிருந்தால் பாஞ்சாலியின் மானம் காப்பாற்றப்பட மாட்டாது. போர்களத்தில் அருச்சுனன் சோர்ந்து போகும் போது கண்ணன் வந்து உடன் நன்மை புரிகின்றான். எனவே இலக்கியங்களில் கூட நன்மை செய்ய வேண்டும் அதை உடன் செய்ய வேண்டும் என்று கூறப்படுகின்றது.

நன்மை செய்வது என்பதை எடுத்து நோக்குவோம். அனால் அந்த நன்மையானது மனிதனுக்கு மட்டுமன்றி வேறு உயிரினங்களுக்கும் செய்ய வேண்டும். நாம் வீதியால் வரும்போது ஒரு வயது வந்த கண்பார்வை அற்றவர் தடுமாறி நிற்கும் போது அவருக்கு உதவி செய்யாது அந்த உதவியை யாரும் செய்வார்கள் என்று நினைக்கக் கூடாது. அப்போது அந்த வயது வந்தவருக்கு ஆபத்து வந்தபின்பு கவலையடையக் கூடாது. அவர் தடுமாறும் போது அவரை கைகளில் பிடித்து வீதியை கடக்கச் செய்து உதவியை

செய்யும்போது அவர் காப்பாற்றப்படுகிறார். எனவே ஒருவருக்கு நன்மை செய்யப்போகின்றேன் என்று நினைத்தால் அதனை உடனே செய்துவிட வேண்டும்.

நன்மையை நாம் பிற உயிரினங்கள் மீது செய்ய வேண்டும். ஐந்தறிவு படைத்த உயிரினங்கள் வாய் பேச மாட்டாதவை. அந்த உயிரினங்களுக்கு ஆபத்து வரும்போது உடனே உதவி செய்து அவற்றைக் காப்பாற்ற வேண்டும். எறும்புக்கு கூட நாம் தீமை செய்யப் போகின்றோம் என்று நினைக்க கூடாது. உடனே அந்த உயிரினங்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். எந்த உயிரினத்துக்கும் நாம் தீமை செய்ய வேண்டும் என்று நினைக்க கூடாது. நன்மையையே செய்து விடல் வேண்டும். அந்த நன்மையை நாளை செய்வோம் என்று நினைத்து இருந்துவிடக் கூடாது. இன்றே செய்ய வேண்டும்.

நன்மையை நாம் நாளை செய்வோம் என்று நினைத்து விடக்கூடாது. ஏனெனில் ஒருவர் ஒரு ஆபத்தில் இருக்கும் போது அவருக்கு உதவி செய்ய வேண்டும். ஆனால் அவ் உதவியை நாளை செய்வோம் என்று நினைத்து விட்டால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும். எனவே நன்மையை இன்றே செய்து விடல் வேண்டும். பாஞ்சாலிக்கு துகில் உரியும் போது பாஞ்சாலிக்கு செய்யும் உதவியை நாளை செய்வோம் என்று கண்ணன் நினைத்து விடாது உடனே அவ் உதவியை செய்கின்றான். எனவே நன்மை செய்யப் போகின்றோம் என்று நினைத்தால் அவ் நன்மையை உடனே செய்ய வேண்டும்.

நன்மை ஆனது உளம் சார்ந்த நன்மை, உடல் சார்ந்த நன்மை, உதவி சார்ந்த நன்மை என பலவாறு பிரிக்கலாம். உளம் சார்ந்த நன்மை என்பது ஒருவர் மனதிலே துயரப்படும்போது அவருக்கு பல விடயங்களைச் சொல்லுதல் வேண்டும். அவ்விடயங்களில் தீமை தரும் விடயங்கள் இருக்கக்கூடாது. அவ்விடயம் நன்மை தரும் விடயமாக இருக்க வேண்டும். நன்மை சார் கருத்துக்களை உடனே சொல்லி விட வேண்டும். இது உளம் சார் நன்மை ஆகும். உடல் சார்ந்த நன்மை ஒருவருக்கு உடல் ரீதியாக உதவி செய்ய வேண்டும். அந்த நன்மை தரும் உதவியை இன்றே செய்து விடல் வேண்டும். உதவி சார்ந்த நன்மை என்பது ஒருவருக்கு ஏழ்மையில் சாப்பிட உணவின்றி உடையின்றி இருப்பதற்கு குடிமனை இன்றி துடிக்கும் போது அவருக்கு செய்யும் உதவியை நாளை செய்வோம் என்று இருந்து விடக்கூடாது. எம்மால் எவ்வாறான உதவியை செய்யலாம் என்று நினைத்து அவரின் ஏழ்மையை இல்லாமல் செய்ய உதவியை உடனே செய்து விடவேண்டும். அவ் உதவியே சிறந்த உதவி என்று கூறப்படுகின்றது. இது உதவி சார்ந்த நன்மையாகும்.

எனவே ஆறு அறிவு படைத்த மனிதர்கள் ஆகிய நாம் நன்மையை உடனே செய்ய வேண்டும். அந்த நன்மையை இன்றே செய்து விட வேண்டும். அந்த நன்மை எல்லா உயிரினங்களுக்கும் செய்ய வேண்டும்.

"தீமையை விலக்குவோம் நன்மையை செய்திடுவோம்
நானிலம் போற்றும்படி இன்றே அதை செய்திடுவோம்."

**மா. சிவதர்ஷினி**
ஆசிரியர்.
யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
மீசாலை

NS
யோகன் களஞ்சியம்
இல.17, சந்தை தெற்கு வீதி,
சுன்னாகம்

நாதன் சகோதரர்
NATHAN BROTHER'S
கே.கே.எஸ். வீதி.
இணுவில்

ஜெயால் ரெயிலறிங் சென்ரர்
ஆண்களுக்கான உடைகளை நவநாகரிக முறைகளில்
தைத்துப் பெற்றுக்கொள்ளலாம்
பிரதான வீதி
பருத்தித்துறை

ஆனந்தா கட்டிடப் பொருட்கள்
விற்பனை நிலையம்
இங்கு கட்டிடப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்
கே.கே.எஸ். வீதி.
இணுவில்

நாதன் கடிகாரம் திருத்துனர்
சகல வகையான கடிகார வகைகளும்
திருத்திக் கொடுக்கப்படும்
K.K.S. Road,
Inuvil(Front of Hospital)

திருக்குமரன் கட்டிடப் பொருட்கள்
விற்பனை நிலையம்
THIRUKKUMARAN
Hardware Stores
இல.9, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

கண்ணன் வீடியோ
விடியோ & போட்டோ
விடியோ கசற் & VCD - DVD வாடகைக்கு
விடியோ கசற் to VCD - DVD பதிவு
ஓடியோ கசற் பதிவுகள்
போட்டோ கொப்பி
லெமனற்றிங்
கிற் காட் - Sim காட்
Mobil Phone & Accessories
35, கண்டி வீதி,
சாவகச்சேரி

மணி ஜுவெல்லறி
ஈசன் ஜுவெல்லறி
கச்சாய் வீதி,
சாவகச்சேரி
பிரதான் வீதி,
சங்கானை

Jaffna Electrical
141,Power house Road,
Jaffna.
T.P:-0777238542
96(6) Stanley Road,
Jaffna.

பானுகா நகையகம்
108, கண்டி வீதி,
சாவகச்சேரி
T.P:-0779360579

குமார் ஏஜென்ட் & கொம்னிகேசன்
குமார் முகவர் தபால் நிலையம்
தொலைத்தொடர்பு சேவைகள்

133/3 மின்சார நிலைய வீதி,
மத்திய பேருந்து நிலையம் அருகாமை,
யாழ்ப்பாணம்

T.P:-021-2228354

எஸ்.கே. உணவகம்

இல.25, ஏ9 கண்டி வீதி,
சாவகச்சேரி

T.P:-0775591366

இளவரசி காலணியகம்



K12, நவீன சந்தை,
சுன்னாகம்.

JEGAN PHARMACY

Multi Shop Complex

No 462/B Hospital Road, Jaffna
T.P:-021 222 2194

No 50/1,K.Cyril, C.Perera Mawatha
Colombo

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
Dealers in All Kind of Silk Sarees And Sudithar

இல.105, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

T.P:-021-2226953

பாலகணேசன் களஞ்சியம்

225A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:-021 222 5482

இந்திரன் ஜீவல்லர்ஸ்

இல.10, நவீன சந்தை,
சாவகச்சேரி.

மிலேனியம் பெஷன் &
பொம்பே பஸார்

No.10, Power House Road,
Grand Bazaar, Jaffna

T.P:-0212229399

லதுமி தையல்
அகம்



கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்

நியூ பிரசாந்தி ஜீவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்

95, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

## ஓமக்ஸ் ஹொட்டேல்

அனைத்து வகையான சிற்றுண்டி வகைகளையும்
பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்

**OMAX Hotel**

372, Hospital Road
Jaffna

## லக்ஷி வாச் வேக்ஸ்

**Luckshi Watch Works**

இல:5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## THAADSA MULTI POINT

**Fancy goods,Gift items,cosmetic,
Imitation Articles ornament's Toys Etc**

T.P:-0776913151

Maharaja BlockChunnakam Junction
Chunnakam

## நடன முருகன் வைத்திய நிலையம்

*140, விவேகானந்தா மேடு,
கொழும்பு 13*

T.P:-021 222 3635

## கிளின்ரன் அந்தியகால சேவை

**Clinton Funeral Service**

T.P:-021 222 3518

548, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## THAS LAB

*தாஸ் லாப்*

**Photo Editing,Album designing,
Album Making**

No:4, Dr. Subramaniyam Road
Chunnakam.

## RENNY

**Dental & Optical Service**

T.P:-021 222 3703

540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## L.M.Jabir

பாடசாலை உபகரணங்கள், அலுவலக காகிதாதிகள்
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

No.128, Power house Road,
Jaffna.

## றெஸ் கோணர்

## Dress Corner

T.P:-021 222 7659

99, Grand Bazaar
Jaffna.

## லண்டன் மெடிக்

மெடிக்குயிக் ஆய்வு கூடம்

அனைத்து வகையான மருந்து பாமா வகைகளுக்கு

T.P:-021 222 2960

மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

## மதன் எலக்ரோனிக்ஸ்

சுதுமலைச் சந்தி,
மானிப்பாய்.

T.P: 077 7448668
021 7901574

## SDS Computer Services

For All Your IT Solutions

# 328 Hospital Road, Jaffna.

021-4590686
021-222 8418
0777 874705
sds_jaffna@yahoo.com



SALES • REPAIR& MAINTENANCE • SOFTWARE DEVELOPING • WEB DESIGNING

## P.Net

BROWSING CENTRE & COMMUNICATION

Sivan kovil Road,
Point-Pedro.

Phone : 0212263811
Fax : 0602213060
0212263652

E-mail : p.netcaffe@yahoo.com

LOCAL, NATIONAL, IDD NET CALLS, PHOTOCOPY, FAX, E-MAIL, BROWSING, LASER PRINT, TYPE SETTING, CD WRITING, SCANNING, ALL KIND OF MOBILE RELOAD, PC REPAIRING

## சாரங்கா நகை மாடம் / Saranga Nagaimadam


221, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Pho: 0212226972

55, செட்டியார் தெரு
கொழும்பு 11
Pho: 0112434971

## SHARMY

DIGITAL VIDEO & STUDIO

N.I.C Photo, Passport Photo, Photo & Video Mixing
And Album making, Framing,
Black and white to Color
ANNASILAIYADY,
KARANAVAI KARAVEDDY
TP:- 077-6120068
Branch: New Market Line, Navindil.



## Universal Studio Video

Communition & Photo Copy & Fax
Service Universal Van Booking Centre.

Vathiry Road,
Uduppidddy.

Pho: 021 2263362

## Ananda Pharmacy

Point Pedro Road,
Valvettithurai

## சென்மேரி திருமண சேவை

நாதன் வாச்வேக்ஸ் ஆஸ்பத்திரி முன்பாக

கே.கே.எஸ்.றோட், இணுவில்.

## சாந்தி விலாஸ்

யாழ்ப்பாணம்

## சரண்யா தேனீர் அகம்

கே.கே.எஸ். றோட் யாழ்ப்பாணம்

## ஸ்ரீ பாஸ்கரன் உணவகம்

## அனுசா பந்தல் சேவை

கே.கே.எஸ். இணுவில்

# பூந்தோட்டம்



அழகின் இருப்பிடம் எதுவம்மா?
அன்பு அன்னையை நான் கேட்டேன்
பழகு தமிழில் அவர் சொன்னார்
பூந்தோட்டம் தானென்று.

சிவப்பு வெள்ளை ரோஜாவும்
செம்பருத்தி மல்லிகையும்
குவளை மலரும் குங்குமமும்
காண்பவர் மனதைக் கவர்ந்திடும்.

இரயிலில் ஏறி உறவினர்கள்
பயணம் புறப்படும் வேளையிலே
கரத்தால் விடை கொடுப்பதுபோல
கழுத்தசைக்கும் பூமரம் பார்.

நறுமணப் பூவில் தேன் குடிக்கும்
தேனீக் கலைஞன் இசையமைப்பின்
வருக வருக என்றழைக்கும்
வாசனை எங்கும் நிறைந்திருக்கும்.

**த. தனரூபி**
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை.



# நான் விரும்பும் இலக்கிய கதாபாத்திரம் "கர்ணன்"

உலகப் பேரிலக்கியங்களில் ஒன்றானதும் இந்தியப் பண்பாட்டின் ஊற்றுக் கண்களில் ஒன்றானதுமான வியாச பகவான் அருளிய மகாபாரதம் எனும் மகா காவியத்திலே மனத்திலே என்றும் அழியாத. நிலையான நெகிழ்ச்சியான ஓர் பாத்திரம் "கர்ணன்"

கர்ணனின் வாழ்க்கை ஓர் சோகக் காவியம். தன் பிறப்பை அறியாது கொடிய வலிமையால் சேராத இடம் சேர்ந்து இறுதியில் வஞ்சிக்கப்பட்டு புகழுடம்பைப் பூவுலகில் நிலைக்கவிட்டு இறக்கின்றான்.

குந்திதேவியின் பரீட்சைக்கும் பலியானவன். அவள் தனக்கு ஓதியருளிய மந்திரத்தை பரீட்சிக்க விரும்பி பரீட்சித்ததன் பொருட்டு சூரிய தேவனால் அருளப்பட்ட குழந்தையே கர்ணன். பிறக்கும் போதே கவச குண்டலங்களுடன் பிறந்தவன். ஊராரின் பழிக்கஞ்சி அதைப் பேழையில் இட்டு விடுகிறாள். அது சந்தர்ப்பவசமாக ஒரு தேர்ப்பாகனின் கையில் அகப்பட்டு விடுகின்றது. அத்தேரோட்டி பிள்ளையை தன் பிள்ளைபோல் வளர்க்கின்றான். இதுவெ கர்ணனின் பூர்வீகம்.

இந்த நிலையில் அவன் பட்ட அவலங்கள் எத்தனை? அர்ச்சுனனுக்கு அதிகமான வில்வித்தையும் வீமனுக்கு மேலான உடல் பலமும் நகுல சகாதேவர் களுக்கும் மேலான சாதுரியமும் அவற்றுக்கு மேலான கொடைத்தன்மையையும் அவன் கொண்டிருந்தும் அவன் பிறப்பின் இரகசியத்தை அறியாது எல்லோராலும் எள்ளி நகையாடப்பட்டான். புறக்கணிக்கப்பட்டான். ஒதுக்கப்பட்டான். வெறுக்கப் பட்டான். இதுவே அவனது வாழ்வு முழுவதும் தொடர்ந்து வந்தது.

அவனது மேலான குணநலன்களைப் போற்றுவதற்கு வார்த்தைகளில்லை. செய்நன்றிக்கடன், கொடை முயற்சி, சத்தியம் தவறாமை, விருப்பு வெறுப்பின்மை இவ்வாறான மேலான குணங்கள் இவனிடம் காணப்பட்டன. கொடைக்கு கர்ணன் என்ற பட்டப் பெயரால் இவன் அழைக்கப்பட்டான். உலகிற்கே அதிபதியான கிருஷ்ண பரமாத்மாவினால் கொடை வள்ளல் எனப் புகழப்பட்டவன் கர்ணன் ஆவான்.

"தனது மனைவியின் உடலைத் தகனஞ் செய்வதற்குச் சந்தனக் கட்டைகள் இல்லை என்று வந்த அந்தணருக்கு தனது அரண்மனைத் தூண்களை வெட்டிக் கொடுத்தான்.

தன்னை தன்னோடொத்த நிலையில் வைத்த துரியோதனனுக்குக் காட்டிய செய்ந்நன்றிக்கடன் போற்றக்கரியது. அவன் கொண்ட நட்பின் ஆழம் வணங்குதற் குரியது. ஆயினும் இறுதியில் அவையே அவனைப் படுகுழியில் ஆழ்த்தின.

பாண்டவர்களில் மூத்தவன் கர்ணனே. இவ்வுண்மையை குந்திதேவியின் வாய் மொழியால் அறிந்தும் அவன் அந்த உரிமைக்காக ஆசைப்படவில்லை. இறுதி வரை தன் செஞ்சோற்றுக்கடன் தீர்க்கவே போராடினான். இதிலிருந்து கர்ணனின் நேர்மையான நீதி பிறழாத குணத்தை நாம் காணலாம்.

கர்ணனது வள்ளண்மை நினைந்து நினைந்து உருகுதற்குரியது. தன் புண்ணியத்தால் உயிர் பிழைத்திருந்தபோது மாயக் கண்ணன் மாய உருவம் எடுத்து அவனது புண்ணியத்தைக் கேட்ட போது கர்ணன் என்ன செய்தான், தயங்கினானா? இல்லை தான் செய்த புண்ணியத்தோடு தான் செய்கின்ற புண்ணியத்தைத் தானஞ் செய்ததால் வந்த புண்ணியத்தையுமல்லவா மகிழ்ச்சியுடன் தாரைவார்த்துக் கொடுத்தான்.

தான் உயிரிழக்கும் அபாயம் இருந்தும் அவன் தன் நாகாஸ்திரத்தைக் குந்திக்குக் கொடுத்த வாக்கின்படி ஒரு முறைக்கு மேலாகப் பயன்படுத்தவில்லை. கண்ணனின் ஓர் சிறு தாழ்ச்சியால் அர்ச்சுனன் முதலாவது நாகாஸ்திரத்திலிருந்து தப்பித்து விடுகின்றான்.

கர்ணன் தன் வாழ்விலே எல்லோராலும் வஞ்சிக்கப்பட்டான். தாயால் தம்பியரால், குருவால், பிதாமகனால், கண்ணனால், நண்பனால், இயற்கையால், கடவுளால் என்ற எல்லோராலும் வஞ்சிக்கப்பட்டான்.

இறுதியில் ஓர் மனிதனாய், மகனாக நிலைக்க விரும்பி குந்தியிடம் தன் பிறப்பை உணர்த்துமாறு வேண்டி முன்பு பெறாத அவளின் அரவணைப்பைப் பெறுவதோடு திருப்தியடைகின்றான்.

ஆரம்பம் முதல் இறுதிவரை நல்லவனாக ஆனால் மற்றவர்களால் வஞ்சிக்கப் பட்டவனாய் வாழ்ந்தான். அவன் வாழ்வின் மகத்துவம் தனித்துவம். என்னை மட்டு மல்ல எவரையும் கவர்ந்துவிடும். பிறப்பு இறப்பு, வாழ்வு என்று எப்போதுமே துரதிஷ்டம் நிரம்பியவனாய் இருந்தான். எளிமை தனது கடமையில் அவன் பின் வாங்கவில்லை.

அர்ச்சுனனாம் வீரத்தை இழந்து போர்க்களத்தில் துணிவை இழந்து கோழையாகி கிருஷ்ணனால் தேற்றப்படுகின்றான். தருமரும் துரோணரைக் கொல்ல வஞ்சனைப் பொய்யைக் கூறுகின்றான். ஆனால் கர்ணன் தன் குணநலன்களின் உறுதியிலிருந்து ஒருபோதுமே பின்வாங்கவில்லை. கர்ணனைப் போன்று பாத்திரத்தை முன்னும் பின்னும் என்றும் எவராலும் படைக்க முடியாது. ஏனெனில் அவன் நம்பக் கூடியவனாயும் விரும்பக் கூடியவனாயும் படைக்கப்பட்டிருக்கின்றான்.

எவ்வளவுதான் நற்குணங்கள் கர்ணனிடம் காணப்பட்டாலும் தீய நண்பர்களுடன் சேர்ந்ததால் அவன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டான். எப்போதும் தர்மமே வெல்லும். ஆனாலும் கர்ணனின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

**தெ. திஷாலினி**
ஆங்கிலத் துறை (2ம் வருடம்)
யாழ்ப்பாணம் தேசியற் கல்வியியற் கல்லூரி.

# விடியலை நோக்கி...

பாசத்துக்காய் ஏங்கி வாடும்
பாருலக மனிதரின்
ஏக்கத்தைப் போக்கிட
ஏங்குவார் யாருமில்லை.



யாரைத் தான் நம்புவது
யாரிடம் தான் சொல்வது
எண்ணி எண்ணி கவலையடையும்
எண்ணற்ற உயிர்கள் இங்கு

இருள் வாழ்க்கை வாழ்ந்து
இன்ப வாழ்வை இழந்து
ஆறுதல் கூறுவார் யாருமற்றிருப்பவரை
அன்பாக ஏற்றுக்கொள்ள யாருமில்லை.

உற்றார் உறவினர் வெறுத்து
ஊதாரி மனிதராக வாழ்பவரை
அன்பாக கலந்து உறவாடி
அரவணைக்காத உயிர்கள் இங்கு.

போரினால் உயிர்களை இழந்து
போராடி ஜீவிக்கும் உள்ளங்களை
இன்ப வழியில் நடத்தி
இரங்கி நடப்பவர் யாருமில்லை.

மாயை நிறைந்த உலகில்
மாயமாக வாழ்ந்து
பிறர் துன்பம் அறியாது
பித்தரான உயிர்கள் இங்கு

சாதிமத பேதத்தால்
சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு
அல்லல் படும் உயிர்களை
அரவணைப்பார் யாருமில்லை.

கண் திறக்கட்டும்
கதிரவனின் பேரொளி படரட்டும்
அருள் பிறக்கட்டும்
அண்டமெல்லாம் இருள் நீங்கட்டும்

துன்பத்தில் வாழும் உயிர்களின்
துன்ப அலை ஓய்ந்து
இருளில் வாழும் உள்ளங்களில்
இனிய ஒளி மலரட்டும்.

**தே. ஷெறீன் நிலாந்தி**
ஆசிரியர்,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.
மல்லாகம்

# கால்வயிற்றுக் கஞ்சிக்காய்........

காலைப்பொழுது வெறுந்தரையில் படுத்திருந்த கயல் யன்னல் வழியே வானத்தை உற்றுநோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனம் பழைய ஞாபக அலைகள் மோதி தள்ளாடிக்கொணடிருந்தன. எத்தனை எத்தனை சோகங்கள் அவள் வாழ்க்கையில் வேதனைகள். குடும்பத்தில் மூத்த பிள்ளை கயல். அவளிற்கு நான்கு சகோதரிகளும் ஒரு சகோதரனும். தந்தை தாயை சிறுவயதிலேயே இழந்து விட்டாள். குடும்பத்துச் சூழ்நிலையை உணர்ந்து செயற்படும் பக்குவமும் அவளிற்கு வடிவாக தெரியாது. வீட்டில் உலை ஏற்றுவதென்றால் அவள் வாழ்க்கையில் புதையல் கிடைத்தது போல் இருக்கும்.

நான்கு மணி என்றால் துள்ளிக் குதித்து எழும்பி விடுவாள் கயல். இயந்திரம் இயங்கியது போன்று 'படபட' என ஓடித்திரிந்து எல்லா வேலைகளை யும் செய்து முடித்து விட்டு, கோயில் மணி 6 மணிக்கு கேட்கும் போது அவளின் அன்பைத் தொட்ட அந்த ஒரே ஒரு சட்டை அவளின் தோளில் அணியப்படும். காலில் செருப்பின்றி உச்சந்தலையில் ஓர் சீலைத்துண்டால் கட்டிய குஞ்சமும் நெத்தி நிறைய திருநீற்றுப் பூச்சுடனும் கண்மணி அக்கா வீடு நோக்கி ஓடிச் செல்வாள். கண்மணி அக்கா கொடுக்கும் அப்பத்தை பிஞ்சுக் கால்கள் தள்ளாட சின்னக் கைகளால் கொண்டு திரிந்து 'அப்பம் வேணுமா? அப்பம், அப்பம் வேணுமா? அப்பம்' என கத்திக் கத்திக் கேட்டு தந்திரமாக கதைத்து விற்று முடித்து விடுவாள். காசைக் கொணர்ந்து அப்படியே கண்மணி அக்காவின் கைகளில் கொடுத்து விடுவாள். கடவுளிற்கு பயந்தவள், அன்புக்குக் கட்டுப் பட்டவள், பொய் சொல்லத் தயங்குபவள். களவெடுக்கும் குணம் அவர்களின் பரம்பரையில் இல்லாத ஒன்று.

விறுவிறுவென வீடு வந்து "தம்பி கண்ணா பள்ளிக்கூடம் போக வெளிக் கிட்டாச்சே, இந்தாங்கோ கண்மணி அக்கா தந்தவா" என இரண்டு அப்பத்தை மூன்று மூன்று பகுதிகளாக பிரித்து ஒவ்வொருவருக்கும் கொடுத்து விட்டு தனது பங்கை தன் ஒரே ஒரு சகோதரன் கண்ணனுக்கு தட்டிவிடுவாள். எல்லோரும் அக்கா கயலை ஆசையோடு அரவணைத்து முத்தமிட்டு விட்டு பாடசாலைக்குச் செல்வார்கள்.

கயலோ சிறிது நேரம் "ம்... சரியான களைப்பாய் இருக்குது, கண்கள் மின்னுகின்றன, வயிறு கொதிக்கிறது" என வயிற்றைத் தடவியபடியே வாசல் கதவோரம் உட்கார்ந்து கண்களை மூடி அழுதாள். ஒரு கணம் தன் தாய் தந்தை யரை சிந்தித்துப் பார்த்தாள். திடீரென புத்துயிர் பெற்றதுபோல் எழுந்து தட்டியை எடுத்து வாசலை மூடிவிட்டு வீறுநடை போடத் தொடங்கினாள். கையில் அம்மாவின் பழைய சாறித் தலைப்பு. தான் வழமையாக வேலைக்குச் செல்லும் எஜமானின் வீட்டை அடைந்ததும் அங்கு நிற்கும் நாய்க்குட்டி டெவில் அவளின் கால்களில் நக்கி அவளின் பின்னால் கடவுளைக் கண்டது போல் துள்ளிக் குதித்து ஓடியது. அதனையும் "வாடாச் செல்லம், அக்கா வந்திட்டன்" என ஆசையோடு அழைத்துக் கொண்டு, சொல்லும் வேலைகளை சற்றும் சினமின்றி மும்முரமாக நின்று செய்து முடித்தாள்.

பாடசாலையில் இருந்து வரும் சகோதரர்களில் கடைசிப்பிள்ளை அக்காவிடம் ஓடி வந்துவிடும். அவளின் அருகில் குழப்படி இல்லாது நல்ல பிள்ளையாய் உட்காருவதற்கு. மற்றையவர்கள் தமது உடுப்புகளை அலசி வீடுவாசல் கூட்டி, வீட்டு வேலையை ஓரளவு தமக்குத் தெரிந்தளவில் செய்து விட்டு திரும்பவும் இருந்து படிக்கிறவை படிக்க, விளையாடுகிறவர்கள் விளையாடுவார்கள். தனக்குக் கொடுக்கும் மத்தியானச் சாப்பாட்டை தண்ணீர் விட்டு கரைத்துவிட்டு எல்லோரும் சாப்பிடும்படி தனது தம்பி கண்ணனிடம் கொடுத்துவிடுவாள். வேலை முடிந்ததும் காசை இருகரம் நீட்டி வேண்டி கண்ணில் ஒற்றி சட்டைப் பைக்குள் வைத்து பிடித்தபடி வீடுவந்து சேருவாள்.

அதன்பின் தான் கண்மணி அக்காவிடம் சென்று காசு வேண்டிவந்து கஞ்சி காச்சி முற்றத்தில் இருந்து எல்லோரும் கூடி இருந்து பருகுவார்கள். எஜமானிடம் வேண்டும் காசு அவளின் சகோதரங்களின் படிப்பிற்கும் அன்றாட தேவைகளிற்குமே ஓரளவு போதுமானதாகக் காணப்பட்டது. இவ்வாறு வாழ்ந்து வருகின்ற போது அக்கா கயலை கட்டிப்பிடித்து “அக்கா அக்கா... நீ கவலைப் படாதே, நாங்கள் எல்லோரும் உத்தியோகம் பார்த்து நீயும், எங்கட அம்மா அப்பாவும் விரும்பின மாதிரி பெரியவளா வந்து ஏழைகளிற்கு உதவி செய்து உன்னையும் ராசாத்தி மாதிரி வைத்து பார்ப்போம். என கடக்குட்டி ஜெனா கூறினாள். அவளும் இதனைக் கேட்டு இதனைத் தானே எப்பவரும் எப்பவரும் இந்தக் காலம் என எண்ணிக்கொண்டிருக்கிறன். என வாழ்க்கை வெறுத்த மாதிரி சற்று சிரிப்போடு சொன்னாள். ஆண்டவன் ஒருவன் இருக்கிறானக்கா, ஆனைக் கொரு காலம் வந்தா பூனைக்கொரு காலம் வரும் என்றமாதிரி எங்களிற்கும் காலம் வரும் அக்கா” என பெரிய மனிசர் மாதிரி கண்ணன் குறுக்கிட்டு ஆறதல் சொன்னான். “சரிசரி போய் படியுங்கோ” என கூறிவிட்டு தானும் அருகில் இருந்து ஊக்கம் அளித்துக் கொண்டிருப்பாள்.

பரீட்சை என்றால் கயலிற்கு தான் ஒரே டென்சன்... இவ்வாறு நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகின. ஒவ்வொருதருக்கும் வயதும் ஏறிக்கொண்டு சென்றது. செலவும் அதிகரித்தது. இத்தனைக்கும் அவள் தயங்கவும் இல்லை சாயவும் இல்லை. அவளும் சளைக்காமல் தனது குடும்பத்தை பேணிவந்தாள்.

இப்போது அவளிற்கு அடுத்த தங்கை (English) இன்கிலீஸ் ரீச்சர் ஆகிவிட்டாள். தம்பி கண்ணன் இஞ்சினியர் என்று பெருமையாகச் சொல்லுமள விற்கு படித்து விட்டான். அடுத்த தங்கை ஆசிரியர், மூன்றாவது தங்கையும் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் சங்கீதத்துறையில் கற்றுக்கொண்டிருக் கிறாள். கடைக்குட்டி ஜெனா விஞ்ஞானத்துறையில் டொக்டராக வந்து தனது அக்காவின் வாழ்க்கையை ஒளிமயப்படுத்தும் எண்ணத்துடன் படிக்கின்றாள். இவ்வாறு மற்றவர்கள் பார்த்துப் பேசும் அளவிற்கு ஓகொ என இவர்களின் குடும்பம் வீறுநடை போட்டு வளரத் தொடங்கியது.

அந்தோ பரிதாபம், இதென்ன கொடுமை அவளில் என்றும் வேதனையே நிறைந்திருந்தது. ஒரு பக்கம் சந்தோசம் என்றாலும் வேதனையே அத்திவார மாகக் காணப்பட்டது. அவள் கண்களில் என்றும் இரத்தக் கண்ணீரே வடிகின்றது. ராசாத்தி போல் இருக்கும் கயல் இன்று சாவின் விளிம்பில் கால்

வைத்துவிட்டாள். முன்பு கஞ்சி கூட குடிக்க இல்லாது வயிற்றை பட்டினியால் வாட்டினாள். இப்போது விலை உயர்ந்த பொருட்கள், விரும்பிய சாப்பாட்டு வகைகள், சாப்பிடக்கூடிய பணம் இருந்தும் உண்ண முடியாமல் கால் வயிற்றுக் கஞ்சிக்காய் தவம் கிடக்கின்றாள். அவள் வாழ்க்கையில் இறைவன் இன்பம் எனும் சொல்லையே இல்லாமல் ஆக்கிவிட்டார். ஏனெனில் அவளிற்கு குடற் புற்றுநோய்.... தொண்டைக்குள் எதனையும் போட முடியாது. அளவாகவேனும் சாப்பிடக்கூட முடியாது. பழைய நிலைமை போல் அவள் என்றும் கால் வயிற்றுக் கஞ்சிக்காகவே ஏங்கிக் கொண்டிருப்பாள். அவளால் அவ்வளவுதான் சாப்பிட முடியும். இதற்கு அவள் முன்பு சாப்பிடாமல் இருந்ததால் அல்சர் வந்து அது அதிகரித்து புற்றுநோயாக மாறி விட்டது என வைத்தியரும் கூறி இனி ஒன்றும் செய்ய முடியாது. கையை விரித்து விட்டார்கள். அவள் இவ்வளவு காலமும் தன் வாழ்க்கையில் நிகழ்ந்ததை எண்ணியபடியே தூங்கினாள். அவர்கள் அக்கா கயலுக்காக கோயில்கள் தோறும் பூசை செய்வதுடன் ஏழைகளிற்கு தான தர்மங்கள் செய்து வந்தனர். இவளுடைய வயிறு என்றும் கால் வயிற்றுக் கஞ்சிக் காகவே ஏங்கிக் கொண்டிருந்தது.

**ஜ. சிவப்பிரியா**
ஆசிரியர்,
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
மீசாலை

## பொன் மொழிகள்

1.பெருமைக்காரன் கடவுளை இழக்கிறான்
பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான்
கோபக்காரன் தன்னையே இழக்கிறான். – **பிஷப்ஹால்**

2.பிறபால் தொடரும் உறவுகளல்லாமல்
பிணைப்பால் தொடரும் உறவுகளே உன்னதமானவை
– **கண்ணதாசன்**

3.நீ எதை மறந்தாலும் இறைவனை மறவாதே – **சுவாமி ராமதாஸ்**

4.சூரியனை இழந்ததும் கண்ணீர் விட்டால்
நீ நட்சத்திரங்களையும் இழந்து விடுவாய் – **தாகூர்**

5.பேசாத வார்த்தைக்கு நீ எயமான்
பேசிய வார்த்தைக்கு உனக்கு எயமான் – **வாரியார்**

6.அடக்கம் உயர்வுக்கு வழி
நான் என்ற ஆணவம் அழிவுக்கு வழி – **பாபா**

## வெற்றியின் தடயங்களைப் பதிப்பதற்காக....



விந்தை மிகு
21ஆம் நூற்றாண்டு - இது
பல சாதனைகளைப் புரியும்
ஆண்டு!

சாதனைகள்! ஆமாம்
அவை வெற்றியின்
தடங்களாக மிளிர்கின்றன...

21ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானம்
கண்ட புதுமை தான் - என்ன!
புதுமையின் நுட்பங்களின்
அரிய வளர்ச்சி தான் என்ன!!

எத்தனை! எத்தனை!! அவை
கணக்கில் அடக்க முடியாதவை
விஞ்ஞானத் தொழில் நுட்பத்தில்
புதிய புதிய கண்டு பிடிப்புக்கள்
புதுப்புது தொழில்நுட்ப சாதனங்கள்
அவற்றிலே முயன்று - மனிதன்
புகழையும் பெற்றிட்டான்...

பரந்து ஒடுங்கிய பாரினிலே
யாருமே நினைக்காத வொன்றை
சிந்தித்தான், செயல்படுத்தினான்!!!!
முயல்கின்றான் சாதித்தும் காட்டினான்

விண்ணில் கூட - தனது
வெற்றிடத் தடத்தை மனிதன்
பதித்து புகழ்க் கொடி நாட்டினான்.

மனிதனின் எண்ணங்கள்
காந்த அலைகளாய் - தன்
வெற்றி இலக்கை நோக்கி
நகர்ந்து கொண்டிருக்கின்றான்.

ஆனால் நீயோ....
இன்னமும் இந்த
உலக உருண்டையில் எதைப் பார்த்து
சிந்தனை செய்கிறாய்...

மனிதனே! எழுந்திரு
வீர நடைபோட்டு சாதனை செய்!
சாதித்து உன் முன்னால்
இருக்கும் சாதனை ஏட்டிலே...

வெற்றித் திருமகனாய்
உன் பெயரை
வெற்றியின் தடங்களாக
பொறித்து வைத்திடு - உன்
எதிர்கால சந்ததியினர்
உன் வழி நின்று - தம்
வெற்றியின் தடங்களைப்
பொன்னேட்டிலே பதிப்பதற்காக...

**செல்வி ச. சாயிஜெனனி**
12 (2011)
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

# அன்பு ஒன்றே போதும்...

"சதீஸ் போய்க் குளி, பள்ளிக்கூடத்துக்கு நேரமாகுது...!" அவசரப் படுத்தினாள் அவனது தாய் ஜெயா. படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்த சதீஸ் "அம்மா நான் உங்களிட்டை ஒன்று கேட்பன் தருவிங்களா? என்று மெதுவாக கேட்டான். என்னடா சதீஸ் வேணும்...? அவனது தலையைத் தடவியவாறே கேட்டாள் அம்மா. "இண்டைக்கும் எனக்கு மத்தியானச் சாப்பாடு கட்டித் தந்து விடுவீங்கள் தானே...?" ஓம் "அப்ப இண்டைக்கிருந்து இரண்டு முட்டை வைச்சு விடுறீங்களா" ஏன் சதீஸ், மத்தி யானத்தில் எனக்குச் சரியாகப் பசிக்குது. தாங்க முடியேல்ல... அதுதான் "இவ்வளவு தானே இண்டையில் இருந்து சோறு கறியளோட இரண்டு முட்டையும் வைச்சு விடுறன் என்றாள் அம்மா. அம்மான்னா அம்மா... நல்ல அம்மா... தங்க அம்மா... என்று சொல்லித் தாயின் கன்னத்தில் முத்தமிட்டான். பின்னர் கும்மாளத்துடன் குதித்துக் கொண்டு குளிக்கச் சென்றான்.

இந்த வருடத் தொடக்கத்தில் இருந்து பள்ளிக்கூடத்துக்கு மத்தியானச் சாப்பாடு கட்டிக் குடுக்கிறன். ஒவ்வொரு நாளும் சதீசுக்குச் சாப்பிட ஒரு முட்டை தானே வைச்சுவிடுகிறன், இது வரைக்கும் எதுவும் கதைக்காத இவன் இப்ப ஏன் இப்படிச் சொல்லுறான்? இதில ஏதொ இருக்குது. அதை இண்டைக்கு மத்தியானம் கண்டு பிடிக்கிறன்.... என்று நினைத்தாள் ஜெயா. தன் மகனுக்கு மத்தியானச் சாப்பாடு கட்டி வைத்துவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடலானாள்.

குளித்து முடித்துக் காலை உணவைச் சாப்பிட்டு விட்டு பாடசாலைக்கு கிளம்பினான் சதீஸ். அன்று மதியம் உணவு இடைவேளையின் போது பாடசாலைக்கு வந்த ஜெயா சதீஸ"டைய வகுப்பறை ஜன்னல் வழியில் எட்டிப் பார்த்தாள். அங்கே...

தன் நண்பன் ஒருவனுடன் அமர்ந்து சாப்பாட்டுப் பார்சலைத் திறந்து கொண்டிருந்தான் சதீஸ்...

அவன் நண்பனும் சாப்பாட்டுப் பார்சலைத் திறந்தான். சதீஸ் தன்னிட மிருந்த இரண்டு முட்டைகளில் ஒன்றை எடுத்து குமார்! இதை நீ சாப்பிடு... என்று நண்பனின் சாப்பாட்டுப் பார்சலில் வைத்தான்.

சதீஸ்! இதுவரைக்கும் ஒரு முட்டை கொண்டு வந்தநீ இண்டைக்கு எதுக்கு இரண்டு முட்டை கொண்டு வந்தனீ...? என்றான் குமார். உனக்காகத் தான் இனி ஒவ்வொரு நாளும் உனக்கொரு முட்டை கிடைக்கும் என்றான் சதீஸ். வீட்டிலை என்ன சொல்லி இரண்டு முட்டை கொண்டுவாறாய்...?

எனக்குச் சரியாகப் பசிக்குது என்று பொய் சொல்லி...

ஏன் சதீஸ? இதெல்லாம் தேவையா? ஒரு வாரமா உன்னோட பழகிற என்

மேல் அன்பு வைச்சு அம்மாவிற்கு பொய் சொல்லித் தானே எனக்கொரு முட்டை கொண்டு வாறாய். இது உன்ர நல்ல மனசைக் காட்டினாலும், யாருக்காகவும் எந்த சமயத்திலையும் பொய் சொல்லுறது நல்ல பழக்கமில்லை... என்ர அம்மா எனக்குக் கட்டித்தாற சாப்பாடு எனக்குப் பழகிப் போய்விட்டது. எங்கட குடும்பம் இருக்கிற நிலையில் என்ர அம்மா இதைத் தந்துவிடுறதே பெரிய விடயம்.


இதை ஒவ்வொரு நாளும் சாப்பிடுகிற நான் உன் மூலமா தினமும் பாடசாலையில் முட்டை சாப்பிடுற பழக்கத்தை ஏற்படுத்தி விட்டால் வீட்டில் போயும் என் நாக்கு முட்டை கேட்கும்...

அப்ப என்ர அம்மாவால எனக்கு முட்டை வாங்கி வைக்க முடியுமா? இன்னொன்று... ஒவ்வொரு நாளும் எனக்கொரு முட்டை நீ கொண்டு வந்தால் உங்கட குடும்பத்துக்கும் அது மேலதிக செலவு. அதால இந்த முட்டையையும் தயவு செய்து நீயே சாப்பிடு... பின்னேரம் வீட்டுக்குப் போனதும் அம்மாவிட்ட உண்மையைச் சொல்லி மன்னிப்பு கேட்டுக்கொள் எனக்கு உன்னோட அன்பு ஒன்றே போதும்...

முட்டையை எடுத்து குமார் மீண்டும் சதீஸின் சாப்பாட்டுப் பார்சலில் வைத்தான். குமார் சொன்னதைக் கேட்டு என்ன சொல்வதென்றே தெரியாமல் சதீஸ் தவித்தான். சதீஸின் பாச உள்ளததையும் குமாரின் உயர்ந்த பண்பையும் ஜன்னல் வழியே கண்ட ஜெயாவின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் திரண்டது.

**சு. விஜிதா**
ஆசிரியர்,
யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை.
வல்வெட்டித்துறை.

# மறவா அனுபவம்



பள்ளிப் பருவமதிலே
கற்கும் வயதுதனிலே
"காதல்" எனும் புதைகுழிக்குள்
வீழ்வதன் காரணம் தான்
என்னவோ....?

உயிர்மாறி
உயிர் துடிக்கிறது
அவனோ உனை நினைக்க
நீயோ அவனை நினைக்க
உலகமே உங்களை
வாழ்த்துவதாக நினைப்பீர்கள்
ஆனால்....

நட்ட நடு வீதியிலே செல்லும்
தெருநாய் கூட உங்களை
உதாசினம் செய்யும் என்பது
உங்களுக்குத் தெரியுமா...?
காதல்தனைத் தவறென்று
யாரும் கூறார்...

கற்கும் வயதில்
காதல்தனைச் செய்தால்
உங்கள் இலக்குகள்
சிதறடிக்கப்படுமல்லவா!
மாணாக்கரே புரிந்து கொள்ளுங்கள்
புதுயுகம் படைக்கலாம் - இது
கற்பனையல்ல...
எந்தன் அனுபவமும் கூட....

**வல்வை. மு. ஆ. சுமன்**
யா/சிதம்பரக் கல்லூரி
வல்வெட்டித்துறை

# இலக்கியங்கள் காட்டும் உயர் வாழ்க்கைப் பண்புகள்

இன்று நமது மனிதகுலம் வேண்டி நிற்பது உயர் விழுமியம் பண்பாடுகளுடன் கூடிய ஒரு சிறந்த சமூகத்தினையே. அவ்வாறான ஒரு சமூகம் தான் வாழுவதற்கு தேவையான ஒழுக்க ரீதியான பண்புகளைத் தனது முன்னோரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கான ஒரு கிடைத்தற்கரிய செல்வமாக காணப்படுவதே இலக்கியமாகும்.

இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பழக்கவழக்கங்கள் என்பவற்றை படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி எம் முன்னோரின் உணர்வுகளின் பிரதிபலிப்புக்கள். அவர்களின் வாழ்க்கை முறையின் எச்சங்கள் இவ்வாறான இலக்கியங்கள் மனிதனின் உயர் விழுமிய மான வாழ்க்கைக்கு எவ்வாறான பண்புக் கூறுகளைக் காட்டுகின்றன. என நோக்குவோம்

இலக்கியத்தின் வளர்ச்சிப் படிகளில் சங்ககால இலக்கியங்கள் அறத்தோடு பொருந்திய காதல் வீரம் என்பவற்றைக் காட்டி நிற்கின்றன. சங்க இலக்கியமான நற்றிணையில் ஒரு பாடலானது மனிதன் எவ்வாறான நிலையில் முழுமையடைகிறான் என விளக்கி நிற்கின்றது.

ஆற்றுதலென்பது அலர்ந்தவற்குதவுதல்
போற்றுதலென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்
அன்பெனப்படுவது பேதையர் சொல் நோன்றல்...

இவ்வாறாக வறுமையுற்று வாடியோருக்கு உதவுதல் போற்றுதல் என்பது உறவு கொண்ட ஒருவரைப் பிரியாதிருத்தல் பண்பு என்பது உலக நடையறிந்து ஒழுகுதல் அன்பு எனப்படுவது பெண்கள் சொல்லும் சொல்லை மதித்தல் எனவும் அழகாகக் கூறுகின்றது.

சங்ககால ஆற்றுப்படை இலக்கியங்கள் பெரும்பாலான விழுமியக் கருத்துக்களைக் கூறுகின்றன. கூத்தராற்றுப் படை நூலில்...

கோன் முறை பிழைத்தால்
கேடினும் தீமை உக்கும்
வாடிக் கொண்டிலர் உண்டிக்கு
அனைமாமிட்டவர் கோடி பெற்றவரே....

என அரச ஆட்சி ஒரு நாட்டில் குழப்பமானால் பல தீமைகள் உண்டாகும். அத்துடன் பசியினால் வாடி நிற்கும் ஏழைகளுக்கு அமுது இட்டவரே மிகப் பெரிய பேறு பெற்றவர் எனக் கூறுகின்றது. இப்பாடலடியான சங்கமருவிய கால நாலடியார் நூலில் காணப்படும் பின்வரும் பாடலடியினை ஒத்ததாக காணப்படு கின்றது.

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடமை
தானம் தவமுயற்சி தாளாண்மை
தேனின் கசிவந்த சொல்லியர் மேல்
காமுறல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்"

இந்நூல்கள் அனைத்தும் தனிமனிதனதோ சமூகத்தினதோ உயர் விழுமிய வாழ்க்கையை வேண்டியே எழுதப்பட்டன.

சங்கமருவிய கால நாலடியார் நூல் ஒரு விழுமியப் பொக்கிசமாகக் காணப்படுகின்றது. அறத்தோடு பொருந்திய திருந்திய வாழ்க்கை முறையினை அது எடுத்து இயம்புகின்றது.

"கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிக மானமுன் இனிதே
எட்டுணையானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிதே"

அதாவது கற்றோர் முன்னிலையில் தான் பெற்ற கல்வியைக் கூறுதல், நல்லவர்களுடன் சேருதல் எந்த வேளையிலும் எளியோருக்கு உதவுதல் என்பன சிறந்த பண்புகளாக கூறப்பட்டுள்ளன.

கற்றறிந்தோர் சபை தனிலே பணிவுடன் நடந்து கொள்வதே கற்றோனுக்கு அழகு எனக் கூறுகின்றது.

"அட்டாலும் பால் சுவையிற் குன்றா......
..........கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே"

என உயர் பண்புகளைக் கொண்டோர் எவ்வாறான இடர் வரினும் தமது நிலையிலிருந்து தாழ்ந்து விட மாட்டார்கள் என்பது தெளிவாகின்றது.

திருக்குறள் உலகமெல்லாம் போற்றப்படுகின்ற அரிய பொக்கிஷம் விழுமியத்தை தன்னகத்தே கொண்டு மிளிர்ந்து நிற்கின்றது. "அன்புடமை" அதிகாரத்தில்

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" என அன்புடையவர் தமது எலும்பைக்கூட பிறர்க்கெனக் கொடுக்கக் கூடியவர்கள் எனக் கூறுகின்றது 'குடிமை' அதிகாரத்தில்.

"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தலிலர்" என உயர்ந்தவர்கள் பல கோடி பெறுமதியான பொருட்களைக் கொடுத்த போதும் தமது நிலையிலிருந்து தாழ்ந்து விடக்கூடாது எனக் கூறி நிற்கின்றது.

அக்கால இலக்கியங்களான மணிமேகலை ஏழைகளுக்கு உதவுதல் பற்றியும் சிலப்பதிகாரம் கற்பு நிலை குடும்ப வாழ்க்கை முறை என்பன பற்றியும் தெளிவாக கூறி நிற்கின்றது.

பல்லவர் பால பக்தி இலக்கியங்களில் மாணிக்கவாசகரின் திருப்பள்ளி யெழுச்சி உயர் விழுமியததைக் காட்டி நிற்கின்றது.

"வண்ணமேந்தினர் கையில் சுண்ணமேந்தினர்
நல்ல எண்ணமேந்தினர் அன்பு விடா
கிண்ணமேந்தினர் அறத்து உயிரழிக்கா
திண்ணமுடன் இன்பம் பெற்றனரே" என அறக்குரவர்கள் காலைப் பொழுதில் வழிபடும் போது நல்ல எண்ணங்களும் உயிர்களுக்கு தீங்கு செய்யாத எண்ணமும் கொண்டு வழிபட வேண்டும் எனவும் கூறப்படுகின்றது.

சோழர் காலத்தைய இலக்கியங்களில் விழுமியப்பண்பு மேலோங்கிக் காணப்படுகின்றன. மகாபாரதம் கம்பராமாயணம் என்பன இதற்கு சான்றுகளா கும். மகாபாரதம் விட்டுக்கொடுப்பு, குருபக்தி ஏனையோரை மதித்தல் என்பன வற்றைப் பறைசாற்றுகின்றன. கம்பராமாயணம் சமுக உறவுகள், அன்புப் பிணைப் புக்கள் என்பனவற்றைக் கூறுகின்றன.

நாயக்கர் கால இலக்கியத்தில் சிறப்பான பண்புகள் மறைந்த நிலையில் காணப்படுகின்றன.

"கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்
காடறியும் மறவனை நாடாள்வாய் என்றேன்
போர்முகத்தை அறியானை புலி என்றேன்
வழங்காத கையனை நான் வள்ளல் என்றேன்."

என கல்வியும் கொடைச் சிறப்பும் மனித வாழ்வின் உன்னத நிலைகளென கூறப் படுகின்றன.

ஆங்கிலேயரின் வருகையின் பின் இலக்கியங்களில் ஆன்மீகத்துடன் வேரூன்றிய விழுமியக் கருத்துக்கள் மேலோங்கிக் காணப்பட்டன. சமத்துவம் ஏனையோரை மதித்தல் என்பன சிறப்பான பண்புகளாக கூறப்பட்டன.

பாரதியின் கவிதைப் படைப்புக்கள் சிறப்பார்ந்த விழுமியத்தைக் கூறின.

"ஆணுக்குப் பெண் அவனியில் நிகரென
ஆனந்தங் கொண்டு கும்மியடி"

என பெண் விடுதலையைக் கூறி நிற்கின்றார் அத்துடன் சீதனக் கொடுமை யினையும் சாடி நிற்கின்றார். சாதிக்கொடுமையினையும் கூறுகின்றார். இவ்வாறாக இலக்கியங்கள் உயர் விழுமியங்களைக் கூறி நிற்கின்றன.

**ம. பத்மராஜ்**
ஆசிரியர்,
யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
யாழ்ப்பாணம்.

[2008ம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முத்தமிழ் விழா கட்டுரைப் போட்டியில் 1ம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.]

*கட்டடத் திறப்பு விழா மலர் சிறக்க வாழ்த்துவோர்.*


நிறோஜா கூல்பார்
வல்வெட்டித்துறை

கோபிக்கிருஷ்ணா உணவகம்
வல்வெட்டித்துறை

கிருபா ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

பவான் எலக்றிக்கல்
பொலிகண்டி கிழக்கு

றீம்ஸ் டி.வி. பிளாசா
பருத்தித்துறை(வியாபாரி மூலை)

சுஜீ மல்ரி சொப்
பருத்தித்துறை(வியாபாரி மூலை)

R.K. உணவகம்
பருத்தித்துறை

ராஜா ஜீவலரி
பருத்தித்துறை

விநாயகர் வைண்டிங் டெக்
பருத்தித்துறை

விக்கினேஸ்வரா நகைமாடம்
பருத்தித்துறை

அருள் சலூன்
பருத்தித்துறை

ரஜனி பீடா ஸ்ரோர்ஸ்
உடுப்பிட்டி

துர்க்கா தையலகம்
உடுப்பிட்டி

சைவ உணவகம்
உரிமையாளர் ம. ஜெயராசா
உடுப்பிட்டி

Multy Phone Shop
உடுப்பிட்டி

கரன் Food City
நாவலடி உடுப்பிட்டி

**அம்பிகா ஸ்ரோர்ஸ்**
நாவலடி உடுப்பிட்டி

**குயந்தன் குறிஞ்சி பல்பொருள் வாணிபம்**
வல்வெட்டித்துறை

**நிறோஷினி தையலகம்**
வல்வெட்டித்துறை

**கோ.சி. ஆடையகம்**
வல்வெட்டித்துறை

**பானு ஸ்ரோர்ஸ்**
வல்வெட்டித்துறை

**ராஜன் ஹாட்வெயர்**
பருத்தித்துறை

**ஜெயஸ்ரீ நகைத் தொழிலகம்**
பருத்தித்துறை

**மயில்வாகனன் தேனருவி**
பருத்தித்துறை

**ஜே. ஆர். எம். புடவை அகம்**
பருத்தித்துறை

**ஈஸ்வரி நகை அகம்**
பருத்தித்துறை

**ஜெயதாசா படமாடம்**
பருத்தித்துறை

**ஆசா தையல் அகம்**
பருத்தித்துறை

**ஸ்ரீ முருகன் பார்மசி**
பருத்தித்துறை

**வாசனா நகைத் தொழிலகம்**
பருத்தித்துறை

**தேவி தொலைத்தொடர்பகம்**
தும்பளை வீதி, பருத்தித்துறை

**ஆர்த்தி நகைத் தொழிலகம்**
தும்பளை வீதி பருத்தித்துறை

**CITY Medicals**

Jaffna.

**லிங்கேஸ் கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம்**

கட்டைப்பிராய்

**நியூ சோதி நகைத் தொழிலகம்**

சுன்னாகம்

**சத்சன் குகன் வேக்ஸ்**

ஆவரங்கால்

**சிவனருபன் பல்பொருள் வாணிபம்**

சாவகச்சேரி

**S.K சூஸ்லான்ட்**

சாவகச்சேரி

**S.K. Farm**

சாவகச்சேரி

**அம்பாள் கபே**

சாவகச்சேரி

**S.V. Murugesu**

154, Hospital Road, Jaffna.

**ஈஸ்வரபகவான் and Company**

Jaffna.

**சகானா உணவகம்**

யாழ்ப்பாணம்

**சண்முகம் அன்சன்ஸ்**

சாவகச்சேரி

**றெனி பல்முக்கு கண்ணாடி அகம**

சாவகச்சேரி

**சாஜ் உணவகம்**

சாவகச்சேரி

**வரதன் வேனர்ஸ்**

சாவகச்சேரி

**Abi Phone Shop**

கொடிகாமம்

**ஸ்ரீராம் பல்பொருள் வாணிபம்**

3ம் கட்டை கல்வியங்காடு

**அபர்ணா உணவகம்**

கல்வியங்காடு

**நிவேதன் பல்பொருள் வாணிபம்**

கல்வியங்காடு

**குகன் தையல் அகம்**

கல்வியங்காடு

**தர்சினி ஸ்ரோர்ஸ்**

கல்வியங்காடு

**சண்முகநாதன் எண்ணெய் மில்**

கல்வியங்காடு

**ரூபன் பல்பொருள் வாணிபம்**

கல்வியங்காடு

**M.K. சிந்தியா தையலகம்**

கல்வியங்காடு

**இராமசசி அழகு மாடம்**

கல்வியங்காடு

**சோபனா தேனீர் கடை**

நல்லூர் சந்தை

**க.செ.கணபதிப்பிள்ளை அன்சன்ஸ்**

நல்லூர்

**V.C சைவ உணவகம்**

நல்லூர் முத்திரைச்சந்தி

**சேது களஞ்சியம்**

நல்லூர்

**நல்லைக்கந்தன் விலாஸ்**

நல்லூர்

**வேலவன் மிக்சர்**

நல்லூர்

**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**

நல்லூர்

# நிலவு



வட்ட வட்ட வான் நிலவு
சுட்ட அப்பம் போல் நிலவு
எட்டி நிற்கும் பால் நிலவு
தொட்டு விடனும் வருவாயா!

மாலை வேளை வந்திடுவாய்
மனதுக் கினிமை தந்திடுவாய்
அமுதம் போல ஒளி தருவாய்
அழகுக் குவமை ஆகிடுவாய்

வான வீட்டில் வாழ்கின்றாய்
வாழ்வு முழுதும் நகர்கின்றாய்
நட்சத்திரம் தலைமையிலே
நாளும் காவல் புரிந்திடுவாய்.

**ஹி. ஹாகித்தியா**
யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை

# உலக போக்குகளில் ஏற்படும் மாற்றங்களை கருத்திற் கொண்டு கல்விப் புலத்திலும் சீர்திருத்தங்களை கொண்டு வரவேண்டும்

ஒரு நாட்டினுடைய சமூக பொருளாதார குறிகாட்டிகளுள் கல்வியானது முதலிடத்தை வகிக்கின்றது. கல்வியின் நிலையை அடிப்படையாகக் கொண்டு தான் ஒரு சமூகத்தின் காத்திரத் தன்மையை அளவிட முடியும். ஒரு நாட்டின் சமூகம் ஆரோக்கியமானதா? இல்லையா? என்பதை அந்நாட்டு மக்களினுடைய கல்வி அறிவை வைத்துத்தான் மதிப்பிடப்படுகிறது. ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை கல்வி அறிவில் குறிப்பிடத்தக்க இடத்தை வகித்தலும் பல்வேறு குறைபாடுகளையும் கொண்டுள்ளதை காண முடிகிறது. அத்தகைய குறைகளை சுட்டிக்காட்டி அக்குறைகளை தீர்க்கும் வழிமுறைகளையும் இக் கட்டுரை ஆராய்கிறது.

எமது நாடு தனிப்பெருமை பெற்ற ஒரு நாடாக மறுமலர்ச்சி பெறுவதற்கு இன்றைய கல்விக் கொள்கையில் பல்வேறு மாற்றங்களை செய்வது அவசிய மாக அமைகிறது. மாறிவரும் உலகக் கல்வி முறையின் செல்வாக்கு இலங்கை கல்வி முறையுடன் ஒத்துப் போவதற்கேற்ப கல்வி முறையில் நடைமுறை மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். கல்வியின் மேம்பாடு குறித்து ஆய்வு தொடர்பாக எண்ணப் பரிமாற்றங்கள் கல்வியியலாளர்களிடையே ஒத்த தன்மை யானதாக இருக்க வேண்டும். பண்பட்ட நோக்கங்களோடு கூடிய ஒத்த தன்மை, நல்லெண்ணம், கருத்தொருமைப்பாடு என்பன தற்காலச் சூழலில் கல்வியாலாளர் களிடையே ஏற்பட வேண்டும்.

கல்வித்துறை பல் பரிமாணங்களை உடையது. தற்போதுள்ள கல்வி முறைமை பலராலும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டுவரும் பின்னணியில் மாணவர்களுக்கு வினைத்திறனான கல்வியை ஊட்டுவது காலத்தின் கட்டாய மாக அமைகிறது.

சாதாரணமாக பரீட்சையை மையமாக வைத்தே மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்படுகிறது. பரீட்சையில் உயர் பெறுபேற்றை பெறவேண்டும். மற்றைய மாணவர்களுடன் ஒப்பிடும் போது தனது பிள்ளை சிறந்த அடைவைப் பெற வேண்டும் என்பதே இன்றைய ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரதும் வாதங்களாகும். இத்தகைய குறுகிய மனப்பான்மை யுடைய சிந்தனைகளால் மாணவர்கள் பலிக்கடாக்களாக்கப் படுகின்றனர் எனலாம்.

குறிப்பாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை எடுத்துக் கொண்டால் மாணவர்களை விட பெற்றோர்கள் படும் அவஸ்தைகள் சொல்லில் அடங்காதவை.

பெற்றோர்களின் ஆசையை நிறைவேற்ற பிள்ளைகளை பகடைகாய் களாகப் பாவித்து சதுரங்கம் ஆடுகின்றமை மிக வேதனையானதே. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி விட்டால் தமது பிள்ளை கல்வி

கடலின் கலங்கரை விளக்கை அடைந்து விட்டதாக போலியான நம்பிக்கை கொண்டு பிள்ளையையும் தமது சதி வலைக்குள் வீழ்த்துகின்றனர். இன்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் எத்தனை பேர் பல்கலைக் கழகம் சென்றுள்ளனர்கள் என கணக்குப் பார்த்தால் மிகமிக சொற்ப அளவினரே என்பது விடையாக வரும்.

ஆனால் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறாத எத்தனையோ மாணவர்கள் இன்று பல்கலைக்கழகம் சென்று உயர்ந்த நிலையில் இருக்கின்றனர் என்பது கண்கூடு.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர கல்வி முறைகளிலும் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

பொதுவாக நோக்குமிடத்து இன்று ஏட்டுக் கல்வியே மேலோங்கிக் காணப் படுகிறது. அதாவது குறித்த பாடத்தை அல்லது விடயத்தை மாணவர்கள் மீது திணிக்கும் திணிப்பு முறை கல்வியே முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களது ஆளுமையைப் பொறுத்து அறிவுத் திறன்களும் வேறுபடுகின்றது. எனவே அறிவுத் திறன்களை இனங்கண்டு

அவ் அறிவுத் திறன்களுக்கு ஏற்பவே கல்வி போதிக்கப்பட வேண்டும். இது இவ்வாறில்லாமல் எல்லா அறிவுத் திறன்களில் வேறுபட்ட மாணவர்களுக் கும் ஒரே தன்மையதாக கல்வி புகட்டும்போது எல்லா மாணவர்களும் புரிந்து கொள்ள முடியாமல் திண்டாடும் நிலையே காணப்படும். இதனால் தான் கல்விப் பொதுத்தராதரபத்திர பரீட்சைகளில் சில மாணவர்கள் திறமையைக் காட்ட ஏனையோர் தமது திறமையை வெளிப்படுத்த தவறி விடுகின்றனர். இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் அனைவருக்கும் ஒரே தன்மைய தாக ஒரே விடயத்தை ஒரே மாதிரி கற்பித்தாலும் சில மாணவர்கள் மட்டும் பரீட்சைகளில் சித்திபெற மற்றையவர்கள் சித்தியெய்யத் தவறி விடுகின்றனர். காரணம் மாணவர்களின் அறிவுத்திறனுக்கேற்ப கல்வி போதிக்கப்படாமையே காரணமாகும். இதற்கு மாணவர்களை குற்றம் சாட்டி பலனில்லை. எனவேதான் கல்விமுறையில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும்.

பாடசாலை கல்வியூடே குடும்பம். சமூகம், நாடு என்பன விருத்தியுற முடியும் என்பதால் பாடசாலைக் கல்விமுறையில் பல்வேறு விடயங்களை சேர்க்கவேண்டும். அதாவது ஏனைய தனியார் நிறுவனங்களில் கல்வி கற்க கூடியதாக இருந்தும் பாடசாலைக் கல்வியே மாணவர்களுக்கு அங்கீகாரத்தை வழங்குகிறது. எனவேதான் பாடசாலைகள் கல்வி வழங்கும் நிறுவனங்களில் முதன்மை வாய்ந்ததாக சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிறுவனங்களாக திகழ்கின்றன.

இத்தகைய பாடசாலை கல்வி முறையில் காணப்படும் சில குறைபாடுகள் குறிப்பிடக் கூடியவையாக இன்றைய கல்வியியலாளர்களால் முன் வைக்கப்படுகிறது.

இன்றைய மாறுபட்ட சூழலில் பாடசாலைக் கல்விமுறை பல நோக்கங்

களை நிறைவேற்றவில்லையென்றும் பயனற்றது என்றும் இயந்திரப் போக்கான அங்கு கட்டாயமாக திணிக்கப்படும் கல்வி முறையாக காணப்படுகிறது என்றும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக சான்றிதழைமையமாகக் கொண்டு விளங்குவதால் உண்மையான கல்வியின் அடைவை எதிர்பார்க்க முடியாதுள்ளது.

கல்வி நிறுவனங்கள் வழங்கும் அறிவு நிகழ்கால, எதிர்கால தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை. அதுமட்டுமன்றி வினைத்திறனுடன் வழங்கப்படுவதுமில்லை என்ற கருத்து நவீன கல்விச் சிந்தனையாளர்கள் மத்தியில் காணப்படுகிறது.

இத்தகைய செயற்பாடுகள் மாணவனின் பரிணாம வளர்ச்சிக்கு வழி செய்யாமல் மனித சமூகத்தை துண்டு போடச் செய்யும் பணியை செய்கிறது எனலாம். இதனால் ஒரு சிலரே இறுதியில் உயர்கல்வி கற்று நல்ல வேலையில் இருக்க ஏனையோர் கீழ்மட்ட நிலையிலிருந்து தமது வாழ்க்கையை சூனிய மாக்கிக்கொள்ள வழிவகுக்கும். எனவேதான் மாணவர்களின் பல் பரிமாண ஆளுமை அறிவை கருத்திற் கொண்டு சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

கல்வியின் முக்கியத்துவம் மாணவர்களது அடக்குமுறையிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட அவனது ஆளுமையை விருத்தியுற செய்ய வேண்டும்.

மாணவர்கள் யாவரும் ஒரே விதமான அறிவு, ஆற்றல், விவேகம், மனப் பாங்கு என்பவற்றில் சம தன்மையுடையவர்கள் என்று கருதாது ஒவ்வொரு மாணவனின் தனித்தன்மைக்கு ஏற்ப கல்வி புகட்டினால் சமூதாயத்தில் சிறந்த ஒருவனாக ஆக்க முடியும்.

குறகிய பாட ஏற்பாடுகளைக் கொண்டு மாணவர்களை பரீட்சிக்கும் அல்லது அடுத்த நிலைக்கு தயார்படுத்தும் பணியில் பாடசாலைகள் ஈடுபாடு காட்டாமல் மாணவர்களது புறநிலை செயற்பாடுகளிலும் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபாடு காட்ட வேண்டும். நவீன கல்விச் சிந்தனையாளர் களில் ஒருவரான John holt என்பவர் பின்வருமாறு கூறுகிறார். "நான் எனது அறிவில் பெரும்பாலான பகுதியை பாடசாலைக்கு வெளியே பெற்றேன்" என்று கூறுவதிலிருந்து தனியே பாடசாலைகள் அறிவை வளர்க்கும் இடமாக கருதக் கூடாது என்பதாகும்.

மாணவர்களின் சுயசிந்தனை மற்றும் படைப்பாற்றல் என்பவற்றின் வளர்ச் சிக்கு கட்டாய கல்விமுறை தடையாக அமைகின்றன. ஏற்கனவே தயாரிக்கப் பட்ட பாட ஒழுங்குகள் அதில் அடங்கியுள்ள விடயங்களை மாணவர்கள் ஏற்கச் செய்யும் அளவுக்கு அமையாமல் மாணவனின் தனித்தன்மைக்கு ஏற்ப அவனது படைப்பாற்றலை விருத்தியுறச் செய்வதற்கு பாட ஏற்பாடுகள் அமைய வேண்டும்.

அதாவது சான்றிதழை மையமாகக் கொண்டு கல்வி முறையை நடை முறைப்படுத்தாது புற உலகை துரவி ஆராயும்படி மாணவர்களுக்குக் கூடிய

சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். சுயமாகக் கற்கும் வாய்ப்பு வசதிகளை அளிக்க வேண்டும்.

அடுத்ததாக சமூகவியலாளர்களால் பெரிதும் குறையாக சுட்டிக்காட்டப் படும் விடயமாக அமைவது கல்வி தகுதிக்கேற்ப வேலை வழங்கப்படுவதில்லை. இது மிகப்பெரும் குறையாகும்.

மாணவர்களின் ஆளுமைக்கும் அறிவு மனப்பான்மைக்கும இன்றைய கல்விச் சான்றிதழுக்கும் தொடர்பில்லை. எனவே கல்விச் சான்றிதழை மட்டும் வைத்து வேலை வழங்காமல் ஒருவனுடைய தொழிற்தகுதி அறிவு ஆற்றல் ஆர்வம் என்பவற்றை மையமாக வைத்து வேலை வழங்கப்படவேண்டும். வாழ்க்கை கற்றல், தொழில் ஆகிய மூன்றும் ஒன்றிணைய வேண்டும். ஆனால் இன்று நிலைமை பாரதூரமாகவே உள்ளது.

பல வருடங்கள் செலவு செய்து உயர்கல்வியை கற்றவர்கள் தகுதிக் கேற்ப வேலை கிடைக்காமையும் தகுதியிருந்தும் ஒரு வேலையும் கிடைக்காமல் பட்ட மரங்களாக காயும் பட்டதாரிகளின் நிலைமையோ படுமோசமான நிலைக்கு இந்நாட்டை தள்ளிவிட்டுள்ளது. மாணவர்களின் திறமைக்கேற்ப கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தாமல் ஏராளமான மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு குறிப்பிட்ட துறைகளுக்கு உள்வாங்கப்படுகின்றனர். அது மட்டு மல்லாமல் வெளிவாரியாகவும் பரீட்சைக்கு தோற்றி பட்டதாரிகளாக உருவாக்கப் படுகின்றனர். இதனால் கடினமாக படித்து உள்வாரியாக பல்கலைக்கழகத்தில் படித்து வெளியேறுவோரும் வெளிவாரியாகப் படித்து முடித்து விட்டு வெளியேறு வோரும் ஒரே தன்மையில் பட்டதாரிகளாக நோக்கப்படுகின்றனர். இதனால் பல்கலைக் கழக அனுமதி கிடைக்காத ஏராளமானோர் வெளிவாரியாகத் தோற்றி பட்டதாரியாகின்றனர். இவ்வாறு வெளிவாரியாக தோற்றுவோரை குற்றம் காணவில்லை. சிலர் திறமையிருந்தும் பல்கலைக் கழக அனுமதி கிடைக்காது ஓரிரு புள்ளிகளால் பல்கலைக்கழக அனுமதியை தவற விட்டவர்களாக இருக்கின்றனர். ஆனால் பலர் பல்கலைக் கழகங்களில் இடம்பெறும் முறைகேடு களை பயன்படுத்தியும் பட்டம் பெறுகின்றனர். இதனால் திறமையானவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இது எவ்வகையிலும் ஏற்கமுடியாது.

இதனால் யாரும் பட்டதாரி யாகலாம் என்ற சிந்தனைப்போக்கும் பட்டதாரி களின் எண்ணிக்கையும் கூடி வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும்.

அதுமட்டுமன்றி இன்று உயர்கல்வி கூடங்களாக விளங்கும் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் தேர்வு முறையில் முறைகேடுகள் இடம் பெறுகின்றமை யால் பல்வேறு சிக்கல்கள் தோன்றுகின்றன. பிரச்சினையை தீர்க்கும் வகையில் அறிவை பாகுபடுத்தி உணரும் திறனையோ திறனாய்வுச் சிந்தனையையோ சோதிப்பதை விடுத்து இரக்கமற்ற முறையில் மாணவர்களின் நினைவாற்றலை சோதிப்பதாகவே அமைகிறது. அதுமட்டுமன்றி தனிப்பட்ட ரீதியிலும் மாணவர்கள் பழிவாங்கப்படுகின்றனர். இதனால் திறமை மிகு மாணவர்களின் ஆற்றல்கள் மண் மூடும் சுவடுகளாக தடம் தெரியாமல் மறைகின்றன.

வேலை பெறுவது தேர்விலே வெற்றி பெறுதலோடு இணைந்துள்ளது.

குறிக்கோள்களை அடைய எந்த முறைகளையும் கையாழலாம் என்றாலும் வேலைக்கும் அறிவுக்கும் இடையிலுள்ள இடைவெளி அதிகரிக்காமல் இருக்க வேண்டும். குறுக்குவழிகளிலும். தவறான முறைகளிலும் அறவுணர்வே இல்லாத உத்திகளாலும் ஈடுபடும் காரணத்தால் இக்கால கல்வி முறை கேலிக்குரியதாகி விடுகிறது. எனவே சமூதாயத்துக்கேற்ப கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். அதற்குரிய வகையில் பல்கலைக்கழக கல்வி வாழ்க்கையுடனும் சமூகத்துடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். போதிய தரமில்லாத பட்டதாரிகளை உருவாக்கும் தொழிற்சாலையாகப் பல்கலைக்கழகம் அமைதல் கூடாது. என்பதே அனைத்து கல்வியியலாளர்களின் எதிர்பார்ப்பு.

முற்காலங்களில் பல்கலைக்கழகங்களால் உற்பவிக்கப்பட்ட பட்டதாரி களுக்கும் தற்போது வகை தொகையின்றி உற்பத்தி செய்யப்படும் பட்டதாரி களுக்குகிடையே அறிவு ஆற்றல் ரீதியில் செயற்திறன் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் என்ற ரீதியில் பாரிய வித்தியாசங்கள் காணப்படவே செய்கின்றது. எனவே இவ்வகை இடைவெளியை நிரப்புவதற்கு பொறுப்பு வாய்ந்த கல்விக் கொள்கை வகுப்பாளர்கள் சிந்தித்து செயற்பட்டால் பட்டதாரி கள் சமூகத்தின் சிறந்த கல்விமான்களாக அறிவாளிகளாக மதிப்புக்குரியவர் களாக திகழ்வார்கள்.

எனவே இறுதியாக மாணவர்களைப் பொறுத்தளவில் கல்விக்காக செலவு செய்யும் அரிய ஆண்டுகள் தம்மை நோக்கியுள்ள எதிர்கால வாழ்க்கையின் பொறுப்பான கடன்களுக்குத் தகுதியாக்கிக் கொள்ளும் காலமென்பதை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். அது உண்மையிலே விரும்பத்தக்கதும் தேவை யுடையதுமாகும்.

தற்கால போக்குக்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் செயன்முறைகளுக்கப்பால் மாறிவரும் தகவல் தொழிநுட்ப உலகில் ஆராய்ச்சிக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இன்று இந்தியாவில் அனைத்து கல்விக் கூடங்களிலும் ஆராய்ச்சி சம்பந்தமான கல்வி முறைகள் வேகமெடுத்துள்ள சூழ் நிலையில் இங்கும் கற்பித்தலும் ஆராய்ச்சியும் இணைந்து செல்ல வேண்டும். இல்லையேல் அவை தனிமைப்பட்டு வாடிவிடும். எனவேதான வேளாண்மை, தொழில், வணிகம், போக்குவரத்து என அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை யும் முன்னேற்றத்தையும் காணலாம். இதுவே மனித வாழ்வின் பெருமைக்கும் சிறப்பிற்கும் பொருத்துடையதாகும். அதுமட்டுமன்றி மேற்படி துறைகளில் முன்னேற்றம் பெறுவதற்கு அறிவுத்திறனுடன் ஆன்மிகமும் இணைந்து சென்றால் தான் எல்லா முயற்சியிலும் வெற்றி கிடைக்கும். இது கடந்தகால முயற்சிகளு டனும் வருங்கால துணிவுகளுடனும் பிணைக்கக் கூடிய வலிமை பொருந்திய தாக அமைகின்றது. என்பதையும் ஏற்கத்தான் வேண்டும்.

*ஆக்கம்:*

**S. நதிபரன்** {B.A(Hons)}
நல்லூர்.

## *கலைந்து போன கனவுகள்...*



இசையால் வசமாகா இதயம் எது?
இறைவனே இசை வடிவம் எனும் போது,

இசையின் பிரம்ம தேவனே! - உன்னால்
படைக்கப்பட்ட நாம் சிகரமாய்
இந்தப் பூமியிலே கொண்ட வெற்றிகள்
ஒன்றிரண்டா எப்படிக் கூறுவென்.

அன்றைய காலத்தில் இப்படியும்
ஆசைகள் பரந்து கிடத்ததுதான்
வான் வெளி பார்க்க வேண்டும்
நிலவில் நிலாச் சோறு உண்ண வேண்டும்
ஆகாயத்தில் காற்றாய் பறக்க வேண்டும்
என கற்பனைகளைப் பூட்டி வைத்தோம்.

ஆனால் இன்றைய நேரங்களில்
அன்றைய கற்பனைகளைக் கலைத்து
நிழல் முகங்களை நிஜமாக்கி
வான்வெளி மேலே நின்று
நிலவோடு கதை பேசி
நிஜத்தோடு உறவாடி
அண்டம் தாண்டிப் பறக்கின்றேன்.

நான் கொண்ட சாதனைகளை
ஒருமுறை எட்டிப் பார்த்து
புத்தகத்தில் பேனாவுடன்
கம்பனது காவியம் போல...
என் வரலாற்றை இங்கே பதிக்கின்றேன்.

**ஜெ. ஜெகசுகிர்தன்**
யா/நெல்லியடி ம.ம.வி.
(2011 A/L)

# துடுப்பு

விமானம் மேலே மேலே பறந்து கொண்டே இருக்கிறது. ரகுவின் நினைவுகளும் அது போலவே பறந்து கொண்டிருந்தது. இன்னும் சில மணிகளில் அவன் தன் தாய் மண்ணை முத்தமிடப் போகின்றான். இருந்தும் அவன் நெஞ்சில் பொய்யாக கூட சந்தோசம் துளிர்க்கவில்லை. ஓடத்தின் விளிம்பில் இருந்து தவிக்கும் எறும்பாய் மனம் அங்கும் இங்கும் அலை பாய்ந்து மெல்ல மெல்ல தன் இயந்திர வாழ்வை மறந்து மெய் வாழ்வை எண்ணி பெருமூச்செறிந்தான்.

அம்மா. அப்பா, தங்கை என அழகான நந்தவனம் அவன் வாழும் வீடு. அம்மா லட்சுமி என்றும் அப்பா சிவநாதனின் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவள். இவர்களின் அன்பு செல்வங்கள் ரகுராம், ராதா எல்லோருடைய வாழ்க்கை போன்று அவர்களுடையது. சந்தோசத்துக்கு குறைவற்ற வாழ்வு. அலுவலகம் ஒன்றில் கணக்காளராய் பணிபுரியும் அப்பா. வெளியில் அனைவரின் மரியாதைக்கும் உரியவர். ஆசைக்கு ஓர் மகன் ஆஸ்திக்கு ஓர் மகள். ஆதலால் வீட்டில் சிவநாதன் தன் பிள்ளைகள் மேல் உயிரையே வைத்திருந்தான்.

சிறுவயதில் இருந்தே துடிப்பு மிக்க சிறுவனாகவே ரகு வளர்ந்தான். சாதாரண தரம் வரையில் ஒரே பாடசாலையில் மிகுந்த கெட்டிக்காரனாய் படித்து வந்த ரகு உயர்தரத்தில் வேறு பாடசாலைக்கு மாறியபோது அவனுடன் வெவ்வேறு இடங்களை சேர்ந்த நண்பர் கூட்டமும் சேர்ந்து கொண்டது. காரணம் ரகு கல்வி கற்ற பாடசாலை அவர்களின் வீட்டில் இருந்து வெகு தூரத்தில் இருந்தது. தன் மகன் கெட்டிக்காரன் என்பதால் சிவநாதனும் பலத்த கஷ்டப்பட்டு ஒருவாறு அந்தப் பாடசாலையில் அனுமதி பெற்றுக் கொடுத்தார். ஆரம்பத்தில் படிப்பில் ஆர்வமாய் இருந்த ரகு பின்னர் தன் நண்பர் கூட்டத்துடன் சிறிது சிறிதாக ஒன்றிக்க தொடங்கினான். முதலில் தியேட்டரில் படம் பார்க்கவே அப்பாவிடம் வேறு காரணங்களுக்கு என பணம் வாங்கிய ரகு பின்னர் அப்பாவின் அனுமதி இன்றி பேஸ்சினுள் தானே எடுத்துக் கொண்டான். வீட்டிலிருந்த கைத் தொலைபேசியை தனதாக்கிக் கொண்டான். சின்ன பிள்ளை தானே என யாரும் அவனை கண்டிக்கவில்லை. பின்னர் ரகு பெரியளவில் குடி, சிகரெட் என தன்னை அதற்குள் புகுத்திக் கொண்டான். தாமதமாகி வீட்டுக்கு வந்து ரியூசன் விட தாமதம் என யாரும் கேட்காமலே சொல்லிக் கொண்டான்.

பல நாள் திருடன் ஓர் நாள் அகப்படாமலா போய்விடுவான்... ரகு நேரடியாக தன் தந்தையின் கண்ணிலே அகப்பட்டுக் கொண்டான். ரகுவை பேசியும் புத்திமதி கூறியும் அவன் திருந்தியதாய் நடித்தானே தவிர திருந்தவில்லை. அதற்கு அவன் நண்பர்கள் விடவும் இல்லை. சிவநாதன் சிலநாள் யோசனையின் பின் நிதானமாய் ஓர் முடிவுக்கு வந்தார். ஆரம்பத்தில் தன் குழந்தைகளை வெளிநாடு அனுப்ப கூடாது என்று பிடிவாதமாய் இருந்த சிவநாதன் இறுதியில் தன் குடும்ப மானத்தை காப்பாற்ற ரகுவை தன் அண்ணனின் உதவியுடன் வெளிநாடு (கனடா) அனுப்பி வைத்தார்.

அதன்பின் சிவநாதன் நிம்மதியாய் இருந்தார் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் கஷ்டப்படும் போது தன் தவறை புரிந்து கொள்வான் என நம்பினார். அவர் நம்பியது ரகு போய் ஒரு மாதத்திலேயே நடந்தது. ரகு தனியாக இருந்த போது படிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். ஏனெனில் அவன் படிப்பில் ஆர்வம் உள்ளவன். ஆனால் அவன் ஆசை நிறைவேறவில்லை. அன்றாடம் சாப்பிடு வதற்கே அவன் உழைப்பு போதும் என்றாகியது. தான் செய்த தப்பை எண்ணி மனம் நொந்தான்.

அம்மாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் கவலைகளை கூற எண்ணியும் அவனது ஆண் புத்தி அவனை விடவில்லை. தான் சுகமாய் இருப்பதாய் கண் கலங்கியவாறே கூறி முடிப்பான். நிலத்தில் படுத்துக் கொண்டே பஞ்சு மெத்தையில் உறங்குவதாய் பொய் சொல்லுவான். சமைத்தல் என்றால் என்னவென அறியாதவன் மூன்று வேளையும் சமைப்பதாய் தம்பட்டம் அடித்து தாயை சந்தோசம் அடைய வைத்து தானும் சிரிப்பான். லட்சுமிக்கோ தன் மூத்த மகனை பார்க்க ஆசை, ஏக்கம். ராதா ஒரு ஆசிரியராய் பணிபுரிந்தாலும் திருமண மாகி வேறு வீட்டில் வாழ்ந்து வந்தாள்.

லட்சுமியின் ஏக்கத்தை சிறிது குறைக்க அந்த வீட்டிலும் ஓர் ஜீவன் இருந்தது. ஆனாலும் லட்சுமி தன் கணவரை கேட்டு தன் மகனை ஊருக்கு வர வழைக்க சொன்னாள். சிவநாதனும் மறுக்காமல் தலையாட்டியவர் ரகுவிடம் கேட்க சங்கடப்பட்டார். ஆனால் லட்சுமி மரண படுக்கையிலும் ரகு ரகு என உளறியபோது சிவநாதன் உடனடியாக ரகுவை ஊருக்கு வரவழைத்தார்.

இதோ... விமானம் தரையை தொட்டுவிட்டது. ரகு விழித்துக் கொண்டான். ஊருக்கு போனதும் தன் தாயிடம் சொல்லி இனி ஊரில் இருக்க விரும்பினேன். படித்தவனுக்கே வெளிநாடு சொர்க்கம். தன் போன்ற படிக்காதவர்களுக்கு அது பிச்சை போடும் பூமி என்று எண்ணியவனாய் மீண்டும் ஊருக்கு விமானம் ஏறி இப்போது வீட்டு வாசலில் ரகு...

அவனை வரவேற்க அவன் குடும்பம் மட்டுமல்ல வேறு பலரும் ஆவலோடு நின்றனர். அனைவரும் துயரத்தின் விளிம்பில் நிற்பது ரகுவை என்னவோ செய்தது. மெல்ல வீட்டினுள் நுழைந்தவன் அதிர்ந்து போய் பின்னால் நகர்ந்தான். அலங்கரிக்கப்பட்ட பூக்களின் நடுவே லட்சுமி அமைதியாய் இறுதி தூக்கத்தில் இருந்தாள். தன் உயிரையே இழந்ததாயை எண்ணிய ரகு தான் அநாதையாய் போனதை உணர்ந்து அழுது புலம்பினான். இறுதியில் எல்லாம் முடிந்துவிட்டதை உணர்ந்து அவன் புலம்பிய போது அமைதியாய் ஓர் உருவம் அவன் கண்ணில் கையில் ஊன்றுகோலுடன் ..... பார்த்து பழகிய அந்த முகத்தை அவன் ஞாபகம் படுத்திக்கொண்டான். அங்கே சீதா மெல்ல எழுந்து மறைந்தாள்...

சீதா அவனுடன் கூட படித்திருந்தாலும் அவள் அப்பாவின் சகோதரி மகள். என்பதால் அவளுடன் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வான். இன்று சுனாமியில் தாய் தந்தையை இழந்த சீதா லட்சுமியுடன் இருந்து படிப்பை நிறுத்தி விட்டு லட்சுமியை கவனித்துக் கொண்டாள். அம்மா ஆசைப்பட்டதை அப்பா ரகுவிடம் கூறினார். ரகு முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டான். லட்சுமியின் ஆசீர்வாதத்துடன் சிவநாதனே அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்து வைத்தார். அப்போது ரகு கூறியது அங்கிருந்த அத்தனை உள்ளத்தையும் ஒரு கணம் கலங்க வைத்தது. “அப்பா சீதாவையும் உங்களையும் கண் கலங்காமல் பார்த்துக் கொள்வேன். என்னை மீண்டும் வெளிநாடு அனுப்பாதீர்கள். நான் உங்களோடு இருந்தே எனக்கு பிடித்த தொழிலை செய்து சந்தோசமாய் வாழப்போகிறேன்” என்று கூறினான். அவர் கண்கள் கலங்கியது. சீதா மெதுவாக ரகுவின் கைகளை துடுப்பாய் பற்றிக் கொண்டாள். கைத்தடி மெல்ல நழுவியது. ரகுவே இனி ஆதாரம் ஆனாள்.

**செல்வி. சூ. யாழினி**
ஆசிரியர்,
நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம்.

# சூரியோதயம்



ஆகாய வெளியில் இருள் நீங்க
ஆதவன் தலையை உயர்த்திடுவான்
தாவரத் தோழர் மனமகிழ
தன்முகம் காட்டப் புறப்படுவான்


மதிலின் மேலால் தலையை உயர்த்தி
மறைவாய் பார்க்கும் சிறுவன் போல
வான் மறைப்பில் தன் உடலை
வாகாய் மறைத்து அவன் பார்ப்பான்.

பகலவன் முகத்தைப் பார்த்தவுடன்
பறவைக் கூட்டம் வாழ்த்திசைக்கும்
மன்னன் அவனைக் கண்டவுடன்
மிருக ஜாதி வரவேற்கும்.

கொக்கரக் கோச் சேவல் ஒலியும்
கோயில் மணியின் டாண்டானும்
காகா எனும் காக்கா ஓசையும்
கதிரவன் வரவை அறிவிக்கும்.

**ஸ்ரீ. ஸ்ரீஷங்கவி**
யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை
பருத்தித்துறை

# நாளையும்...



நாய்களின் குரைப்புகளின் இடையே
காதுகளைத் தொடுகிறது
சுடலைக் குரவியின் அலறல்
வீடுகளுக்குள் முடங்கிய

விழிகளில்
பயத்தின் சாயல் படிந்திருக்கிறது
மாலையில் பெய்த மழையின் ஈரத்தால்
தெருவில்
அடையாளங்கள் நன்கு பதிந்திருக்கும்
வருகையின் பதிவை
இன்னொரு மழை அழித்துவிடும்
இழப்பின் அறிக்கையை

வரலாறு உள்வாங்கிக் கொள்ளும்
நாளையும்.....
நாய்குரைக்கும்
சுடலைக் குருவி அலறும்...

இ. சு. முரளிதரன்

# சமூகத்தில் ஆசிரியர்களின் பங்கு

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் விஞ்ஞான தொழில்நுட்ப சமூகமாகும். மேற்குலக நாடுகள் இதில் முன்னணியில் திகழ்ந்தாலும் வளர்முக நாடுகளிலும் கைத்தொழில் விவசாயத் துறைகளில் விஞ்ஞான தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். இன்று நவீன சமுதாய அமைப்பில் அறிவு படைத்தவர்களே செல்வாக்கும் அந்தஸ்தும் உடையவர்களாக விளங்கு வதனை நாம் காணுகின்றோம். இத்தகைய அறிவு படைத்தவர்கள் சமூக அந்தஸ்து உடையவர்களாக விளங்கக் காரணம் அவர்களை உருவாக்கிய ஆசிரியரே என்றால் மிகையாகாது. இந்த வகையில் மனித சமுதாயத்தில் ஆசிரியர் வகிக்கின்ற முக்கிய பங்கினை உய்த்துணர முடியும்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற கூற்றிற்கிணங்க குருவானவர் சமூகத்தில் கடவுளாக மதிக்கப்படுகின்றார். மாதா, பிதா, குரு, தெய்வம்... முதலிய ஐங்குரவர்களுள் குரு தந்தை தாய்க்கு அடுத்தவராக காணப்படுகின் றார். எதிர்காலச் சமூகம் ஒன்றை கட்டி எழுப்புகின்ற பொறுப்பும் பணியும் ஆசிரியர்களிடையே தங்கியுள்ளன. நாட்டினதும், சமூகத்தினதும் அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு அரசினால் மேற்கொள்ளப்படும் கல்விச் சீர்திருத்தங்கள் வெற்றிகரமானவையாகவும் செயல், திறன் மிக்கவையாகவும் விளங்க வேண்டுமாயின் ஆசிரியர்களின் பங்களிப்பு இவ்விடயத்தில் முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுவதனை உணரலாம். கல்விக் கொள்கைகளும் சீர்திருத்தங்களும் உயர்மட்ட உத்தியோ கத்தர்களினால் உருவாக்கப்பட்டாலும் அவற்றை வகுப்பில் நடைமுறைப்படுத்துபவர்கள் ஆசிரியர்களே. அவர்கள் தமது தொழிலைச் சரியாக செய்யாவிட்டால் அனைத்துமே அர்த்தமற்றதாகிப் போய் விடும். இந்த வகையில் கல்வியமைச்சின் அச்சாணியாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள் எனலாம்.

ஒரு சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் புதிய தலை முறையில் இருந்தே அதனை ஆரம்பிக்க வேண்டும். அப்போது தான் சரியான இலக்கை அடைந்து கொள்ள முடியும். இந்த வகையில் தங்களிடம் ஒப்படைக் கப்படும் மாணவ சமூகத்தை அறிவு மிக்கவர்களாகவும், ஆக்கத்திறன் உடைய வர்களாகவும் எதிர்கால உலகில் ஏற்படுகின்ற விஞ்ஞான தொழில் நுட்ப சவால் களுக்கு முகம் கொடுக்கத் தயாரானவர்களாகவும் மாற்றியமைப்பது ஒவ்வொரு ஆசிரியரினதும் தலையாய கடமையாகும்.

அதனால்தான் ஆசிரியர்கள் சகல துறைகளிலும் தேர்ச்சி உடையவர் களாக காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு கல்வியியல் துறையில் அவர்களது தேர்ச்சி மிக முக்கியமானதாகும். அதனால் தான் ஆசிரியர் களுக்கு அவர்களது பயிற்சியின் போது கல்வி உளவியல் கல்வி போன்றவை போதிக்கப்படுவதைக் காணலாம். ஆனால் வளர்ச்சியடைந்த மேலை நாடுகளில் பல்கலைக்கழகமொன்றில் கல்வியியல் துறையில் உயர்பட்டம் பெற்ற வர்கள் ஆரம்ப வகுப்புக்களில் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக நியமனம் செய்யப்படுவதனைக் காணலாம்.

நல்லாசிரியர்கள் என்றும் மாணவர்களால் மறக்கப்படுவதில்லை. பெற்றோர்களுக்கு அடுத்த படியாக இருந்து மாணவர்களின் உயர்வுக்காக பணி புரிவது ஆசிரியர்களே. ஆசிரியர்கள் ஊதியத்திற்காக பணிபுரிபவர்கள் அல்ல. எவ்வாறு பெற்றோர்களின் பணிகளும் கடமைகளும் பெறுமதிமிக்கதோ, அதே போன்று தான் ஆசிரியர்களது பணியின் பெறுமதியும் மதிக்க முடியாதது.

எனவே ஒரு சமூகத்தினுடைய அபிவிருத்தியைக் கல்வியினூடாகவே மேற்கொள்ள முடியும் என்பதனை அனைவரும் உணர்ந்துள்ள இக்காலகட்டத்தில் இத்தகைய கல்வியை வழங்கும் ஆசிரியர்களின் பங்களிப்பு சமூகத்தில் மகத்தானதாகும்.

**இ. சிவநந்தினி**
ஆரம்பக் கல்வி (2ம் வருடம்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

உண்மைக்காக எதையும் திறக்கலாம் ஆனால் எதன் பொருட்டும் உண்மையை திறத்தல் கூடாது. ஊண்மை, தூய்மை, சுயநலமின்மை, ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப் படுகின்றனவோ அவற்றை பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்ற ஒருவனை பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும். அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்குண்டு.



**சுவாமி விவேகானந்தர்**

நேருவே நாட பேரவை

# கல்லூரித் தாய்



என் தாய் அவள்
தா்மத்தின் தேவதை
மனதைக் கரையவைக்கும்
மகா நினைவுகளை
மலர வைப்பவள்.

கலைகளுடன் கல்வியை
கனிவுடனே பெறுவதற்கு
கலங்கரை விளக்கமாகி
கரங்கொண்டு காப்பவள்.



"சிந்தனை சொல் செயல்" எனும்
சீரிய கொள்கைகளை - என்
சிறிய உள்ளத்திலே
பதிய வைத்தவள்.

உயா்வு தாழ்வுகள்
சாதி மத பேதங்கள்
தூக்கி எறிந்து - இறைவனை
துதிக்க வைப்பவள்.

காலடியில் இருந்த என்னை
கரங்களிலே ஏந்தி
உணவும் உடையும்
உண்மையும் உறவும் தந்து
உயிர்கொடுத்து உயா்த்துபவள்.

முயற்சிகளுக்கு பயிற்சி கொடுத்து
பயிற்சிகளினால் உயா்ச்சி தந்து
இலட்சியக் கனவுகளை
ஏராளம் விதைத்தவள்.

ஆசிரிய சேவையினை
அனைவருக்கும் வழங்க
ஆளுமை விருத்தி தந்து உயா்வடைய
அத்திவாரம் இட்டவள்.

கோப்பாய் பதியினிலே
பாங்காய் விளங்கும்
கருணை கொண்ட அவளே என்
கல்வியும் கல்லூரித்தாய்.

**பா. சதீஸ்**
ஆரம்பக் கல்வி (2ம் வருடம்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

சிற்றிசன் வாச் அன்
றேடியோ எலக்ரோனிக்ஸ்

சுன்னாகம்

தாடஷா மல்ரி பெயின்ற்

சுன்னாகம்

ஸ்ரீகரி தையல் அகம்

கொக்குவில்

S.K.M.நகை மாளிகை

சுன்னாகம்

உமா ஸ்ரோர்ஸ்

சிவன் கோவிலடி யாழ்ப்பாணம்

குகன் நகைத் தொழிலகம்

லிங்கம் உலோகத் தொழிலகம்

கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பானம்

P.S.B. கொமினிகேசன்

337.கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்

கௌரி அழகு மாடம்

யாழ்ப்பாணம்

பிள்ளையார் பில்டிங்
வேக்ஸ்

யாழ்ப்பாணம்

சரகாஸ் சென்ரர்

யாழ்ப்பாணம்

நீலாம்பரி உணவகம்

யாழ்ப்பாணம்

AQVARIUM & Plant
Paradise

யாழ்ப்பாணம்

அம்பாள் மோட்டர்ஸ்

கே.கே.எஸ். றோட் யாழ்ப்பாணம்

டிலக்ஸ் எலக்றிக்கல்ஸ்
அன் கொமினிகேசன்

சுன்னாகம்

அருமை உணவகம்

ஜிம்மா பள்ளி வாசல் லேன் யாழ்ப்பாணம்

**ஐங்கரன் கூல்பார்**

கொடிகாமம்

**The Phone Shop & Commission Agent**

திருநெல்வேலி

**அபிராமி ஜீவலரி**

கொடிகாமம்

**ஜெயம் சைவஉணவகம் கூல்பார்**

யாழ்ப்பாணம்

**நியூ லலிதா நகைமாடம்**

யாழ்ப்பாணம்

**விநாயகர் பட்டுச்சோலை**

மானிப்பாய்

**The Phone Shop**

மானிப்பாய்

**றஞ்சன் ஸ்ரோர்ஸ்**

மானிப்பாய்

**சிவசோதி களஞ்சியம்**

சங்கானை

**ஆசைப்பிள்ளை அன்சன்ஸ் நகை மாடம்**

சங்கானை.

**சண் கபே உணவகம்**

கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்

**லிங்கம் ஜீவல்ஸ்**

கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்

**ஸ்ரீ முருகன் வைண்டிங் வேக்ஸ்**

நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

**கிருஸ்ணப்பிள்ளை அன்சன்ஸ்**

நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

**பரணி கிறீம் கவுஸ்**

கொக்குவில்

**மாதங்கி கூல்பார்**

சுன்னாகம்

**New Asoka Aluminijum Fitting Centre**

Specilist in Aluminum Door, Window,Cupboard,Show Case, And Fly Wood Works

T.P:-0773609034

63, K.K.S Road
Chunnakam

**ஸ்ரீ முதலி அம்பாள் தையலகம்**

ஆடைகளை நவநாகரீக
முறைகளில் பெற்றுக் கொள்ள எம்மை
நாடுங்கள்

ஆஸ்பத்திரி முன்பாக,கே.கே.எஸ். வீதி,சுன்னாகம்

**பிரியா ஜீவல்லர்ஸ்**

அழகு நகைகளின் தெரிவகம்

இல.3, பிரதான வீதி,
சித்தங்கேணி.

**ரூபன் எலக்ரிக்கல்ஸ்**

மின்சார பொருட்கள் மற்றும் போட்டோ பிரதிசேவை,
தொலைபேசிகள், தொலைபேசி உபகரணங்கள்
விற்பனையாளர்கள்.

No.01, Kandy Road,
Kodikamam.

**மொறாயஸ் ஒப்டிகல்ஸ்**

பல்முக்கு கண்ணாடியகம்

546, Hospital Road
Jaffna

T.P:-021 222 7893

**HOTEL ROLEX**

340, Hospital Road
Jaffna

T.P:-0217900018

**PARAMS MOTORS**

No. 113, Kandy Road,
Chavakachcheri

Mobile: 0777-743350

**சுஜீவா வைத்தியசாலை**

**SUJJEEVAAH CLINIC**

குழந்தையின்மை

இல 6 கலட்டி அம்மன் வீதி,
கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்.

**கஜன் இரும்பகம்**

**KAJAN HARD WARE**

220, K.K.S. Road,
Jaffna.

220,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**மோகன்**

**விடியோ அன் ஸ்ரூடியோ**

Jaffna Road,
Manipay.

## லக்சுமி ரேட் சென்ரர்

இல.31,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்

## அனோஜ் போன் சொப்

*Kit Mobital Relord*

சிம் காட், பற்றிகள்

ஹை.பஸ் நிலையம்
சாவகச்சேரி

## சிவன் அம்மை
## Game Center

*game C.D* களையும் பெற்றுக் கொள்ளலாம்

இல.963,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

## MODERN MEDICAL CLINIC
## நவீன வைத்திய நிலையம்

Dr.S.Tpuriraasan,
Cey Dilm &S(Cey M.De. M.A)

## அஜந்தாஸ்

கோவில் தேவைக்கான குடை,கொடி,ஆலவட்டம்,
திரைச்சீலை உற்பத்தியாளர் விற்பனையாளர்

T.P:-021 222 2899

54. பெரிய கடை வீதி
யாழ்ப்பாணம்

## டானியல் படமாடம்

சகல விதமான பட வேலைகளையும்
குறித்த நேரத்தில் செய்து
பெற்றுக் கொள்ளலாம்

இல.63.5,கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்

## ஸ்ரீ அம்பாள் ரேடர்ஸ்

ஆலயங்களுக்குத் தேவையான பொருட்களையும்
வீட்டுப்பாவனைப் பொருட்களையும்
பெற்றுக் கொள்ளலாம்

174.கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

## THEVANSON

**Sellers for Electrical Goods,
Fittings,PVC pipes etc**

57, K.K.S Road
Chunnakam

## றிஷானா தையலகம்

ஆண்கள், சிறுவர்களுக்கான ஆடைகளை நவநாகரிக
முறைகளில் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்

கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

## மிதுனா பாதணி

அன்பளிப்புப் பொருட்கள், பாட்டா, D.S.I பாதணிகள்,
மிதுனா தயாரிப்பு பாதணிகள்
என்பவற்றை பெற நாடுங்கள்

பிரதான வீதி
பருத்தித்துறை

# உண்மையின் உயர்வு

மணி ஒலிக்கிறது, வகுப்பறையில் ஒரே ஆரவாரமாக மாணவர்கள் நான் முந்தி நீ முந்தி என வெளியேறிய வண்ணமிருந்தனர். ஆனால் ஒருவன் மட்டும் ஏனோ வகுப்பறையை விட்டு வெளியே வர மனமில்லாமல் ஆசனத்தே அமர்ந்த வாறு எதையோ இழந்தவன் போல் உட்கார்ந்து இருந்தான். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு குரல் "ஏன்ரா ராமு உனக்கு வீடு போக மனமில்லையா... இங்கேயே உட்கார்ந்து இருக்கிறாயே" என்று கூறியபடி தன்னுடைய புத்தகப் பையை கையிலே எடுத்தவாறு அவன் பக்கம் திரும்பினான் மணி. மணியினுடைய கேள்விக்கு ராமுவிடமிருந்து எதுவிதமான பதிலுமே கிடைக்கவில்லை. தலையைக் கீழே போட்டவாறு அமையுடன் இருந்த ராமுவின் நிலையை உற்றுப் பார்த்தான் மணி. அவனருகில் சென்று தோளிலே கையை வைத்தான். "ஏனடா ராமு இன்று உனக்கு என்னவாயிற்று பித்துப் பிடித்தவன் போல் உட்கார்ந்து இருக்கிறாயே" என்று கூறி குனிந்தபடி இருந்த அவன் தலையை மெல்ல நிமிர்த் தினான். ராமுவினுடைய கண்கள் அழுது கொவ்வைப் பழம்போல சிவந்து இருந்தது. காட்டாறு பெருக்கெடுத்தோடுவது போல ஓயாது கண்ணீர் பெருகியபடி மணியின் கைகளை இறுகப் பற்றிப் பிடித்தான் ராமு. மணி திடுக்கிட்டுப் போனான். ராமுவின் குரல் தடுமாறியவாறு மணி மணி என்று விம்மினான். ராமு உனக்கு என்னவாயிற்று ஏன் இப்படி அழுகிறாய், கண்களை துடைத்துக் கொள் முதலில் அழுவதை நிறுத்து என்ன நடந்தது என்று கூறு என்றான்.

என்னை நீ நம்புகிறாயா மணி என்றான் ராமு. ஏன்ரா ராமு இப்படிக் கேட்கிறாய்... உன்னை நான் நம்ப மாட்டேனோ சொல்லு மேல என்று மணி கூற ராமு சொல்லத் தொடங்கினான். என்னை அதிபர் வரச் சொன்னதாகத் தலைமை வாத்தியார் வந்து சொன்னார். நானும் ஏன் என்று தெரியாமல் விழித்துப் போய் ஏன் சேர் என்னை அதிபர் கூப்பிடுகிறார். என்று பணிவாகக் கேட்டேன். எனக்கு எதுவுமே தெரியாது ஆனால் அவர் மிகவும் கோபமாக இருக்கிறார். என்று மட்டும் எனக்குத் தெரியுது. நீ என்ன செய்தனியோ எனக்குத் தெரியவும் இல்லை என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார். நானும் என்னவென்று தெரியாமல் அதிபரின் அறை வாசலிலே சென்று மெதுவாக "நான் உள்ளே வரலாமா சேர்" என்று பணி வாகக் கேட்டேன். "யாரு ராமுவா உள்ளே வா... உன்னைத் தான் நான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றான். ஏன் சேர் என்னை கூப்பிட்டனீங்கள் என்று வினாவினேன்.

அதற்கு அவர் ராமு நான் அறிந்தவரையில் நீ வகுப்பறையிலே கெட்டிக் காரன், நல்ல பிள்ளை பாடசாலையிலும் உனக்கு நல்ல பெயர்... ஆனால் நீயா இப்படி என்று கதிர் என்னிடம் முறையிட்டான். நானும் தலைமை வாத்தியாரிடம் இதுபற்றி விசாரித்த பொழுது இடைவேளையின் போது மாணவர்கள் எல்லோரும் வெளியே சென்றதும் தேடிப் பார்க்கலாம் என்று விட்டார். பின்பு நாம் அனைவரும் சென்றவுடன் எல்லோருடைய பையையும் பரிசோதித்த பொழுது உன்னுடைய பையில் இருந்து பணம் எடுக்கப்பட்டது. அப்பணம் கதிர் தன்னுடையது என்று கூறுகிறான். நீ என்ன சொல்கிறாய் ராமு என்றார். என்னிடம் இவ்வளவு பணம் ஏதுசேர். இது எனது இல்லை என்றேன். நான் இப்பணத்தை திருடவும் இல்லை சேர் என்று அழுதவாறு கூறினேன். இதற்கு அதிபர் உன்னுடைய பையில் இருந்து பணத்தை எடுத்தபடியால் ஒரு வாரம் உன்னை பாடசாலையில் இருந்து நீக்குகிறேன். பாடசாலைக்கு வரும்போது உன்னுடைய

பெற்றோருடன் சமூகமளிக்க வேண்டும். இல்லையேல் பாடசாலை யில் இருந்து ஒரேதாக நீக்கப்பெறுவாய். என்று கூறி நீ போகலாம் என்று சொல்லிவிட்டார். நானும் அழுதவாறு வந்து விட்டேன். சத்தியமாக என் அன்னை மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். இப்பணத்தை நான் எடுக்கவில்லை மணி என்று சொல்ல ராமு கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. நீ எதற்கும் கவலைப் படாத ராமு, வா வீட்டுக்கு போவம்... என்று சொல்லி அவனையும் கூட்டிக் கொண்டு போனான்.

ராமுவுக்கு அன்று இரவு முழுவதும் தூக்கமே இல்லை. காலை எப்பொழுது வரும் தலைமை வாத்தியாரை சந்தித்து இதுபற்றி கதைக்க வேணுமே என்று "இலகு கார்த்த கிளிபோல" கண்களிலே தூக்கமின்றியிருந்தான். காலை சேவல் கூவும் சத்தம் கேட்டதும் கடகடவென வெளிக்கிட்டு வெளியே போய் வருகிறேன் அம்மா என்று கூறிவிட்டு வீறுநடையுடன் தலைமை வாத்தியாரைப் பார்க்கப் புறப் பட்டான். தெருவோரமாகச் சென்று கொண்டிருந்தபோது கண்ணுக்கெட்டும் தூரத்தில் மணி வருவது போல் தெரிந்தது. மணிமணி நில்லு என்றான். அட ராமுவா "என்ன ராமு... உன்னைத் தேடித்தான் நான் வருகிறேன்" உன்னில் எதுவிதமான தவறும் இல்லை ராமு. கதிரும் அவனுடைய நண்பர்களும் உன்னை வேணும் என்றே மாட்டிவிடப் போட்ட திட்டமிது என்று கூறினான். உனக்கு இது எப்படித் தெரியும் மணி... நேற்று பாடசாலை விட்டுப் போகும் வழியில் கதிரின் உயிர்த்தோழன் வரனைக் கண்டேன். உன்னுடைய கவலையை அவனிடம் சொன்னேன். அவன் தான் இவ்வுண்மையை என்னிடம் சொன்னான். என்று மணி கூறிமுடிப்பதற்குள்... எங்கிருந்தோ வரனும் அங்கு வந்து சேர்ந்து விட்டான். என்னை மன்னித்துவிடு ராமு... நீ ஏழைப் பையன் உனக்கு இப்படிச் செய்ததற்கு நான் வெட்கப்படுகிறேன். என்னையும் மன்னித்துவிடு என்றான். இல்லை நான் இதை பெரிதுபடுத்தவில்லை என்று கூற இனியும் ஏன் வீண் கதை... வாத்தியாரை போய் சந்திப்பம் என்று மூவரும் புறப்பட்டுச் சென்றனர். தலைமை வாத்தியாரை சந்தித்து இது பற்றி உரையாடினர். அவர் பாடசாலைக்கு வாருங்கள் நான் அதிபருடன் கதைக்கிறேன் என்று கூற... மூவரும் புறப்பட்டுவிட்டனர். வாத்தியார் அதிபரிடம் நடந்தவற்றை விபரமாக விளக்கிக் கூறினார். அவரும் புரிந்துகொண்டு கதிரினை அழைத்து ஏன் இப்படிச் செய்தாய். என்று பேச, ராமு அவனை பேச வேண்டாம் சேர் என்று தடுத்தான். உடனே கதிர் ராமுவிடம் மன்னிப்புக் கேட்க நண்பர்கள் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். அதிபர் ராமுவின் பண்பினை பாராட்டியதோடு அவன் மேன்மேலும் வளர வேண்டும் அதற்கான உதவியை பாடசாலை சமூகம் அளிக்கும் என்று கூறினார். மணி அடித்தது. எல்லோரும் அதிபரிடமும் வாத்தியாரிடமும் இருந்து விடைபெற்று வகுப்பறைக்குச் சென்றனர்.

கு. தினிஷா
ஆரம்பக் கல்வி (2ம் வருடம்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

[stamp]

# உயிரழித்தலன்

"அக்கா என்ன இன்று இவ்வளவு நேரம் தூங்குகிறாய்? எழுந்திரு" என என்னை எழுப்பிய தம்பியிடம்

"போடா அங்கால... என்னை நித்திரை கொள்ள விடுடா..."

"ஆகா அது சரிவராது எழும்பு, எழும்பி படி இந்தா விளக்கு கொழுத்தி வைத்திருக்கிறேன் எழும்பக்கா எழும்பிப்படி"

என்ற தம்பியின் மீது கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"போடா போய் நீ படியடா"
என்று கோபத்துடன் கூறி விட்டு மறுபக்கம் திரும்பிப் படுத்துவிட்டேன்.

"நானும் உன்னை மாதிரி படிச்சிருந்தா இப்பவும் படிச்சுக் கொண்டு தானே இருந்திருப்பன் என் தலைவிதி எனக்குத் தானே படிப்பே ஏறமாட்டன் எண்டு படிப்பே இல்லாம இப்படி உங்களுக்காக கஷ்டப்படுறன்"

தம்பியின் வார்த்தைகள் உள்ளத்தைத் தொட்டன. அப்போது தான் நான் தூக்கத்திலிருந்து முழுமையாக விழித்து தம்பியைப் பார்த்தேன். எனக்காக என் வாழ்வு வளம் பெறுவதற்காக கஷ்டப்பட்டு தினமும் உழைக்கும் கரங்களில் கை விளக்கை ஏந்திக்கொண்டு நிற்பதை...

தலைமாட்டிலிருந்த தண்ணீர் செம்பை எடுத்து தண்ணீர் குடித்து விட்டு படிக்கத் தொடங்கினேன். காலை நேரப் படிப்பு எப்பவுமே ஞாபகத்தில் இருக்கும் என்பதால் தினமும் எழும்பிப் படிப்பது வழக்கமாயிற்று. தற்பொழுது உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறேன். பரீட்சைக்கு இன்னும் சில மாதங்களே இருந்தன. "பிள்ள நேரம் ஆறரையாச்சு"

அம்மாவின் குரல் கேட்டு புத்தகத்தை மூடிவைத்து விட்டு பாடசாலைக்கு கொண்டு போக வேண்டிய புத்தகங்கள், கொப்பிகளை எடுத்து அடுக்கி வைத்து விட்டு வெளியில் வந்து குளிப்பதற்கு கிணற்றடிக்கு செல்கிறேன். அங்கே தண்ணீர் அள்ளி நான் குளிப்பதற்காக நிரப்பப்பட்டிருந்தது. மளமள வென்று குளித்து முடித்துவிட்டு அம்மா கொடுத்த உணவை உண்டு விட்டு நான் பாடசாலைக்கு செல்வதற்கு முன்னர் தம்பி வேலைக்கு சென்று விட்டான்.

பாடசாலை சென்று வருவதும் பின் ரியூசனுக்கு போவதுமாகவே நான் இருந்தேன். வீட்டில் எந்த விதமான வேலைகளையும் செய்து கொடுப்பதில்லை. தம்பி காலையில் எழுந்து அம்மாவிற்கு ஏதாவது உதவி செய்து கொடுப்பான். முற்றம் கூட்டுவான். என்னை அவர்கள் ஒருவரும் கஷ்டப்படுத்துவதில்லை. நான் நன்றாக படித்து நல்ல நிலைக்கு வர வேண்டுமென்பது அவர்கள் எல்லோரதும் அவாவாக இருந்தது.

நாட்கள் நெருங்கி வந்தன. பரீட்சை நடைபெற்றது. பரீட்சைகளை நானும் நன்றாகவே எழுதினேன். நம்பிக்கை இருந்தது. நானும் கம்பஸ் போவேன் என்று

எனது வார்த்தைகள் என் பெற்றோரையும் தம்பியையும் மகிழ்வித்தன. அவர்களது சந்தோசமே எனது சந்தோசமாக இருந்தது. நானும் பரீட்சை பெறுபேற்றை எதிர் பார்த்து காத்திருந்தேன்.

இக் காலப் பகுதியில் எனது அத்தைக்கு கலியாணம் நடைபெற்றது. அவர்கள் கால் மாறி மூன்றாம் நாள் யாழ்ப்பாணம் போய்க்கொண்டிருந்தோம். அப்போது மாமாவிற்கு தொலைபேசி வாயிலாக A/L பரீட்சை பெறுபேறு வெளி யாகி விட்டது என்று SMS வந்தது. என்ன செய்வது என்று எனக்கு பயமாக இருந்தது. அந்த சந்தோசமான நேரத்திலும் என்னால் சந்தோசமாக இருக்க முடியவில்லை. துக்கம் என் நெஞ்சை அடைத்தது. என்ன செய்வது? என்ன றிசல்ஸ் வரப்போகுதோ? கடவுளே என்னைக் காப்பாற்று.

என் மனதில் வேண்டிக் கொண்ட வேளை எனது கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் வந்ததைக் கண்ட அம்மா.

"நீ ஏன் பயப்படுகிறாய். எது வந்தாலும் வரட்டும் கவலைப்படாதே"

என்று என்னைத் தேற்றினார். ஆனாலும் என்னால் அவர்களும் குழப்பமான நிலையிலேயே பயணித்துக் கொண்டிருந்தனர்.

"யாழ்ப்பாணம் போய் இறங்கியவுடன் றிசல்ச பார்க்கலாம் இப்ப அழாத எங்களோட சிரிச்சு கதைச்சுக் கொண்டு வாவன்..."

என்று எனது அத்தை கூறினார். ஆனாலும் அவர்களுடன் என்னால் கதைக்க முடியவில்லை. யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் அவர்களுடன் கலியாண வீட்டிற்கு போக வேண்டியதாயிற்று. அங்கு எல்லாம் முடித்துக் கொண்ட வர 4.00 மணி ஆகிவிட்டது. அம்மா, அப்பா, தம்பி, மாமா, அத்தை மீண்டும் எங்களுடைய வீட்டுக்கு வருவதற்கு வெளிக்கிட்டார்கள். அவர்களை அனுப்பிவிட்டு நான் சித்தியுடன் நின்று விட்டேன்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு ரவுணுக்குப் போனேன். அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் கடைகள் எல்லாம் பூட்டு. எப்படியாவது றிசல்ஸ் பார்த்துத் தான் போவதென்று முடிவு கட்டிக்கொண்டு ஒவ்வோர் இடமாக திரிந்தேன்.

நேரம் 6.30 ஆகிவிட்டது. ஆமி நிக்கிறான். பயமாகவும் இருந்தது. ஆனாலும் எனது பிடிவாதம் என்னை விட்டு விடவில்லை. ஒரு மாதிரியாக றிசல்ஸ் பார்த்து விட்டேன். பெரிய சந்தோசத்துடன் சித்தப்பா வீடு நோக்கி சைக்கிளில் புறப்பட் டேன். அன்று உடனடியாகவே வீட்டிற்கு போக வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. ஆனால் போக முடியாத போக்குவரத்து நிலையில் எப்போது விடியும் என்ற நினைவில் சென்றேன்.

"எங்களுக்கு இன்று இரண்டாவது கொண்டாட்டம்"

என்று கூறிய சித்தி, பெரிய விருந்தொன்றை நடத்தி விட்டார். அங்கு வந்த எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள். எனக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. அந்த சந்தோசத்தில் என் கண்முன்னே எனது தம்பி தான் வந்து சென்றான்.

விடிந்ததும் விடியாததுமாக எழுந்து ஆயத்தமாகி விட்டேன். வீட்டுக்கு

செல்வதற்கு அவர்கள் எல்லோரும் மறித்துப் பார்த்தார்கள். ஆனால் என்னால் அங்கு நிற்க முடியவில்லை. உடனடியாகவே ஊருக்குப் புறப்பட்டு வந்து விட்டேன். வீடு வந்ததும் வராததுமாய் வீடு கலகலப்பாகியது. எல்லோரும் மகிழ்ந்தனர். அம்மா, அப்பா, தம்பியின் முகத்தில் சந்தோசம் குடி கொண்டது. தாம் கஷ்டப்பட்டதற்கான பலாபலன்களை பெற்ற உணர்வால் ஏற்பட்ட மகிழ்ச்சி யாக இருக்கும்.

பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. குறிப்பிட்ட காலத்திற்குள் செல்ல வேண்டும் என்பதால் அங்கு செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. வீட்டுச் சூழல் யோசனையில் ஆழ்த்தியது. பாஸ் பண்ணினது சந்தோசமாக இருந்தாலும் தொடர்ந்து படிப்பதற்கு காசுக்கு எங்கு போவது" யாரைக்கேட்பது?

"அக்கா நீங்கள் யோசிக்காதேங்கோ... எப்படியும் நான் உங்களை படிக்க வைப்பன்"

தம்பியின் வார்த்தைகள் மனதை முள்ளாக குத்தின. பாவம் தம்பி நண்பர் களுடன் உல்லாசமாக திரிய வேண்டிய வயதில் குடும்பத்தின் சுமையை அப்பாவுடன்தானும் ஏற்றுக்கொண்டு தினமும் எவ்வளவு கஷ்டப்படுகிறான். இனியும் என்னால் கஷ்ரப்படப் போகிறானே...? கண்களில் நீர் சுரந்தது.

"அக்கா நான் என்ன கஷ்ரப்பட்டாலும் பறவாயில்லை, நீங்க நல்லா படிக்க வேணும் அது தான் எங்கட ஆசை..."
பெரிய மனுஷன் போல கூறினான்.

"என்னால தானே உங்களுக்கு இன்னும் அதிக கஷ்டம். நான் உங்கள சரியா கஷ்டப்படுத்தினதை நினைக்க என்னால தாங்கேலாம இருக்குதடா"

"என்ன செய்யிறது அப்பாவும் வருத்தக்காறர்... அவராலையும் பெரிதாக உழைக்கேலாது. நான் தானே கஷ்டப்பட வேணும்."

"எல்லாம் எங்கட தலைவிதி..." என நினைத்துக் கொண்டேன்.

நான் யாழ்ப்பாணம் போவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந் தன. தம்பி இரவு பகல் என்று பாராது கஷ்டப்பட்டு உழைத்தான். உழைப்பின் பலனை கொண்டு எனக்கு ஒரு பவுண் செய்து தந்தான்.
"அக்கா இத நீங்கள் ஒரு காலமும் கழுத்தில் இருந்து கழட்டக் கூடாது"

என்று கூறி ஒரு தொகைப் பணத்தையும் தந்து என்னை அனுப்பி வைத்தான்.

"பிள்ள கவனமம்மா... கவனமா படியுங்கோ..."

"அக்கா நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் படியுங்கோ"

யாழ்ப்பாணம் சென்று பல்கலைக் கழகப் படிப்பு நன்றாகவே சென்று கொண்டிருந்தது. யாரும் எதிர்பாராத வண்ணம் அன்று வெள்ளிக்கிழமை

முகமாலையில் பெரும் சண்டை நடந்தது. பாதை மூடப்பட்டது கல்வியும் இடை நிறுத்தப்பட்டது வீடு வந்து சேர வழி தெரியாது திண்டாடினோம். ஒரு வழியாக கப்பல் மூலம் நான் வீட்டுற்கு வந்து சேர்ந்தேன். எமது ஊரிலும் பிரச்சினை தொடங்கியது. வளர்ந்த பிள்ளைகள் வீட்டிற்கு வெளியில் தலைகாட்ட முடியாத சூழ்நிலை. உழைப்புக்கு போக முடியாத நிலை என அனைவரையும் துன்பங்கள் வாட்டின.

"வீட்டுக்கு ஒருவர் கட்டாயம் போராட்டத்தில் இணைய வேண்டுமாம்..."

எங்கள் வீட்டில் யார் போவது நானா? தம்பியா? அம்மா, அப்பா எதுவுமே கூறவில்லை. படிப்பில்லாமல் இருந்த நான் அங்கு ஒரு கடைக்கு வேலைக்கு சென்று வந்தேன். ஒரு நாள் வேலைக்கு போய்விட்டு வந்த எனக்கு வீட்டில் அதிர்ச்சி காத்திருந்தது.

"தம்பி போய் விட்டான்..."

என்றார் அம்மா... என்னால தாங்க முடியவில்லை. அழுதேன்... அழத்தான் முடிந்ததே தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

காலங்கள் கரைந்தன. கம்பஸ் மீண்டும் ஆரம்பமாகியது. நான் யாழ்ப்பாணம் சென்று எனது கல்வியை தொடர்ந்தேன். ஒரு நாள் தம்பியின் கடிதம் கிடைத்தது.

"அன்புள்ள அக்கா அறிவது, நான் நலம் அதுபோல் நீங்களும் நலமாய் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

மேலும் அக்கா என்னைப் பற்றி யோசிக்காமல் நீங்கள் நன்றாக படிக்கவும். அக்கா நீங்கள் ஒன்றையும் யோசித்து படிப்பை குழப்பிவிட வேண்டாம். செலவுக்கு என்ன செய்கிறீர்கள்.? என்ன செய்வது? எங்கள் விதி சின்ன வயதி லிருந்த நாங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டேயிருக்கிறோம். இப்பவும் கஷ்டப்படுங்கோ என்று எழுதியிருக்கிறது. நான் இருந்தால் உங்களுக்கு கஷ்டம் இருக்காது. என்ன செய்வது எப்படியாயினும் எங்களது ஆசைகளை நீங்கள் நன்றாக படித்து நிறைவேற்றுங்கள். எங்களில் நீங்களாவது நன்றாக கஷ்டப் படாமல் இருக்க வேண்டும். இத்துடன் மடலை நிறைவு செய்கிறேன்.

**S. துசானி**
வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி
வவுனியா.

# "ஐந்திலக்கணம்" ஓர் பார்வை

மொழியின் எல்லா அலகுகளையும் விரித்து விபரித்துக் கூறும் ஒரு துறையாக இலக்கணம் அமைகின்றது. எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்தில் நின்றும் எடுபடும் இலக்கணம் என்பர்.

ஐந்து இலக்கணம் என்பது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன வாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்ட தமிழ்மொழி மிகவும் நுட்பம் வாய்ந்த இலக்கண மரபைக் கொண்ட ஒரு மொழி ஆகும்.

இலக்கியத்தின் தோற்றத்தின் பின்பு இலக்கணம் தோன்றியது. எழுத்து இலக்கணம் சொல்லின பெருவிலக்கணம், பற்றித் தொல் காப்பியம் கூறுகின்றது. இத் தொல்காப்பியம் அகத்தியத்திற்கு வழி நூல் ஆயினும் தன வழித்தோன்றிய பல காப்பியம் முதலிய வியந்தமிழ் நூல்களுக்கு முதல் நூலாகும் என்பர்.

தொல்காப்பியம் எழுத்து அதிகாரம் ஒன்பது இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது. நூன் மரபு மொழி மரபு. பிறப்பியல் மரபு, புணரியல் மரபு, தொகை மரபு, உருபியல் மரபு, உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியல் உகரம் என ஒன்பது இயல்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

சொல் அதிகாரம், கிளவியாக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விழிமரபு, பெயரியல், வினையியில், இடையியல், உயிரியல், எச்சவியல் என ஒன்பது இயல்களை உடையது.

பொருள் அதிகாரம் அகத்தினை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டு இயல், உவமைஇயல், செய்யுள் இயல், மரபியல் என ஒன்பது இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது.

எழுத்து அதிகாரம் 483 சூத்திரங்களும், சொல்லதிகாரம் 463 சூத்திரங்களும், பொருள் அதிகாரம் 666 சூத்திரங்களும் உடையனவாம்.

ஐந்து இலக்கண மரபுகளான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து ஒரே நூலக கூறிய முதல் நூல் வீரசோழியம் ஆகம். வீரசோழியம் அகத்தியத்தின் வழித்தோன்றிய தொல்காப்பியத் தொண்டு செய்த தோரியற்றமிழ் நூல் ஆகும் வீர சோழியம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணமும் உணர்த்து சிறு நூல் ஆகும்.

தொல்காப்பியம் கூட எழுத்து, சொல், பொருள், ஆகிய மூன்று பகுப்பினையே உடையது. வீரசோழியம் புத்தமித்திரனால் இயற்றப்பட்டது. வீர சோழியத்தில் புணர்ச்சி விதிகளுக்கு புறநடைகள் காணப்பட்டது. சொல்லு பகுப்பியல், பதவியல் என்பவை பற்றி விளக்கமாக குறிப்பிடப்படவில்லை.

இவ்வீரசோழியத்தில் வடமொழி மரபுகள் கையாளப்பட்டுள்ளன. ஒப்பியல் துறைக்கு முக்கியம் கொடுக்கப்பட்டுள்ளன. வினைச் சொற்களுக்கு பகுதிகள் புதியவையாக வடமொழியைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. வடமொழி இலக்கணக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. காரிகை யாப்பமைதியில் வீர சோழியம் தோன்றியது. இதனாலேயே வீரசோழியத்தின் பயில் நெறி அருகியது

என்றும் கூறுவர். எனினும் ஐந்திலக்கண மரபுகளையும் முதலில் கூறிய பெருமை வீரசோழியத்திற்கே உண்டு.

பிற்கால இலக்கண நூல்கள் ஏதொ ஒரு வகையில் தொல்காப்பியம் கூறியதையே விரித்துக் கூறின. இறையனார் களவியல் நம்பியகப்பொருள் ஆகிய நூல்கள் இலக்கணம் பற்றிக் கூறும்.

புறத்திணையியல் பற்றி புறப்பொருள் வெண்பாமாலை கூறும். இது ஐயனாரிதனார் என்பவர் இயற்றிய ஓர் புறப்பொருள் நூலாகும். புறப்பொருளினை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பைத்திணை, வாகைத் திணை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என 12 ஆக வகுத்துக் கூறும்.

செய்யுளியல் பற்றி யாப்பருங்கலக் காரிகை என்ற நூல் கூறும். இது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்றியல்களையுடையது.

குணவீர பண்டிதர் இயற்றிய நேமிநாதம் என்ற நூல் எழுத்ததிகாரம், சொல் அதிகாரம் ஆகிய இரு பிரிவுகளையுடையது. நேமிநாதத்தில் அபிநயப்பாக்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

உவமையியல் முதலிய காவிய இலக்கணங்கள் பற்றித் தண்டியலங்காரம் கூறும் இது பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்றியல்களையுடையது.

நன்னூல் பவநந்திமுனிவரால் இயற்றப்பட்டது. இ∴தெழுத்துஞ் சொல்லுமுணரத்தும் பின்னூல்களுள் வைத்து மிகச்சிறந்த தோரியற்றமிழ் நூல் ஆகும். பதவியல் ஒன்றே இந்நூலிற்கு பெருமை சேர்க்கும் தொகை, வகை, விரிமுறையில் எழுதப்பட்டது.

நன்னூல் எழுத்ததிகாரத்தில் அபிநயப் பாதிப்பையும், பதவியலில் வீரசோழிய ஆதிக்கத்தையும் புணரியல் தொல்காப்பிய செல்வாக்கையும் காணலாம். மொழி முதற் காரணமாம் அணுதிரள் ஒலி எழுத்து என்கிறது நன்னூல். இன்று வரை நிலைத்து நிற்கிறது எமது கைக்கு எட்டாத அகத்தியம் ஐந்திலக்கணம் கூறும் நூலென்பர் இவ்வாறு காலத்துக்குக்காலம் தோன்றிய இலக்கண நூல்களுள் ஐந்திலக்கண மரபு பலவாறு பேசப்பட்டு வருகின்றது.

எனவே நூல்களின் விரிந்த கருத்துக்களிலும் விபரிக்கக்கூடிய எவ்வளவோ விடயங்கள் ஐந்திலக்கணங்கள் பற்றி உண்டு. ஆயினும் உரிய விடயங்கள் உரியவாறு குறுகிய அளவில் கூறப்பட்டுள்ளது என்பதே உண்மை.

உஷாவியவை:
தொல்காப்பியம்
வீரசோழியம்
இறையனார் காவியம்
நம்பியகப்பொருள்
தண்டியலங்காரம்
நேமிநாதம்
தண்டியலங்காரம்

தொகுப்பு
**கி.கலைச்செல்வன்**

**யா - மணியகாரன் தோட்டம்**
**அ.த.க. பாடசாலை**

# இணைய தொடர்பு முறைகள்
## [Internet Access methods]

**இணையம் Internet**

உலகளாவிய ரீதியில் பரந்து காணப்படும் கணினி வலைப்பின்னல்களுக் கிடையிலான தொடர்பே இணையம் எனப்படும்..

இவ்வாறு பரந்து காணப்படும் இணையத்துடன் நாம் பல்வேறு வழிகளில் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதனடிப்படையில் இணைய தொடர்பு முறையை 2 வகைப்படுத்தலாம்.

1.வட ஊடகம் Wire Media
2.வளி ஊடகம; Wireless Media

**.வட ஊடகம் Wire Media**

Wire Mediatpy வெவ்வேறு வகையான wirefs. தகவலை கடத்தப் பயன்படுத்தப்படுகின்றன.

1. Twisted pair cable
2. Coaxial cable
3. Fibre optics

**வளி ஊடகம் Wireless Media**

இங்கே வளி ஊடகத்தை பயன்படுத்தி தகவலானது பரிமாற்றப்படுகிறது. Wire Media வுடன் ஒப்பிடும் போது இது பல சிறப்பியல்புகளைப் கொண்டதாக காணப்பணடுகின்றது.

**இணைய தொடர்பு முறைகள் [Internet Access methods]**

நீங்கள் இனையத் தொடர்பை பல்வேறு முறைகளுடாக பெற்றுக் கொள்ளலாம்.

1.Leased Line/Leased Circuit
2.A Dial Up Access
3.DSL / Wireless

**Leased Line/Leased Circuit**

Leased Line மூலம் நாம் இணையச்சேவையை 24 மணிநேரமும் மாறா வேகத்தில் (Band width) பெற முடியும்.

இந்த சேவையானது ஒரு பயனாளருக்கென தனியாக ஒதுக்கப்பட்டதாக காணப்படும் இ ங் கு இணையத்தை பயன்படத்தும் நேரம் கருத்தில் கொள்ளப்படாது கட்டணமானது காலத்திற்கேற்ப நிலையானதாக காணப்படும்.

**A Dial Up Access**

இங்கே தொலைபேசி ஊடாக இணையத்தொடர்பானது ஏற்படுத்தப்படும். இங்கே

ஆழனறஅ எனும் கருவியின் பயன்பாடு காணப்படும். இது செலவு குறைந்த முறையில் இணையத்தொடர்பை ஏற்படுத்தும் ஒரு முறையாகும்.

## Broad band Internet Access

குறைந்த செலவிலும் உயர்ந்த வேகத்திலும் இணையத்தை பயன்படுத்த இது 1990 களில் அறிமுகப்படுத்தப்பட்ட முறையாக காணப்படுகிறது. DSL,Cable Modem ஆகியன சிறப்பான Broad band Technologies ஆக காணப்படுகின்றன.

## Cable Modem

Cable Tv கட்டமைப்பினூடாக இணைய வசதியை பெற பயன்படுத்தப்படும் விசேட கருவியாக CableModem காணப்படுகின்றது.

## DSL Technology [Digital Subscriber line]

இங்கே Download Speed ஆனது 128முடிளி தொடக்கம் 24000முடிளி வரை காணப்படும்.

## ADSL [ Asymmetric Digital Subscriber line]

இங்கே Download Speed ஆனது ரிடழயன ஞிநநன இலும் பார்க்க அதிகமாக காணப்படும். தற்போது இச்சேவையானது SLTahy வழங்கப்படுகின்றது.

## SDSL [Symmetric Digital Subscriber line]

இங்கே Download Speed,Upload Speed என்பன சமமானதாக காணப்படும்.

## Wireless Technology

Wire Technology மூலம் தொடர்பை ஏற்படுத்த முடியாத பிரதேசங்களுக்கு இந்தச்சேவையானது பயன்மிக்கதாக காணப்படுகின்றது. தற்போது இந்தச் சேவையானது Dialog ஆல் வழங்கப்படுகிறது. CDMA, Mobile Phone ஊடாக இந்தச் சேவையை பெற முடியும்

K.ARIHARAN
Teacher
St.John's College

# பெரியாழ்வாருக்குள் ஊற்றெடுக்கும் தாய்மை

## பெரியாழ்வார் திருமொழி – நீராட்டல் பகுதியை முன்வைத்து.....

சங்கமருவிய காலத்தில் காரைக்கால் அம்மையார், முதல் மூன்று ஆழ்வார்கள் மூலம் ஊற்றெடுத்த பக்தி இலக்கியம் பல்லவர் காலத்தில் பெரும் உணர்வுத் தளமாக மாற்றம் கண்டது. உணர்வு வெளிப்பாட்டில் சைவபக்தி இலக்கியங்களை விட வைணவ பாசுரங்கள் அதிக ஆழமானவை. அழகியலும் உணர்வுச் செறிவும் கொண்டவை. ஆண்டாளின் கவித்துவமும் அவளின் உணர்ச்சி, உணர்வுத் தளமும் உருக வைப்பவை. பெண்ணுடலினதும் மனத்தின தும் அவலத்தின் அழகியல் வெளிப்பாடுகள் அவளது பாடல்கள்.

அவளது தந்தைதான் பெரியாழ்வார். பெரியாழ்வார் பெருமாளுக்கு பூமாலை சாற்றும் தொண்டர். பாமாலை சூட்டிய பாவலர். மன்னனால் "பட்டர்பிரான்" என்று சிறப்பிக்கப்பட்டவர். இவர் இயற்றிய பிரபந்தங்கள் திருப்பல்லாண்டு (11 பாசுரங்கள்) பெரியாழ்வார் திருமொழி (461 பாசுரங்கள்). இந்த இரண்டு நூல்களும் நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் தொடக்கங்களாக அமைந்து விளங்குவது இவற்றினதும் பெரியாழ்வாரினதும் சிறப்பை வெளிப்படுத்துவன.

இந்தப் பாடல்களில் எல்லாம் கிருஷ்ணன் லீலைகளை பல்வேறு "பாவ" நிலைகளில் பெரியாழ்வார் அனுபவித்து உள்ளார்.

யசோதையாகவும், கண்ணன் குறித்து முறையிட்ட ஆய்ச்சியர் நிலையாகவும், கண்ணன் மீது காமுற்ற கன்னியர் நிலையாகவும், அக்கன்னியர் பற்றி இரங்கும் தாயாரின் நிலையாகவும் அனுபவித்துப் பாடியுள்ளார். யசோதை நிலையில் அவர் பாடிய பாடல்களே அதிகம்.

பெரியாழ்வார் திருமொழி கண்ணனின் அவதாரச் சிறப்புடன் தொடங்குகின்றது. முதல் 25 திருமொழிகளில் கண்ணனது குழந்தைக் குணங்களோடும் பருவக் குறும்புகளோடும் தாயாகக் கலந்து நிற்கும் பெரியாழ்வார் தாய்க்குரிய அன்பை, கருணையை, இரக்கத்தை, கண்டிப்பை மிக ஆழமான உணர்வுத் தளத்தில் தாயாகவே மாறிப் பேசுகின்றார். அவருள் இருந்து சுரக்கும் தாய்மை களின் குணத்தை நாமும் அனுபவித்து கண்ணன் லீலாவினோதங்களோடு கலந்து விடுகின்றோம்.

பிறப்பு, திருமேனி, அழகு, தாலாட்டு, அம்புலி, செங்கீரை, சப்பாணி, தளர்நடை, அண்மை வருகை, புறம்புல்கல், அப்பூச்சி காட்டல், கம்மம் உண்ணல், காது குத்தல், நீராட்டம், குழல்வாரல், பூச்சூட்டல், காப்பிடல் போன்ற கண்ணனின் குழந்தைகளை மிகுந்த உணர்வு பூர்வமாகத் தாய்மையின் உணர்வுத் தளத்தில் நின்று பாடியுள்ளார்.

இவரிடம் வெளிப்படும் தாய்மையின் பரிவை, அன்பை கருணையை கண்ணனின் உள்ள அன்பை, பாசத்தை அவனின் பெருமையை இவர் பாடல்கள் எவ்வாறு புலப்படுத்துகின்றன என்பதை "நீராட்டல்" என்ற பகுதியை முன்வைத்து நோக்க விழைகின்றேன்.

"நீராட்டல்" என்ற பகுதியில் யசோதையின் நிலையில் இருந்து தாயாய்மாறி கண்ணனை நீராட வருமாறு பெரியாழ்வார் அழைக்கின்றார். இதனைப் பெரி யாழ்வார் கடைக்காப்புச் செய்யுளில்,

"கார்மலி மேனி நிறத்துக் கண்ணபிரானை உகந்து
வார்மலி கங்கை யசோதை மஞ்சனம் சூட்டிய ஆற்றை"
"பட்டர்பிரான்"ஆகிய தான் பாடியதாகச் சொல்லுகின்றார்.

அவர் கண்ணனை நீராட அழைக்கும் போது பல்வேறு உத்திகளில் அழைத்தார். அதில்

1. கண்ணனின் குறும்புகளும்
2. கண்ணனின் பெருமைகளும்
3. கண்ணனின் தாயாய் அவர் வைத்த அன்பும்

தெளிவாகவும் அழகாகவும் புலப்பட்டு நிற்கின்றது.

சிறுகுழந்தைகள் புழுதியில் அளைந்து உருண்டு பிரண்டு விட்டு "நீராட வருவாய்" என்றதும் ஓடம். ஒளிக்கும், மறுக்கும், மறுகும், 'ஓடாதே வாராய்' என்று கூப்பிட்டு நான் உனக்கு 'அது தருவேன் இது தருவேன்' நீ அச்சாப்பிள்ளை, கெட்டிக்காரன், என்று பாராட்டி நீராட அழைக்கும் தாய்மைக் குணம் பெரியாழ்வாரில் மிக அழகாக வெளிப்படுகிறது.

இந்தப்பாடல் பகுதியில் கண்ணனின் குறும்புகளை மிக அழகாக இவர் சொல்லுகின்றார்.

வெண்ணெய்யை கைகளால் அளைந்து உண்ணும் கள்ளனாய், விளையாடி உடம்பெல்லாம் புழதி பூசியவனாய், கூடிச்செல்லும் கன்றுகளின் காதில் கட்டெறும்பை விட்டு அவற்றைக் கலைந்தோடச் செய்யும் குறும்பனாய், எண்ணைக் குடத்தைச் சரித்து உருட்டி ஊற்றுபவனாய், நித்திரை செய்யும் குழந்தையைக் கிள்ளி எழுப்பியும் 'கண்ணைப் புரட்டி விழித்து, வம்பு செய்பவனாய், பசுக்கன்றின் வாலிலே ஓலையைக் கட்டி விட்டவனாய், பழங்கள் விழும்படி கல்லில் எறிபவனாய், மாட்டுத் தொழுவத்தில் கைகளால் அளைபவனாய் கண்ணனின் குறும்பு வடிவங்கள் நீள்கின்றன.

ஒரு தாயாய் கண்ணனின் குறும்புகளை இரசிக்கிறார், விரும்புகிறார். குழந்தைகளின் குறும்புகளைக் கண்டு கொடுப்புக்குள் சிரித்து ரசிக்கும் தாயின் மனதை பெரியாழ்வாரிடமும் மிக அழகாகக் காண்கிறேன். ஆனால் ஊரார் பழி சொல்லுவார்களே என்று அஞ்சுகிறார்.

பூணித் தொழுவினில் புக்குப் புழுதியளைந்த பொன்மேனி
காணப் பெரிதும் உகப்பன் ஆகிலும் கண்டந் பழிப்பர்
என்று தன் உணர்வை வெளிப்படுத்துகிறார்.

தன்பிள்ளை என்ன தவறு செய்தாலும் ஒத்துக்கொள்ளாத சராசரித் தாயின் மனநிலையை உள்ளக்கிடக்கையை தாய்மை பூரித்துக் கிடந்த பெரியாழ்வாரிடம் காண்கின்றோம். வீட்டிலே வெண்ணெய் - கண்ணன் சிறந்த நாள்முதல் இல்லாமல் போய்விடுவதையும் அதைக் கண்ணன் உண்பதையும்

தெளிவாகத் தெரிந்து போதும் மறந்தும் அதை யாருடனும் கதைக்க மாட்டேன் என்கிறார்.

கறந்த நற்பாலும் தயிரும் கடைந்துறி மேல் வைத்த வெண்ணெய்
பிறந்ததுவே முதலாகப் பெற்றறியேன் எம்பிரானே
சிறந்த நற்றிய அவர் தூற்றும் என்பதனால் பிறர் முன்னே
மறந்தும் உரையாட மாட்டேன்.

நீ கண்ணா குளிக்காமல் இருக்கவேண்டும் என்று விரும்பினால் அந்தக் குறும்பும் எனக்குப் பிடிக்கும்தான். எனக்காக நீ குளிக்க வேண்டாம். நீ குளிக்க வில்லையென்றால்,

'செப்பிள மென்முலையார்கள் சிறுபுறம் பேசிச் சிரிப்பர்
நப்பின்னை காணிற் சிரிக்கும்''

மேலும் கண்ணன் குளிக்கவேண்டும் என்பதற்காக அவனின் பெருமைகளை ஞாபகப்படுத்துகின்றார். பிள்ளைகளை 'அச்சாப்பிள்ளை' - 'என்ரை குஞ்சல்லே' என்ர கண்ணெல்லே, முத்தல்லே என்று எல்லாம் கொஞ்சிப் பெருமைசொல்லித் தாமும் பெருமைப்பட்டுப் பூரிக்கும் தாய்மையை பெரியாழ்வாரில் காண்கின்றோம்.

நண்ணல் அரிய பிரானே, நாரணனே, அழகனே, நம்பீ, மாணிக்கமே என் மணியே என்று நாமகரணமும் செல்லமும் கொஞ்சியும்...

"பேய்ச்சி முலையுண்ணைக் கண்டு'' என்று பூதனை அரக்கியிடம் பால் குடித்த தன்மையையும்

கஞ்சன் புணர்ப்பினில் வந்த
கடிய சகடம் உதைத்து
வஞ்சகப் பேய்மகன் துஞ்ச
வாய்மூலை வைத்த பிரானே என்று

சகடாசுரனை வதை புரிந்த திறத்தையும் பேய்மகனை மாய்க்க அவளின் முலையில் பால் குடித்ததையும், நின்ற மாமரம் சாய்த்தாய் என்றும் அவனின் வீரப்பெருமை உணர்த்துகிறார்.

ஒலிகடல் ஓதல் நீர் போல் வண்ணம் அழகிய நம்பீ
என்னும் அழகான் என்றும் அவன் அழகையும் வியக்கிறார்.

நீ குளிக்கவந்தால் உனக்கு கண்டோஸ் தருவேன்
சொக்கா தருவேன் என்று அம்மாக்கள் சொல்லி
அழைக்கும் உத்தியை பெரியாழ்வாரில் காண்கின்றோம்
உனக்காக நான் பலவற்றை வைத்துக் காத்திருக்கிறேன் என்கிறார்.

கண்ணா நீ குளிப்பதற்காக எண்ணெய், சிகைக்காய், காய்ச்சின நீரோடு நெல்லிக் காயை கடாரத்தில் நிரப்பியும்- மஞ்சளும் செங்கழு நீரின் வாசிகையும் நாறு சாந்ததும் அஞ்சனமும் வைத்து அவனைக் குளிப்பாட்டக் காத்திருப்பதைச் சொல்லுகின்றார்.

மேலும் குளித்த பிறகு - நீ புசிப்பதற்கு
அப்பம் கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலில் கலந்து
சொப்பட நான் சுட்டு வைத்தேன்.

என்று ஆசையூட்டுகிறார். 'உண்ணக் கனிகள் தருவேன்' என்று விருப்பூட்டுகிறார்.

நீ குளிக்க வராவிட்டால் உன்னை தன்னுடன் சேர்ந்து படுக்கவும் விடமாட்டேன். நல்ல பட்சணங்களை உண்பதற்குத் தரவும் மாட்டேன். என்று கண்டிப்பும் உள்ளே கரந்து நிற்கும் அன்பும் சேர வெருட்டுகிறார்.

"இவ்விரா உன்னைத் தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன்"
"தின்னல் உறுதியேல்..... சொப்பிட நீராட வேண்டும்"

என்றெல்லாம் பாடுகின்றார்.

இவ்வாறாக 'நீராட்டல்' என்ற பகுதியிலே கண்ணனின் குறும்புகள், பெருமைகள், யசோதையாகவே மாறிவிட்ட பெரியாழ்வாரின் தாய்மை போன்ற வற்றையும் கவித்துவத்தின் வீச்சையும் தரிசிக்கின்றோம்.

த. அஜந்தகுமார்
ஊதவி விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

# சரிந்த பொருளாதாரம் மீண்டும் கட்டியெழுப்பப்படுமா...?

இன்று சர்வதேச நாடுகளையே சவாலுக்குட்படுத்தியிருக்கும் ஓர் முக்கியப் பிரச்சினையாக காணப்படுவது சர்வதேச நிதி நெருக்கடியாகும். இதனால் சர்வதேசம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இச்சர்வதேச நிதி நெருக்கடியின் தன்மை, அதன் விளைவுகள், அது ஏனைய நாடுகளுக்கு ஏற்படுத்திய விளைவு, மேலும் இதனால் இலங்கையின் நிலைப்பாடு என்பன பற்றி இக்கட்டுரையில் விரிவாக நோக்குவோம்.

இச்சர்வதேச நிதி நெருக்கடியினால் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்தது., அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் காணப்படும் நிதி நிறுவனங்களில் வீழ்ச்சி ஏற்பட்டது. கடன் நெருக்கடிகள், திரவத்தன்மை பற்றாக்குறை, ஆரம்பத்தில் நிதி சந்தையில் ஏற்பட்ட நெருக்கடி படிப்படியாக பொருளாதார நெருக்கடியாக மாறியது. பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரித்தன, வேலையின்மை அதிகரித்தது. சென்மதிநிலுவை பிரச்சினை தாராளவாத பொருளாதார முறையின் பொருத்தப்பாடு கேள்விக்குட்படுத்தப்பட்டது, என பல்வேறு தீமைகளை சர்வதேசம் சந்தித்தது.

2008ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஏற்பட்ட இச்சர்வதேச நிதி நெருக்கடியின் காரணமாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பல நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியை கண்டன.

* The US Goverment seized control of Fannie mae and Freddie (½mortgage holders in us) and American International Group (Largest insurance company)

* Lehman Brother Failed bank ruptcy

* Merrill Lynch was taken over by Bank of America.

* Washinton mutual became the largest Bank Failure in us history ($ 328 Billion)

* UK Government nationalized Bradfold and Bingley (investment bank)
* Ice land Government Seized control over Lands bank.

* National Bank of Uk raine seized control of prom investment bank.

போன்ற முக்கிய பாரிய நிதி நிறுவனங்கள் பல வீழ்ச்சியை கண்டன.

இதனை தடுப்பதற்கு பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் அமெரிக்காவின் பங்குச் சந்தை வீழ்ச்சியடைவதை தடுத்து பொருளாதாரம் மந்தத்தை நோக்கி செல்வதை தவிர்க்கும் நோக்கில் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன. ஆனால் இதன்மூலம் நன்மை கிடைக்கவில்லை. மாறாக இதனால் பல விளைவுகள் ஏற்பட்டன. வட்டிவீத குறைப்பு காரணமாக.

* புதிய மற்றும் பழைய வீடுகள் மீதான ஈட்டு அடமானங்களைச் செலுத்துவதற்கான கடனுக்கான கேள்வி அதிகரித்தது.
* புதிய வீடமைப்பு கடன்களும் அதிகரித்தது.
* 1996 - 2006 காலப்பகுதியில் வீட்டுவிலைகள் 124% ஆக அதிகரித்தது.
* வீட்டு விலைகள் அதிகரித்ததனால் இரண்டாம் மூன்றாம் நிலை அடகு மீதான கடனுக்கான கேள்வியும் வேகமாக அதிகரித்தது.

* கடனுக்கான கேள்வி அதிகரித்ததனால் நிதி நிறுவங்களிடையே போட்டி ஏற்பட்டு பலவீனமான பிளைகளின் பேரில் கடன் சந்தை ஒன்று உருவானது (NINJA) (No Incone, Nojob, Noassects)

இச்சர்வதேச நிதி நெருக்கடியின் மூலம் பங்குச் சந்தையானது என்றுமில்லாதவாறு மாபெரும் வீழ்ச்சியை கண்டது. இவற்றின் வீழ்ச்சி வீதங்கள் வருமாறு

| | |
|---|---|
| Merrill Lynch | 42% |
| Bear Steams | 88% |
| Citigroup | 75% |
| Lehman Brothers | 100% |
| AIG | 97% |
| Goldman Sachs | 61% |
| JP Morgan Chase | 28% |
| Morgan Stanley | 69% |

இச் சர்வதேச நிதி நெருக்கடியானது அமெரிக்கா ஐரோப்பா நாடுகள் மாத்திரமன்றி ஏனைய நாடுகள் நோக்கியும் பரவத் தொடங்கியது. குறிப்பாக Euro Zone, Russia, Japan, China, Brazil, India போன்றவற்றில் இதன் தாக்கம் பரவியது. மேலும் ஆசிய நாடுகள் சிலவற்றிலிருந்தும் முதலீடுகள் மீளப்பெறப்பட்டுள்ளன. குறிப்பாக South Korea விலிருந்து 31 பில்லியன் டொலரும், Thailand இலிருந்து 4 பில்லியன் டொலரும் Taiwan இலிருந்து 10 பில்லியன் டொலரும் மீளப்பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் இதனுடைய தாக்க வினாவினை நோக்குவோமாயின் சர்வதேச ரீதியில் இலங்கையின் நிதிச்சந்தை தனிமையிலுள்ளது. இலங்கையில் மூலதனக்கணக்கு பூரணமாக திறந்துவிடப்படவில்லை. இதனால் இலங்கை நிதி நெருக்கடியினால் நேரடியாக பாதிக்கப்படவில்லை. எனினும் ஏனைய நாடுகளில்

ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியானது இலங்கையில் சில பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் இலங்கையில் ஏற்படக்கூடிய தாக்க விளைவுகளாக பின்வருவனவற்றை கொள்ளலாம்.

1) பிரதான ஏற்றுமதிச் சந்தைகள் இழக்கப்படல்
2) வெளிநாட்டு நேரடிமுதலீடுகள் குறைவடைதல்
3) வெளிநாட்டு மாற்றல் பெறுகைகள் வீழ்ச்சியடைதல்
4) அபிவிருத்தி நிதியுதவிகள் குறைவடைதல்
5) வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் குறைவடைதல்
6) சுற்றுலாத் தொழில் வீழ்ச்சியடைதல்
7) இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம் குறைவடைதல்

இந் நிதி நெருக்கடியை சமாளிக்கும் பொருட்டு அரசாங்கம் பல தடவை சந்தையினுள் திரவத் தன்மையை பாய்ச்சியது. ஆனால் ஆரம்பத்தில் நிதி நெருக்கடியாக உருவான பிரச்சினை படிப்படியாக பொருளாதார நெருக்கடியாக விரிவடைந்தது. இதனால் இதற்கு ஒரு தீர்வினை எட்டும் நோக்கில் 120 நாடுகள் ஒன்று சேர்ந்து 02.04.2009 அன்று இலண்டனில் ஓர் மாநாடு ஒன்றை நிகழ்த்தினர். இதில் சர்வதேசத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவு பற்றி விவாதிக்கப்பட்டது. இம்மாநாடு முடிந்து வெளியேவந்த அமெரிக்க அதிபர் பராக் ஓபாமா ஊடகவியலாளர்கள் மத்தியில் இம்மாநாடு பற்றி குறிப்பிடும்போது மாநாட்டில் இப்பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட தீர்வுகளை கூறினார்.

அந்த வகையில் இதுபற்றி ஓபாமா கூறும்போது இப்பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ள உலக நாடுகள் காலம் தாழ்த்தாது உடனடியாக அதற்குரிய நடவெடிக்கைக்கு இறங்கியுள்ளன என்றும் உலகவங்கி சர்வதேச நாணயநிதியம் ஆகிய இரண்டையும் விரிவு படுத்தி சீரமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் நாணய நிதியத்தின் கடன் வழங்கும் ஆற்றல் மூன்று மடங்காக உயர்த்தப் பட்டுள்ளது. எனும் கூறினார். இதனால் நாடுகளின் கொள்வனவு சக்தி அதிகரிப்ப துடன் சரிதைகளும் விரிவாக்கப்படும் என்றார்.

மேலும் பிற நாடுகள் கருத்து வெளிப்பாட்டு சந்தர்ப்பம் குறைந்த நாடுகளின் உறுப்பினர்களை பாதுகாக்க அமெரிக்கா தலைமை வகித்து வழிகாட்ட உள்ளது. இந்தவகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 44.8 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க தீர்மானித்துள்ளது. மேலும் 1 மில்லியன் தொகை உணவுப் பாதுகாப்புக்கு வழங்கவும் தீர்மானித்துள்ளது. என்று குறிப்பிட்டார். அது மட்டுமன்றி அணுவாயுத குறைப்பு வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல்கள் ஆப்கானிஸ்தான் மீளமைப்பு, உலக பயங்கரவாதம் காலநிலை மாற்றத்தால் பூமியில் ஏற்பட்ட அசாதாரண நிகழ்ச்சிகள் முதலியன பற்றியும் ஆராயப்பட்டுள்ளன என்றார். இதனால் விழுந்த பொருளாதாரத்தை எழுச்சி பெறச் செய்ய முடியும் என்று கூறினார். பொருளாதார மீளெழுச்சிக்கான இம்மாநாடு பொருளாதார மீளெழுச்சியை ஏற்படுத்துமா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். சரிந்த பொருளாதாரம் மீண்டும் சரி செய்யப்படுமா?

**க. தினேஸ்**

யா/ஹாட்லிக் கல்லூரி

# மகான்களின் மகத்தான வார்த்தைகள்....

- எப்பொழுதும் உண்மையே பேசுங்கள் உரிமையாக உழையுங்கள் செய்யும் தொழிலை தெய்வமாக நினையுங்கள் வெற்றி பெறச் சிறிது தாமதமானாலும் பிற்கால வாழ்க்கையில் நிரந்தர சந்தோசம் கிடைக்கும்.

- பிறரை மன்னிப்பது மிகநல்ல செயலாகும். அதைவிட மன்னித்ததை நாம் மறந்து விடுவது மிகச்சிறந்த செயலாகும்.

- நீங்கள் கலந்துகொள்ளும் போட்டி அது எதுவாக இருந்தாலும் சரி கடின உழைப்பு மற்று அர்ப்பணிப்பு ஆகிய உணர்வோடு களமிறங்கினால் மட்டுமே Top Star உயர முடியும். இது தான் வெற்றியின் இரகசியம்.

- வெற்றிபெற விரும்புகிறவர்கள் என்ன? எங்கே? எப்பொழுது? ஏன்? எப்படி? எதற்காக? என்னும் ஆறு முதலாளிகளிடம் தங்கள் பிரச்சினைகளை வைத்தால் சரியான பதில் கிடைக்கும்.

- உடல் ஆரோக்கியத்தில் எண்ணங்களின் பங்கு முக்கிய இடத்தை வகிக்கின்றது. எப்போதும் நல்லதையே நம்பிக்கையுடன் சிந்திக்கும் பழக்கத்தை பழக்கமாக கொண்டிருங்கள். உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

- தோல்வியை கண்டு துவளாதீர்கள் அறிவை மென்மேலும் பெருக்கிக் கொள்ள தரப்பட்ட வாய்ப்பே தோல்வி.

- அகங்காரம் பலவீனமாகும். அது அமைதியை அழித்துவிடும். பணிவாக வாழ்ந்தால் அமைதியும் இறை அருளும் தங்குதடையின்றிப் பாய்ந்து உங்கள் வாழ்க்கையை மிகப்பெரிய வெற்றிகரமான வாழ்க்கையாக மாற்றித்தரும்.

- செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியை காட்டாமல் மறைய மாட்டா.

- வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை ஒரு விநாடியும் வீணாக்கக் கூடாது. காலத்தால் செய்யப்பெற்றது தான் வாழ்க்கை.

- முன்னேற்றத்திற்கு முடிவு கிடையாது. ஒவ்வொரு நாளும் ஒருவன் தான் செய்வதை மேலும் மேலும் சிறப்பாக செய்ய கற்றுக் கொள்ளமுடியும்.

- கோழையால் யாரையும் மன்னிக்க முடியாது. நெஞ்சுறுதி கொண்டவர்களே மன்னிக்கும் மாபெரும் குணத்தை பெற்றிருப்பார்கள்.

கு. ஆரணி
தரம் 08,
யா/வடமராட்சி மத்திய
மகளிர் கல்லூரி

அம்பிகாபதி
Ambihapathy Fancy Goods
கவறிங் கோல்ட் நகைகள், மேக்கப் செற், பரதநாட்டிய செற், சாறி போடர், லேஸ், நூல் வகைகளை பெற்றுக்கொள்ள
55, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

சித்திவிநாயகர் பான்சி
Sithyvinayakar Fancy
இல 3, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
அழகு சாதனப் பொருட்கள் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் யாவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Chiva Mahall
Fancy House
சிவமகால் பான்சி கவுஸ்
பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை.
Main Street, Maruthady Point Pedro.

ஶ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசரீஸ்
Srikanth Essence & Groceries
Dealers in all Kinds of Essence Liquids, Colour, powder scent & Oint ment ETC
161, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
161, K.K.S.Road, Jaffna.

கணேஸ்
GANESH
METTAL WORKS
உலோக வேலை நிலையம்
T.P:-021 222 8620
344,கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்.
344, K.K.S. Road, Jaffna.

COLOMBO ESSENCE HOUSE
Dealers Essence, Perfumes, Cake Ingredients Bakery Products and Cosmetics Products
123, Grand Bazaar, (Power House Road) JAFFNA. Tel: 021-2228463

சரஸ்வதி விலாஸ்
70, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (பெரியகடை)

கமலா புத்தகசாலை
Kamala Book Depot
Dealers In
Books Stationeries & Fancy Goods

சித்திவிநாயகர் ஸ்ரேசனறிஸ்
இல. 16, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

A.M.T.C
ஏகாம்பரம் மல்டிரேட் சென்ரர்
மொத்த சில்லறை விற்பனை நிலையம்
997, Point Pedro Road, Kalviyankadu, Nallur.
997,பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு,நல்லூர்.
T.P:0779179852

## சென். அன்ரனீஸ் ரேடர்ஸ்

இல.209,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## அம்பிகை களஞ்சியம்

894(110) மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்

## New Kaujeepan Nakaimadam

*MANUFACTURERS OF GOLD JEWELS*

K.K.S.Road,
Innuvil.

## P. Net Browsing Centre & Communication

## ஏசியன் தளபாட விற்பனை நிலையம்

இல:133 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

T.P:-021 222 7968

## காயா ரேடர்ஸ்

இல.245,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## அலை அரசி

மீன்பிடி உபகரணங்கள் விற்பனை நிலையம்

133/9,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## பாலன் விற்பனை நிலையம்

பெயின்ற் விற்பனையாளர்

பிரதான வீதி
பருத்தித்துறை வீதி

## க.செல்வப்பா சற்குணம் லெதர் வேக்ஸ்


03. ஜிம்மா மொஸ்க் லேன்,
யாழ்ப்பாணம்

## ஏகாம்பரம் புடவை மாளிகை

*Whole Sale &*
*Retail Dealers in Textiles*

72(9) பெரியகடை
யாழ்ப்பாணம்

*கட்டடத் திறப்பு விழா மலர் சிறக்க வாழ்த்துவோர்.*

*கட்டடத் திறப்பு விழா மலர் சிறக்க வாழ்த்துவோர்.*




*கட்டடத் திறப்பு விழா மலர் சிறக்க வாழ்த்துவோர்.*



புதிய நிலா
புதுப் பொலிவுடன்
புகழாரம் பெற வாழ்த்துகின்றோம்

CAXTON
Printers



ஸ்கிறீன் பிறிண்டிங்
துணிப்பிறிண்டிங்
ரி.சேட், ரை,பெனர்,கொடி மற்றும்
அனைத்து துணிப் பிறிண்டிங் தேவைகளுக்கும்.

டிஜிட்டல் பெயர் பலகைகள், ஸ்ரிக்கர்
மற்றும் ஆட்டல் வேலைகள்.

ஓப் செற் பிறிண்டிங்
கிறபிக் டிசைனிங் வேலைகள்.

கக்ஸ்ரொன் பிறிண்டேர்ஸ்.
பருத்தித்துறை வீதி,
3ம் கட்டை கல்வியங்காடு.

இச் சிறப்புமலர் புதிய நிலா வெளியீட்டுக்கழகத்தினால்
20.09.2009 அன்று கக்ஸ்ரொன் பிறிண்டேர்ஸ்
நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.